விலை : 20.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 09 திங்கட்கிழமை (25.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 280

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## இடைக்கால அறிக்கையால் ஏமாற்றம்

# தொடர்ந்து போராடுவதை தவிர வேறு வழியில்லை -முதலமைச்சர்



(யாழ்ப்பாணம்) இடைக்கால அறிக்கை தமிழர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துவதாகவே குறித்த அறிக்கை உள்ளது. 70 வருடங்களாக எதை புறக்கணித்துப் போராடினோமோ அதை வலியுறுத்துவதாகவே அறிக்கை அமைந்துள்ளது. எனவே அரைகுறை தீர்வு ஒருபோதும் நோய்க்கு மருந்தாகாது. எனவே தொடர்ந்து போராட வேண்டிய நிர்ப்பந்தத்தையே இந்த இடைக்கால அறிக்கை எமக்கு தந்துள்ளது என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (23-ம் பக்.)

### மக்கள் கருத்துக் களம்

அன்பு வாசகர்களே!
இடைக்கால வரைபு தொடர்பில் உங்கள் கருத்துக்களை முன்வையுங்கள். உங்கள் கருத்துக்களை அனுப்ப...

வைபர் செயலி : 076 636 3378
தொலைபேசி : 021 567 1530
மின்னஞ்சல் : valampurii@yahoo.com

## புதிய அரசியல் அமைப்பை தோற்கடிக்க வேண்டும் - விமல்



24

## ஆழ்கடலில் மாரடைப்பு மீனவர் உயிரிழப்பு


(யாழ்ப்பாணம்)
ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்றபோது மாரடைப்பு ஏற்பட்டதில் மீனவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

குருநகர் தொடர்மாடி 02

## பௌத்தத்துக்கு முன்னுரிமை தமிழ்க் கட்சிகள் இணக்கம்

### பிரதமர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு)
வரலாற்றில் முதல் தடவையாக தமிழ்க் கட்சிகள் ஒரே தேசத்தை உருவாக்குவதற்கும் பௌத்த மதத்திற்கு முதலிடம் வழங்குவதற்கும் உடன்பட்டிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



காலியில் பொலிஸ் 23

## வழங்கும் அதிகாரத்தை எடுக்கவும் புதிய யாப்பில் ஏற்பாடு உண்டு

### ஜயம்பதி விக்கிரமரட்ண விளக்கம்

(கொழும்பு)
அரசியலமைப்பினூடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரப் பகிர்வினால், பிரிவினைவாதம் உருவாக மாட்டாது எனவும், அவ்வாறு உருவாகும் பட்சத்தில் அந்த அதிகாரத்தை திருப்பி எடுத்துக் கொள்வதற்கு அரசியல் யாப்பில் சரத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அரசியலமைப்பு நிபுணரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார். 24



## நாயகராவில் ஜனாதிபதி



23

## இடைக்கால அறிக்கை: கருமங்களை நிதானமாக முன்னெடுப்போம்

- இரா.சம்பந்தன்

(கல்முனை)
தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் மாலை வரை நடைபெற்றது. இதன்போது புதிய அரசியல் சாசனம் தொடர்பில் பிரதமரால் கடந்த 21-ம் திகதி நாடாளு 23



## தீர்வைத்தர அரசு மறுத்தால் சர்வதேசத்திடம் நியாயம் கேட்போம்!

### செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

(வவுனியா)
தீர்வைத் அரசு தர மறுக்குமாயின் நாம் அனைவரும் சர்வதேசத்திடம் நியாயத்தை கேட்கின்ற நிலை நிச்சயமாக உருவாகும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் தலைவருமான செல்வம் அடைக் 23



## இடைக்கால வரைபு தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை ஆராய்கிறது

### விரைவில் மக்களைச் சந்திக்கவும் ஏற்பாடு

அண்மையில் வெளியிடப்பட்ட அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தின் இடைக்கால வரைபு தொடர்பில் ஆராய்ந்து கள நிலைமையை விளக்குவதற்கு தமிழ் மக்கள் பேரவை விரைவில் கூடவுள்ளது.

இதற்கு முன்னோடியாக தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் உபகுழு இடைக்கால வரைபை ஆராயும் பணியில் ஈடுபட்டுள்ளதாக் தமிழ் மக்கள் பேரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இடைக்கால வரைபு தொடர்பில் ஆராய்ந்து அவற்றில் இருக்கக்கூடிய விடயங்களை மக்களுக்கு தெளிவுபடுத்தும் அதே நேரம் அதற்கு முன்னோடியாக பொது அமைப்புகளைக்கூட்டி நிலைமையை விளக்குவதற்கான ஏற்பாடுகள் நடப்பதாகவும் பேரவை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (மு)

## இலங்கையின் தொடர் தோல்வி; சூதாட்டம் காரணமா?

### விசாரணையை ஆரம்பித்தது ஐ.சி.சி



23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இடைக்கால அறிக்கை...

செயலாளர் கி.துரைராஜசிங்கம் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தின் நிறைவின் பின்னர் மாலை 6 மணியளவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

கட்சியின் முக்கியஸ்தர்கள், சிவில் சமூகம் போன்றோரிடமும் இடைக்கால அறிக்கை குறித்துப் பேசி இந்த அரசியல் சாசனம் சம்பந்தமாக உரிய தீர்வுகளை எடுத்து கருமங்களை நிதானமாக முன்னெடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அத்தனையும் நாங்கள் எடுப்போம்.

வேறு பல விடயங்கள் தொடர்பில் எதிர்வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற தீர்மானங்கள், அதனுடைய விளைவுகள், தாக்கங்கள், தேர்தல் நிர்ணய சபையினுடைய கடமைகள் தொடர்பிலும், எவ்விதமாக மாகாண சபைத் தொகுதிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும், அவற்றை எவ்வாறு நாங்கள் அணுக வேண்டும் என்பது தொடர்பிலும் நாம் கலந்துரையாடினோம். இவ்விடயங்கள் தொடர்பிலும் எமது பேச்சுவார்த்தைகள் தொடரும், இவற்றுக்கெல்லாம் மீண்டுமொருமுறை எமது மத்திய செயற்குழு கூடி எடுக்க வேண்டிய தீர்மானங்களையெல்லாம் எடுக்கும்.

எதிர்வருகின்ற மாகாணசபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிடுவது என்பது தொடர்பில் ஏதும் முடிவுகள் எடுக்கப்பட்டதா? என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு.

அவ்விதமான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை, பரிசீலனைகள் எடுக்கப்படும், மக்களிடம் பேசுவோம், எமது கட்சி அங்கத்தவர்களிடமும், ஏனைய பேச வேண்டிய அனைவரிடமும் பேசுவோம், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இந்த விடயம் சம்பந்தமாக பேசும், இறுதியில் மக்களுடைய் நன்மை கருதி எடுக்கவேண்டிய தீர்மானங்களை எடுப்போம் என்றார் சம்பந்தன். (மு)

## ஆழ் கடலில்...

குடியிருப்பில் வசிக்கும் நான்கு பிள்ளைகளின் தந்தையான லிகோரி தர்மதாஸ் (வயது 60) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் உட்பட மூன்று பேர் குருநகர் துறையிலிருந்து நேற்று முன்தினம் நண்பகல் 2 மணியளவில் ஒரு படகில் மீன் பிடிப்பதற்காக 50 கிலோமீற்றர் தூரம் சென்றுள்ளனர்.

பின்னர் நேற்றைய தினம் காலை 8.30 மணியளவில் கரை திரும்பியுள்ளனர். கரைக்கு 10 கிலோமீற்றருக்கு அப்பால். வந்துகொண்டிருக்கும் போது திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு படகிலேயே மயங்கி விழுந்துள்ளார்.

கரை சேர்ந்த பின் அவரை உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலை அவசரசிகிச்சை பிரிவில் சேர்த்த போது, அவரை பரிசோதித்த வைத்தியர் மேற்படி நபர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேற்குறித்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (மு-9)


## வேலை வாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் முன்னணி கணினி நிறுவனத்துக்கு Ms office கணினிப் போதனாசிரியர் (பயிலவிரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது (சி-9739)

தொடர்புகளுக்கு - 0773614572






## கிழவன்காடு கலாமன்றம் யாழ்.கிளை



### புதிய மாணவர்களுக்கான நாள் வகுப்பும் அனுமதியும்

**நடைபெறும் கலை வகுப்புகள்**

அறநெறி பண்ணிசை, சங்கீதம், நடனம், மிருதங்கம், வயலின், சித்திரம், யோகாசனம், தியானம்.

காலம்:-2017.09.30 சனிக்கிழமை (விஜயதசமி)

பி.ப 2.00-3.00 மணிவரை


பதிவாளர்,
கிழவன்காடு கலாமன்றம்,
யாழ்.கிளை
T.P:-0776408512

இல.11, 1-வது கஸ்தூரியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உதயன் பணிமனை அருகில் உள்ள ஒழுங்கை)

(சி-9742)


## மரண அறிவித்தல்

### செல்லையா ஜெயராஜா



நுணாவில் மேற்கினை பிறப்பிடமாகவும் முன்பு 7ஆம் வாய்க்கால் கிளிநொச்சியில் வசித்தவரும், பின்னர் 6 1/1 கணேசபுரம் கிளிநொச்சியில் வசித்து வந்தவருமான செல்லையா ஜெயராசா அவர்கள் 23.09.2017 அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-செல்லம்மா ஆகியோரின் மகனும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் நாகம்மா என்று அழைக்கப்படும் மகேஸ்வரி ஆகியோரின் மருமகனும், தேவஞானியின் கணவரும், ராஜ்மோகன் (கனடா), துளசி (கிளிநொச்சி) ஆகியோரின் தந்தையும், கெங்கேஸ்வரி (கனடா), உதயணன் (கிளிநொச்சி) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற நடராசா, செல்வராசா (பிரான்ஸ்), இராஜேஸ்வரி (கிளிநொச்சி) ஆகியோரின் சகோதரனும், சிவஞானம், வசந்தா (பிரான்ஸ்), ஜெனார்த்தனராஜா (கனடா), காலஞ்சென்ற ஜெனக்குமரராஜா, ஜெனானந்தராஜா (ஆனந்தன்) (கோண்டாவில்), ஜெனபாலராஜா (கனடா), ஜெனராஜராஜன் (கோபால்) (லண்டன்), ஆனந்தினி, வசந்தினி ஆகியோரின் மைத்துனரும், கனகராஜா (கொழும்பு), கணேசலிங்கம் (கிளிநொச்சி) ஆகியோரின் சகலனும், ஹரிணி, ரசிகா, தினோஷ், கனிஷா (கனடா), அதியன் (கிளிநொச்சி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (26.09.2017) நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று திருநகர் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி:- 0772041122

தகவல்:- குடும்பத்தினர்.

(சி-9740)

## அந்தியேட்டி அழைப்பு



கடந்த 26.08.2017 சனிக்கிழமை சிவபதமெய்திய எமது குடும்ப தலைவி

### அமரர் பிள்ளையினார் நாகம்மா

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று 25.09.2017 திங்கட்கிழமை காலை 4.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். அத்தருணம் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து (மூத்தவிநாயகர் திருமண மண்டபத்தில்) நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம். (சி-9741)

மூத்தவிநாயகர் கோவிலடி,
கோணாங்காவில், கரணவாய்.

இங்ஙனம்:-
குடும்பத்தினர்


முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகா சபையின்
நீண்டகாலத் தலைவர்

## M C சுப்பிரமணியம் அவர்களின்

## நூற்றாண்டு விழா அழைப்பு



இடம் : றிம்மர் மண்டபம், யாழ்ப்பாணம்
காலம் : 27.09.2017 பி.ப 2.00 மணி

சமத்துவ வாழ்வின் மலர்வுக்கான எழுச்சிக் குரல்
அடக்குமுறைக்கும் அடங்கு முறைக்கும் எதிரான மறத்தமிழன்
M C சுப்பிரமணியம் அவர்களின்
நூற்றாண்டு விழாவில் அனைவரும் ஒன்றிணைவோம்

(679)

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகா சபை

# தியாக தீபம் திலீபனின் நினைவாக யாழில் இரத்ததானம்



தாயக மக்களின் விடுதலைக்காக இந்திய அரசிடம் ஐந்தம்ச கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிரிழந்த தியாக தீபம் திலீபனின் 30 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு நேற்று யாழ்.இந்துக்கல்லூரி மாணவர்கள் இரத்ததான நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். இந்த இரத்ததான நிகழ்வில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியிருந்தனர். தியாக தீபம் லெப்டினன் கேணல் திலீபன் (இராசையா பார்த்தீபன் ) யாழ்:இந்துக்கல்லூரியின் மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-சாளின், சோபிகா)

## இளம் காதலர்கள் 304 பேர் கைது!

அநுராதபுரத்தில் பொலிஸாரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது இளம் காதலர்கள் 304 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்நகரத்தில் அமைந்துள்ள ரிவர்பார்க், நேச்சர்பார்க் ஆகிய இடங்களிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் பிரத்தியேக வகுப்புக்குச் செல்வதாக பெற்றோரிடம் பொய் கூறிவிட்டு இந்த இடங்களுக்குச் சென்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இளம் காதலர்கள் அனைவரையும் இரண்டு பேருந்துகளில் பொலிஸார் அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு கடும் எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விசேட சோதனை நடவடிக்கைகளுக்காக பொலிஸ் அதிகாரிகள் 45 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (இ-3)

### இன்றைய காலநிலை

**கடும் காற்றுடன் மழை பெய்யலாம்**

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இன்று கடும் காற்றுடன் மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## நல்லாட்சியால் நாடு அழியும்!

### ஆனந்த தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

நல்லாட்சி என்று சொல்லும் இந்த அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைக் கவனியாது விட்டால் நாடும் பௌத்த சாசனமும் அழிந்து விடும் என தாயகத்தைக் காக்கும் தேசிய இயக்கத்தின் தலைவர் முருத்தொட்டுவாவே ஆனந்த தேரர் எச்சரித்துள்ளார்.

மக்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு அரசாங்கம் தனக்குத் தேவையானதைச் செய்து வருவதாகவும் தேரர் குற்றம்சாட்டியுள்ளார்.

அரசாங்கம் சொல்வது ஒன்று எனவும் செய்வது வேறொன்று எனவும் தேரர் சுட்டிக்காட்டியுள்ளார். நாரஹேன்பிட்டிய வில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

## தாய் மடியில் மரணித்த சிசு!

### நுரையீரலில் கிருமி

மெதிரிகிரிய - அம்பகஸ்வேவ பிரதேசத்தில் தாய் மடியில் உறங்கிக்கொண்டிருந்த போது இறந்த கைக்குழந்தையின் பிரேத பரிசோதனை நேற்று இடம் பெற்றது.

சில தினங்களுக்கு முன்னர் குழந்தையின் நுரையீரலில் கிருமித்தொற்று ஏற்பட்டுள்ள நிலையிலேயே இக்குழந்தை மரணித்ததாக கண்டறியப்பட்டுள்ளது.

உயிரிழந்த குழந்தையின் உடலில் இருந்து பெறப்பட்ட சில மாதிரிகளை அரச இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்த சட்ட வைத்திய அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார். (இ-3)

## நாட்டின் வளங்கள் மீது மகிந்த அதிக அக்கறை

### வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு கொடுக்கக் கூடாதாம்




நீண்டகால அடிப்படையில் இலங்கையின் வளங்களை வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு வழங்குவதன் மூலம் நாட்டின் எதிர்கால தலைமுறையினர் பெரும் நெருக்கடிக்கு உள்ளாவதாக முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். தங்காலை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நவீன கால தேவைகளுக்கு அமைய நாட்டின் வளங்கள் பாதுகாக்கப்பட்டு எதிர்கால தலைமுறையினரிடம் கையளிக்கப்பட வேண்டும் என மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-3)

## வடக்கு-கிழக்கு மாகாணங்களில் விளையாட்டுத்துறையில் மறுமலர்ச்சி

### பிரதமர் ரணில் சுட்டிக்காட்டு



வடக்கு-கிழக்கு மாகாணங்களில் விளையாட்டுத்துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாத்துறை கொட்டவில விளையாட்டரங்களில் நேற்று முன்தினம் பிற்பகல் ஆரம்பமான 43 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விளையாட்டை வலுப்படுத்துவதன் மூலம் நாட்டின் தனித்துவ அடையாளத்தை கட்டியெழுப்ப முடியும் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

விளையாட்டுக்கு இன, மத பேதங்கள் கிடையாது. இலங்கையில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக அரச மட்டத்தில் உயர்ந்தபட்ச ஒத்துழைப்பு வழங்கப்படும்.

நாடு முழுவதும் விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-3)



யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் நூல் வெளியீட்டு விழாவும் நேற்றுக் காலை 9.30 மணியளவில் கோண்டாவிலிலுள்ள பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் காரியாலயத்தில் சங்கத்தின் தலைவர் செ.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகனும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கூட்டுறவு ஆணையாளரும் பதிவாளருமாகிய க.சிவகரன், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் [illegible] எஸ்.முரளிதரன், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கனேஸ்வரன் மற்றும் யாழ்.மாவட்ட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் திருமதி இன்[illegible] ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)

# மரண அறிவித்தல்



## வல்லிபுரம் சிவயோகநாதன்

**(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - வீடமைப்புத் திணைக்களம், சமாதான நீதவான்)**

யாழ்ப்பாணம் சங்கானையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சிவயோகநாதன் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - வீடமைப்புத் திணைக்களம், சமாதான நீதவான்) நேற்று (24.09.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற நாகலிங்கம் - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் நோனாம்பிகையின் அன்புக் கணவரும் ஜானகி (துறைத் தலைவி - நிதியியலும் கணக்கியலும் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் - வவுனியா வளாகம் - யாழ்.பல்கலைக்கழகம்), வாசுகி (BSE - கனடா), கலாநிதி முகுந்தன் (பொறியியலாளர் - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாமுவேல் தேவரூபன் (வர்த்தகர் - வவுனியா), கருணபாலன் (Cornputer Programmer - கனடா), கோமதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெகப்பிரகாஷன் (மாணவன் - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), ஜெகப்பிரியா (மாணவி - வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), யுவானி (கனடா), வாமணன், யாதவன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் கமலநாதன் (ஓய்வுபெற்ற அதிகாரி - கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம், புல்மோட்டை), கணேசநாதன் (லண்டன்), சண்முகநாதமுதலி (ஓய்வுபெற்ற முகாமையாளர் - மக்கள் வங்கி), ஸ்ரீபத்மநாதன் (லண்டன்), நல்லைநாதன் (லண்டன்) மற்றும் மகேந்திரன் (சுவிஸ்), இரத்னமலர் (வவுனியா), காலஞ்சென்ற சுப்பிரமணியம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மற்றும் றஞ்சியின் வளர்ப்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (25.09.2017) திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"நாகலிங்க வாசா"**
**மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

(681)

# வடக்கு- கிழக்கிற்கு சமச்சீரற்ற அதிகாரம் வழங்கப்பட வேண்டும்

## டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து



தற்போது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் திருத்த யாப்பில் நாம் வலியுறுத்தி வந்ததன் பிரகாரம் சிறுபான்மையின மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நாடாளுமன்றத்திற்கு மேலாக மேல் சபை என்ற ஒரு சபையும் உருவாக்கப்படுவதற்கான பரிந்துரை ஏற்கப்பட்டுள்ளது. இதில் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதித்துவம் 50 இற்கு 50 என்றவாறு அமையப்பெற வேண்டும் என நாம் வலியுறுத்தியுள்ளோம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று தேசிய நீர்ப்பாசன வடிகாலமைப்பு சபையின் ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர்கள் தமது நிரந்தர நியமனம் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த ஊழியர்களது பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தறிந்து கொண்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தற்போது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே அதிகளவு பிரதிநிதித்துவம் செய்து வரும் நிலையில் உருவாக்கப்படவுள்ள மேல் சபையிலும் அதேவிதமாக அமையுமாக இருந்தால் அச்சபையின் உருவாக்கலுக்கான நோக்கம் அர்த்தமற்றதொன்றாகிவிடும். அந்தவகையில் குறித்த மேல் சபையில் சிறுபான்மையின மக்களுக்கும் சரி பாதி உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

மேலும் பொலிஸ் மற்றும் முப்படையில் இன விகிதாசாரம் பேணப்பட வேண்டும். வடக்கு-கிழக்கிலுள்ள மக்களின் பிரச்சினை நாட்டின் ஏனைய மாகாணங்களில் இருக்கின்ற மக்களின் பிரச்சினையை விட வேறுபட்ட வகையில் இருப்பதால் இதை சீர்செய்வதற்கு சமச்சீரற்ற அதிகாரம் வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளதுடன் பெண்களுக்கு சம உரிமையான அரசியல் பங்களிப்புகள் வழங்கப்படவேண்டும். மதச்சார்பற்ற நாடாக இலங்கை இருக்க வேண்டும் உள்ளிட்ட பல விடயங்களை நாம் வலியு றுத்தியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது கட்சியின் யாழ்.மாவட்ட நிர்வாகச் செயலாளர் கா.வேலும்மயிலும் குகேந்திரன் உடனிருந்தார். (இ-3)

# ஈரப் பலாக்காய் பறித்தவர் பலி!

(கொழும்பு)

வென்னப்புவ பகுதியில் இரும்பு கம்பியைப் பயன்படுத்தி ஈரப் பலாக்காய் பறிக்க முற்பட்ட ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.


நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவர் இரும்புக் கம்பியால் ஈரப் பலாக்காய் பறிக்க முற்பட்ட போது, குறித்த கம்பி, அருகில் இருந்த அதிஉயர் மின் கம்பத்தில் மோதியுள்ளது.

இதனால், மின்சாரம் தாக்கி ஆபத்தான நிலையில் கிடந்த அவர், நீர்கொழும்பு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, பலியாகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-3)

# கூரிய வாளுடன் இளைஞன் கைது



கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறிஞ்சாங் கேணி பகுதியில் கூரிய வாளொன்றை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளாரென, பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவின்ருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து. இளைஞனை விசாரணை செய்த போது அவரிடம் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கூரிய வாளொன்று கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த சதக்கத்துல்லாஹ் முகம்மது றினாஸ் (25 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)


# வலம்புரி-சங்குநாதம் செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

## வடமாகாணத்தில்

- யாழ்ப்பாணம்
- முல்லைத்தீவு
- கிளிநொச்சி
- மன்னார்
- வவுனியா

ஆகிய மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு பிரதேசங்கள் மற்றும் ஊர்களுக்கான செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தின் மூலைமுடுக்குகளில் உள்ள அத்தனை பிரச்சினைக ளையும் வெளிக்கொண்டு வந்து தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முக்கிய தகவல்கள்ள வெளிப்படுத்தல் என்ற நோக்கில் வட பிராந்தியம் முழுமைக்கும் செய்தியாளர்களை இணைக்கும் இத்திட்டத்தில்,

ஆர்வம், எழுத்தாற்றல், சமூக நோக்குள்ள -நேர்மையுடன் பணியாற்றக் கூடிய இருபாலாரும் இச் செய்தியாளர் பதவிக்கு விண் ணப்பிக்க முடியும்.

முழுப்பெயர், தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ,அ.இல. தொலை பேசி இல, மின்னஞ்சல், விவாக நிலைமை, கல்வித் தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் தங்களைக் கேட்டறியக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசம் உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

**பிரதம ஆசிரியர்**
**வலம்புரி**
**இல.3,2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண்வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு 30.09.2017 இற்கு முன்னர் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

**பிரதம ஆசிரியர் , வலம்புரி.**


# இராசி பலன்

25.09.2017

(புரட்டாதி 09, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

பஞ்சமி பிற்பகல் 2.41 மணிவரை

அனுசம் முழுவதும்

சுபநேரம் 12.02-1.32 மணிவரை

இராகுகாலம் 7.32-9.02 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பரணி | | ராகு |
| கேது | | | செவ், சுக் |
| | சனி, சந் | குரு | சூரி புத |

**மேடம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், கொடுக்கல் வாங்கல்களின் கவனம் தேவை.

**இடபம்:** மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.

**மிதுனம்:** தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கி கொள்ள முற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புகளைக் காணும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுய முயற்சிகள் மூலம் சுகம் காண வேண்டிய நாள்.

**துலாம்:** விரும்பிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும், பதவிகளும் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்த கொள்வர், விரும்பிய காரியம் விரும்பிய படியே கை கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பக்குவமாய் பேசி காரியம் சாதிப்பீர்கள், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**மகரம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், மற்றவர்களால் ஏற்றம் பெறுவீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும், ஆதரவும் கிடைக்கும், கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.

**மீனம்:** தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள்.



ஈழத்து சீரடி சாய் என அழைக்கப்படும் நல்லூர் நாவலர் வீதி மடத்தார்பதி ஷிர்டி சாயி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# உலக மருந்தாளர் தினம் இன்று

இவ்வாண்டு செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி (இன்று) திங்கட்கிழமை உலகம் பூராகவும் உள்ள மருந்தியலாளர்கள் உலக மருந்தாளர் தினத்தை கொண்டாடுகின்றனர்.

இந்த விசேட தினம் இவ்வாண்டு ஏழாவது வருடாமாக சர்வதேச மருந்தக கூட்டமைப்பால் (FIP) INTERNATIONAL PHARMACEUTIAL FEDARATINO கொண்டாடப்படுகின்றது. 1912ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சர்வதேச மருந்தக கூட்டமைப்பானது (FIP) தற்போது உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) உத்தியோக பூர்வமான கூட்டமைப்பாக 132 அங்கத்துவ அமைப்புக்களுடன் 3 கோடி நிபுணத்துவம் வாய்ந்த மருந்தியலாளர்கள், மருந்தக விஞ்ஞானிகள் போன்றோரை பிரதிநிதிப்படுத்தும் ஒரு சர்வதேச அமைப்பாகும்.

2009ஆம் ஆண்டு துருக்கி நாட்டின் தலைநகரமான இஸ்தான்புல்லில் (ISTANBUL) சர்வதேச மருந்துக் கூட்டமைப்பால் (FIP) ஒழுங்கு செய்யப்பட்ட சபைக் கூட்டத்தில் துருக்கிய மருந்தாளர் அமைப்பினால் ஒரு பிரேரணையாக உலக மருந்தாளர் தினம் பரிந்துரைக்கப்பட்டது. மேற்படி சபையில் கொண்டு வரப்பட்ட பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் செப்டெம்பர் 25 ஐ உலக மருந்தாளர் தினமாக கொண்டாட தீர்மானிக்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டிலிருந்து சர்வ்தேச மருந்துக் கூட்டமைப்பினால் உலக மருந்தாளர் தினச் செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டதுடன் அவதானிக்கப்பட்டும் வருகின்றன. உலக மருந்தாளர் தினத்தை கொண்டாடும் நோக்கமானது-மருந்தியலாளர்களின் செயற்பாடுகளை ஆதரிப்பதுடன் மருந்தியலாளருடைய பங்களிப்பை உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும் செயற்படுத்தி உலக சுகாதாரத்தின் அபிவிருத்தியை மேம்பட செய்வதாகும்.

இந்தவருடத்திற்குரிய உலக மருந்தாளர் தின செயற்றிட்டத்திற்கான தொனிப்பொருள் (THEME )சர்வதேச மருந்து கூட்டமைப்பினால் உருவாக்கப்பட்டுள்ளது. FROM RESARCH TO HEALTH CARE: YOUR PHARMACIST IS AT YOUR SERVICE அதாவது ஆராய்ச்சியிலிருந்து சுகாதார பராமரிப்பு வரை: உங்கள்மருந்தாளர் உங்கள் சேவையில் என்பதாகும்.

இத் தொனிப்பொருளானது, மருந்தாளர்களை முன்னிலைப்படுத்துவதுடன் அவர்களின் மூலம் ஆரோக்கியத்திற்கு முன்னேற்றகரமான தாக்கத்தை (impact) ஏற்படுத்தக் கூடியவைகளான கருத்துக்களை கொண்டவைகளாக அமைந்து இருக்கும். மருந்தாளர்களால் வழங்கப்படும் பல தரப்பட்ட சுகாதார பராமரிப்பு சம்பந்தமான பங்களிப்புக்களை பிரதிபலிக்கும் விதமாக இவ்வருட தொனிப்பொருள் அமைந்துள்ளது.

மேலும் இத்தினமானது மருந்துத் தொழிலின் முக்கியத்துவம் அனைத்து மக்களின் சுகாதார மேன்மைக்காக அவர்களால் வழங்கக்கூடிய அழுத்தம் என்பவற்றை சுட்டிக்காட்டுவதாக அமைகிறது.


கடந்த மூன்று வருடங்களாக வட இலங்கை மருந்தியலாளர் சங்கம் அஸ்ரன் (Astron) மருந்துகள் உற்பத்தி நிறுவனத்துடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் உலக மருந்தாளர் தினத்தை வெகு சிறப்பாக கொண்டாடிவருகின்றது. இவ்வருடமும் செப்டெம்பர் 25 ஆம் திகதி திங்கட்கிழமை இந்த நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது.

இவ்வகையான நிகழ்ச்சிகளில் பங்கேற்பதன் மூலம் மருந்தாளர்கள், மருந்தகங்களில் பணிபுரிவோர் அனைவரும் தமது தொழில் சார்ந்த புதிய விடயங்களை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக இருக்கும்.

இதன் காரணமாக அனைவரும் புத்துணர்ச்சி பெற்று புது உத்வேகத்துடன் சிறந்த சுகாதார சேவையினை மருந்தகங்கள் ஊடாக வழங்க வழிவகை செய்யப்படுகிறது.

உலக சுகாதாரத்தை மேம்படுத்தி அனைவரும் சுகதேகிகளாக இவ்வுலகில் வாழ எமது மருந்தியலாளர்களின் அளப்பரி பங்களிப்பை மற்றைய நிறுவனங்களுக்கும் வேறு தொழில் சார்ந்தவர்களுக்கும் பொதுமக்களுக்கும் உலக மருந்தாளர்கள் தினத்தை ஊடகமாகப் பயன்படுத்தலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

ஆர்.குமாரதாசன்
ஓய்வு பெற்ற பிராந்திய மருந்தியலாளர்,
முன்னாள் தலைவர், வட இலங்கைமருந்தியலாளர்சங்கம்.



யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, வட்டுக்கோட்டை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச வைத்தியசாலைகளில் அமைக்கப்பட்ட வெளிநோயாளர் பிரிவுக்கான கட்டடத்தை திறந்து வைத்தார். இந் நிகழ்வுகளில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.கேதீஸ்வரன், எச்.ஐ.வி., காசநோய், மலேரியாவுக்கு எதிரான குளோபல் பண்ட் நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் டி. சொய்சா, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராய்ச்சி, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:- உ.சாளின்)



தேசிய விபத்து தடுப்பு வாரத்தின் இறுதி நாள் நிகழ்வு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. பிரதேச செயலர் திருமதி பாபு தேவந்தினி தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்தியர் சிவகணேசன் கலந்து கொண்டு விபத்து தொடர்பான ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-மகாலிங்கம்)

# கிறிஸ்தவக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் ச.வேலழகன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வியமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் கலந்து கொள்வார். (இ-10-136)



வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலையில் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் மற்றும் நுழைவாயில் திறப்பு விழா என்பன கடந்த 22 ஆம் திகதி பாடசாலை அதிபர் எஸ். சிறிரங்கேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் கலந்து கொண்டார். (படங்கள்:-பொற்பதி செய்தியாளர்)

# 158.5 மில்லியன் டொலர் செலவில் ரஷ்ய கப்பலை வாங்குகிறது இலங்கை



(கொழும்பு)

ரஷ்யாவிடமிருந்து இலங்கைக் கடற்படைக்காக 158.5 மில்லியன் டொலர் பெறுமதியான ஜிபார்ட் 5.1 (Gepard 5.1) ரகத்தைச் சேர்ந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பல் ஒன்று கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இந்தக் கொள்வனவு தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு ரஷ்யா வழங்கிய 300 மில்லியன் டொலர் கடன் திட்டத்தின் கீழ் இந்த போர்க்கப்பல் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இந்தக் கடன் திட்டத்தில் 165 மில்லியன் டொலர் பயன்படுத்தப்பட்டு விட்ட நிலையில் 2015 வரை பயன்படுத்தப்படாதிருந்த 136 மில்லியன் டொலர் கடன் திட்டம் காலாவதியாகி விட்டது என்று ஜனாதிபதி அமைச்சரவையில் தெரிவித்திருந்தார்.

எனினும் 135 மில்லியன் டொலர் கடன் திட்டத்துக்கான கால எல்லையை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்க ரஷ்யா விரும்பம் தெரிவித்துள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் அரச இராணுவ உற்பத்தி ஏற்றுமதியாளரான Rosoboron export நிறுவனத்திடம் இருந்து ஜிபார்ட் போர்க்கப்பலை வாங்குவதற்கு இலங்கை திட்டமிட்டுள்ளது. இந்தக் கப்பலில் படையினருக்குப் பயிற்சி அளிப்பதற்கு மேலதிகமாக 7 மில்லியன் டொலரை இலங்கை செலவிட நேரிடும்.

இதுபோன்றதொரு போர்க்கப்பல் தேவை என்று இலங்கைக் கடற்படை கோரியிருந்தது. இதனைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்கன்வே பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்தப் போர்க்கப்பலில் பொருத்தப்படும் ஆயுதங்கள் மற்றும் தளபாடங்களை உள்ளடக்கியதாக கப்பலுக்கான மொத்த செலவு 158.5 மில்லியன் டொலராகும். இதில் 135 மில்லியன் டொலர் ரஷ்ய கடனுதவியுடன் இலங்கை அரசாங்கத்தின் 15 வீத பங்களிப்பும் இருக்கும்.

ரஷ்யாவிடம் பெறப்படும் கடனை ஐந்து ஆண்டு விலக்குடன் 10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-3)


**யாரிடம் பேசுவது?**

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவுனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)



**CERTIFICATE IN PHARMACY**

மருந்தகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் *(Pharmacy Staff)* மருத்துவ பிரதிநிதிகளுக்குமான *(Medical Representatives)* ஆறு மாத கால பயிற்சி நெறி *October 2017* தொடக்கம் *March 2018* வரை யாழ்ப்பாணக் கல்லூரி ( வெளிவாரிப் பட்டப்படிப்பு) 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான குறைந்த பட்ச தகைமை *GCE O/L* இல் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருக்க வேண்டும். வயது எல்லை இல்லை. மாதாந்தம் பயிற்சிக் கட்டணம் - ரூபா 2000/=


நேரடியாக 04.10.2017 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு சமூகமளித்து மேற்படி பயிற்சிக்கான பதிவுகளை மேற் கொள்ளலாம். (659)

தகவல்களுக்கு : மருந்தியலாளர் கல்வி இணைப்பாளர்
T.P: 077 625 6292



**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

25.09.2017


**ஸ்ரீ தொண்டுநாத சுவாமிகள்**

சின்ன வயதிலே துறவியாகினாய்
சுயநலம் தன்னை மறந்த பிரமியாகினாய்
ஏழை மக்களின் வாழ்விற்கே மழையாகினாய்
உன் வருகை பார்த்து ஏங்கித்
தவம் கிடக்குது வன்னி மண்.

பூவாக பணி வாசம் வீச வேராகினாய்
விளம்பரமோ ஆடம்பரமோ விரும்பாத
மாணிக்கமாகினாய்...
எளிமையின் வடிவே சுவாமி என்று
பரம்பொருளாகினாய்...

உன்னைப்போல் ஒரு பிள்ளை
வருமா? எங்கள் மண்ணுக்கு
உன் போல் சுவாமி கிடைக்குமா?
எங்கள் சமயத்திற்கு

உயர்வான உன் உதவிகளால்
சாதல் என்பது மண்ணுலகில்
இல்லை உனக்கு
இன்னும் பல்லாண்டு காலம் இறை
ஆசியோடு
வாழ வாழ்த்துகிறேன்...

Best Wishes

என்றும் அன்புடன்
து.சுதர்சன்
புதுக்குடியிருப்பு.



**Online Trading**

கையடக்கத் தொலைபேசியில் பங்குவர்த்தகம்

நீங்கள் எங்கிருந்தும் கொண்டும் Mobile ஊடாக பங்குவர்த்தகத்தில் இணைந்து கொள்ளும் வாய்ப்பினை தவறவிடாதீர்கள்.

கருத்தரங்கு
@ 4 PM on 27/09/2017
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ்கிளை
147-2/3, K.K.S Road.
Info - 0212221455/0777822014

CSE COLOMBO STOCK EXCHANGE



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம் பூரம்செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: 10ஆம் தரம்/ சொந்ததொழில்<br>தொ.இ: B/7100 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 23 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/Lஎதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4993 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 11செவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:HNDA,BBA/ அரசதொழில்<br>தொ.இ: B/3435 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 26<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/Lஎதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4579 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 44செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: B/3443 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 65 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HDESEng<br>தொ.இ: G/4582 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 8<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: B/3455 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 32 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BCA/தனியார் தொழில் இந்தியாஎதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4588 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



**PHARMACIST'S (EXTERNAL) EXAMINATION**

***CONDUCTED BY CEYLON MEDICAL COUNCIL, MEDICAL FACULTY, UNIVERSITY OF COLOMBO.***

இந்த வருடத்திற்கான மேற்படி பரீட்சை 14.10.2017ஆம் திகதி நடைபெற இருக்கிறது. இதற்கான பயிற்சி வகுப்புகள் தற்போது *Jaffna College, (Under Graduate Dept) 464, Hospital Road, Jaffna* இல் நடைபெற்று வருகிறது. 2018/2019 ஆம் ஆண்டு பரீட்சைக்கான புதிய பயிற்சி வகுப்புகள் October மாதம் முதல் நடைபெற உள்ளது. பயிலுநர் மருந்தியலாளராக Srilanka Medical Council இல் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை தற்போது பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பரீட்சைக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதிகள் GCE O/L இல் ஆங்கிலப் பாடத்தில் சாதாரண சித்தி, GCE A/Lஇல் Chemistry பாடத்துடன் மேலதிகமாக இரண்டு விஞ்ஞான பாடங்களில் சாதாரண சித்தி பெற்று இருக்க வேண்டும். இந்த பரீட்சைக்கு பதிவு செய்ய வயது எல்லை இல்லை.

மாதாந்த பயிற்சி கட்டணம் ரூபா 2000/= (659)

தகவல்களுக்கு : மருந்தியலாளர் கல்வி இணைப்பாளர்
T.P: 077 625 6292

# தமிழர்களுக்கு சிறந்த அரசியல் தலைமை இல்லாத சூழல் காணப்படுகின்றது

## ஈழ மக்கள் ஜனநாயக கட்சி செயலாளர் சுட்டிக்காட்டு



(குருமன்காடு)

தமிழர்களுக்கு சிறந்த அரசியல் தலைமை இல்லாத சூழல் காணப்படுகின்றது என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

இதன் போது மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சியின் செயற்பாட்டை முன்னெப்போதும் இல்லாதவாறு பல மாற்றங்களுடனும் முன்னேற்பாட்டுடனும் செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

மக்கள் எதிர் கொள்கின்ற பலவக்கையான பிரச்சினைகளுக்கு பொருத்தமான தீர்வை காண்பதற்கான அரசியல் தலைமை இல்லாத நிலைமையை இந்த அரசியல் சூழல் ஏற்படுத்தியுள்ளது.

மேலும் எம் கட்சி சார்பாகவும், எம்மக்கள் சார்பாகவும் இணைந்த வடகிழக்கின் மத்தியில் கூட்டாட்சி மாகாணத்தில் சுயாட்சி என்ற கோட்பாட்டிற்கு அமைவாக மதசார்பற்ற அரசாகவும், 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். இதனால் இனங்களுக்கிடையே புரிந்துணர்வு வரும் போது கட்டம் கட்டமாக முன்னோக்கி செல்ல முடியும் என்ற கோரிக்கைகளை ஆரம்ப காலம் தொட்டு முன்வைத்திருந்தோம்.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் திருத்த யாப்பானது 13ஆவது திருத்த சட்டத்தை விட முன்னேற்றகரமாக இருக்குமானால் அதனை ஆதரிக்க தயாராக இருப்பதாக கூறியே இக் கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். ஏனெனில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை சமூகம் பிரதி நிதிப்படுத்துவது போல் மேல் சபையிலும் பிரதிநிதிப்படுத்தப்படுமாயின் அச்சபைக்குரிய அர்த்தம் இருக்காது. அத்துடன் பொலிஸ், முப்படையில் இன விகிதாசாரம் கடைப்பிடிக்கப்பட வேண்டும், சமச்சீரற்ற அதிகாரம் அதாவது வடக்கு கிழக்கில் உள்ள மக்களின் பிரச்சினை நாட்டின் ஏனைய மாகாணங்களில் இருக்கின்ற மக்களின் பிரச்சினையை விட வேறுபட்ட வகையில் இருப்பதால் இதை செயற்படுத்த வேண்டும், பெண்களுக்கு சரிபாதி அரசியல் உரிமை கொடுக்கப்பட வேண்டும் என்ற பல கருத்துக்களை எமது கட்சி சார்பாக முன்வைத்துள்ளோம்.

இன்று சிறந்த மாகாண சபையை காணமுடியாதுள்ளது. பிரேரணைகளை நிறை வேற்றுவதாக மாகாணசபை உள்ளதே தவிர அதனை நடைமுறைப்படுத்துவதாக இல்லை. சீனி என எழுதி வைத்தால் போதாது. அதனை கொடுக்க வேண்டும் அல்லது வாயில் போட வேண்டும். அப்போதுதான் சீனி பயனுள்ளதாக இருக்கும். மாகாணசபையை எம்மிடம் தந்தால் 3 தொடக்கம் 5 வருடத்தில் பாலும் தேனும் ஓடவைப்பேன்எனகூறினேன். அது நடை பெற வில்லை. ஆனால் இன்று எதனையும் பெறமுடியாதுள்ளது.

அரசிடம் இருந்து உதவியை பெறவேண்டுமாக இருந்தால் அவர்களிடம் சண்டையிட்டுக் கொண்டிருக்க முடியாது. அவர்களுடன் பேசி பெறவேண்டும். அதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பு செய்யவில்லை. இதனாலேயே இன்று காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கும் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கும் தீர்வை காண முடியாதுள்ளது.

சுயலாப அரசியலை செய்யும் அரசியல் தலைமைகளை மக்கள் அதிகளவில் தெரிவு செய்தமையினால் மக்களுக்கு எதுவும் கிடைக்காத நிலை காணப்படுகின்றது என தெரிவித்தார். (2-250)




# வவுனியா புகையிரத நிலையத்தில் பயணிகள் போராட்டம்



கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி காலை 5.40 மணிக்கு புறப்பட்ட கடுகதி புகையிரதத்தில் பயணித்த பயணிகள் வவுனியாவிற்கு அப்பால் புகையிரதம் செல்லாததால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் மாலை நடை பெற்ற இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

காலை 5.40 மணிக்கு கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கடுகதி புகையிரதத்தில் ஆயிரத்து 500 ரூபா பற்றுச்சீட்டு பெற்று பயணிகள் தமது பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

எனினும் பொல்காவெல புகையிரத நிலையத்திற்கு அப்பால் புகையிரதம் தடம் புரண்டதாக தெரிவித்து அங்கு இரண்டு மணிநேரம் காத்திருந்த பயணிகளை பேரூந்தில் ஏற்றி பொதுபெர புகையிரத நிலையத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

பின்னர் அங்கிருந்து புகையிரதம் இல்லாமையினால் புகையிரத நிலைய அதிகாரிகளுடன் முரண்பட்டதையடுத்து புகையிரதம் ஒன்றில் மாகோ வரை பயணிகள் அனுப்பப்பட்டுள்ளனர். எனினும் மாகோவில் இருந்து புகையிரதம் வழங்கப்படாமையினால் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்தினை மறித்து பயணிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந் நிலையில் மன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற புகையிரதத்தில் வழிமறிக்கப்பட்ட புகையிரதத்தில் இருந்த பயணிகளை ஏற்றி கொழும்புக்கு அனுப்பிய புகையிரத நிலைய அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற புகையிரதத்தினை மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கி போராட்டத்தில் ஈடுபட்ட பயணிகளை அனுப்பியுள்ளனர்.

இந் நிலையில் வவுனியாவை சுமார் 5.30 மணியளவில் வந்தடைந்த புகையிரத்தினை வவுனியாவிற்கு அப்பால் அனுப்ப முடியாது என வவுனியா புகையிரத நிலைய அதிபர் தெரிவித்ததையடுத்து பயணிகள் மீண்டும் வவுனியா புகையிரத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து வவுனியா பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து பயணிகளுடன் சமரசம் செய்ததுடன் பேரூந்து வசதியொன்றினையும் ஏற்பாடு செய்திருந்தனர். எனினும் பயணிகள் அதில் பயணிக்காது கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பிறிதொரு புகையிரதத்தில் தமது பயணத்தினை இரவு 6.45 மணியளவில் மேற்கொண்டனர்.

காலை 5.40 மணிக்கு கடுகதி புகையிரதத்தில் பயணிப்பதற்காக ஆரம்பித்த பயணம் சாதாரண புகையிரதத்தில் சென்று முடிந்தையிட்டு பயணிகள் விசனம் தெரிவித்தனர்.(2-250)

# குடமுறுட்டிக்குளத்தின் நீர் வற்றியமையால் மீனவக் குடும்பங்கள் தொழில் இழப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் தொடர்வரட்சி காரணமாக குடமுறுட்டிக் குளத்தின் நீர் முழுமையாக வற்றி வறண்டு காணப்படுவதுடன், இக்குளத்தை நம்பி வாழ்ந்த மீனவக்குடும்பங்களின் வாழ்வாதாரம் முழுமையாக பாதிப்பை எதிர் கொண்டுள்ளது.

குடமுறுட்டிக் குளத்தின் தற்போதைய வரட்சியால் நீர்வற்றிக் காணப்படுகின்றது.

இக்குளத்தில் நன்னீர் மீன்பிடியை வாழ்வாதாரமாக மேற்கொண்ட பல குடும்பங்கள் மீன் பிடித் தொழிலை இழந்து பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இக்குளத்தில் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள 320ஏக்கர் வரையான சிறுபோக செய்கைகள் எதிர்பார்த்த விளைச்சலை எட்டமுடியாது போனமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (2-315)

# மணல் அகழ்வைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்வேன்

## திம்பிலி மக்களிடம் ரவிகரன் உறுதி



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள திம்பிலிப் பகுதியில் சட்டத்திற்கு முரணான வகையில் மண்ணகழ்வு இடம் பெறுவதாக திம்பிலிவாழ் மக்கள் முறையிட்டுள்ளனர்.

குறித்த சட்டமுரண் மணல் அகழ்வு தொடர்பாக அரசலுவலர்களுக்கும் பொலிஸாருக்கும் ஏற்கனவே பல தடவைகள் முறையிட்டதாகவும் அவை தொடர்பில் இது வரையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பிலான முறைப்பாடொன்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரனுக்கும் தெரி விக்கப்பட்டநிலையில் கடந்த 21 ஆம் திகதி குறித்த இடங்களை ரவிகரன் பார்வையிட்டுள்ளார்.

இது தொடர்பில் ரவிகரன் கருத்துத்தெரிவிக்கையில்,

திம்பிலி வாழ் மக்களின் முறைப்பாட்டிற்கமைய குறித்த இடங்களுக்குச் சென்று சட்டத்திற்கு முரணாக மணல் எடுக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு உறுதிப்படுத்தினேன்.

இது தொடர்பாக உரிய இடங்களுக்கு கொண்டு சென்று சட்டத்திற்கு முரணான மணல் அகழ்வினை தடுப்பதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்வேன் என மக்களிடம் தெரிவித்தார். (2)

# அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்யுங்கள்; கண்ணகைபுரம் கிராம மக்கள் கோரிக்கை



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கண்ணகைபுரம் கிராமத்தின் அடிப்படை தேவைகளை பூர்த்திசெயயுமாறும் வரட்சி நிவாரணத்தைப்பெற்றுத்தருமாறும் இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கண்ணகைபுரம் கிராமத்தின் பிரதான வீதி முதல் ஏனைய குடியிருப்பு வீதிவரை எந்த வீதிகளும் புனரமைக்கப்படாமல் இருப்பதுடன், குறித்த கிராமத்தில் வாழுகின்ற மக்கள் தமக்கான அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அண்மைய நாட்களாக பல்வேறு பிரதேசங்களிலும் வரட்சி நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்ற போதும் தமக்கான வரட்சி நிவாரணங்கள் எவையும் வழங்கப்படவில்லையெனத் தெரிவித்த இப்பகுதி மக்கள் வரட்சி நிவாரணங்களை பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர். (2-315)

# குளங்கள் அடையாளப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுப்பு

## 15 குளங்கள் அடையாளம்

கிளிநொச்சி மாவட்டத்தில் கமநலசேவை நிலையங்களின் பராமரிப்பிலுள்ள குளங்களை அடையாளப்படுததுகின்ற நடவடிவக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கமநலசேவை நிலையங்களின் கீழுள்ள 443 வரையான குளங்கள் எல்லையிட்டு அடையாளப்படுத்தவேண்டிய நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படுகின்ற குளங்களை அடையாளப்படுத்துகின்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.இதில் 15 வரையான குளங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# சர்வதேச சமாதான தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு





(குருமன்காடு)

சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு சமாதானத்திற்கான சர்வதேச இளைஞர் கூட்டமைப்பினால் தேசிய இளைஞர் சமாதான செயலமர்வு நாடாளாவிய ரீதியால் 20 மாவட்டங்களில் சர்வதேச சமாதான தினமாக செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி வியாழக்கிழமை பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உயர் கல்வி நிறுவன மாணவர்கள் ஆகியோருக்கு நடத்தப்பட்டது.

"இளைஞர் சமாதானத்தை கட்டியெழுப்பல்" எனும் கருப்பொருளில் நடைபெற்ற தேசிய இளைஞர் சமாதான செயலமர்வு வவுனியா மாவட்டத்தில் தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயம், திருஞானசம்பந்தர் வித்தியாலயம், பூந்தோட்டம் மகா வித்தியாலயம், இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை, கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயம் ஆகிய 5 பாடசாலைகளை சேர்ந்த 391 மாணவர்களுக்கு நடத்தப்பட்டது.

சர்வதேச சமாதான தினத்தை கொண்டாடுவதுடன் மட்டுமன்றி பல்வேறுபட்ட சமூக பின்னணியைக் கொண்ட இளைஞர்களிடையே சமாதானம் குறித்த அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்தக் கூடியதொரு சிறந்த தளத்தை உருவாக்கும் நோக்குடன் நடத்தப்பட்ட தேசிய இளைஞர் சமாதான செயலமர்வு வவுனியா மாவட்டத்தில் ஜனாதிபதி சாரணர் மன்றம், வவுனியா மாவட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், றொட்றிக் கழகம், தமிழ் தேசிய இளைஞர் கழகம் ஆகிய இளைஞர் அமைப்புக்களின் ஆதரவுடன் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# கூட்டுறவு சங்க புதிய நிர்வாக சபைத் தெரிவு

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக மீண்டும் கனகையா மதனரூபன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவுக்கான கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏ9 வீதி, கரடிப் போக்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள சங்கத்தின் பிரதான தலைமைக் காரியாலயத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சுபசிங்க தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உப தலைவராக துள்ளுக்குட்டி அருளேஸ்வரன், செயலாளராக பெனடிக் மனோகரன், பணிப்பாளர்களாக பெ.யூட்கமலதாஸ், ம.நந்தகுமார், செ.செல்வக்குமார், க.றஞ்சித்குமார், செ.சுபேந்திரன், ஜெ.நிலோஜினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பொதுச் சபைக் கூட்டமானது எந்தவிதமான பிரச்சினைகளுமின்றி அனைத்து பொதுச்சபை பேராளர்களின் ஒத்துழைப்புடன் அமைதியான முறையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-312)

# பாழடைந்த கட்டடத்தினுள் ஆணின் சடலம் மீட்பு



கிளிநொச்சி நகரில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில நேற்றுக்காலை சடலம் ஒன்று காணப்படுவது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலிற்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். குறித்த சடலம் காணப்படும் பகுதி பாழடைந்த கட்டடப் பகுதியாகும்.

குறித்த பகுதியில் நச்சு மருந்து மணம் வீசுவதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த நபர் உயிரிழந்தமை தொடர்பிலான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டு மருத்துவ பரிசோதனைகள் இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த நபர் தொடர்பில் அடையாளம் காணும் நடவடிக்கைகள்ள பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். இவரது தகவல் தெரிந்தவர்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தகவல் வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றனர். (2-312)

# இராணுவமுகாமை வேறிடத்திற்கு மாற்றுமாறு பிரதேசமக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு மு/பாலிநகர் மகா வித்தியாலயம், மு/குமாரசுவாமி வித்தியாலயம் ஆகியவற்றுக்கு முன்பாகவுள்ள இராணுவமுகாமை வேறிடத்திற்கு மாற்றுமாறு பிரதேச மக்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப்பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள முன்னணிப் பாடசாலைகளான பாலிநகர் மகாவித்தியாலயம், குமாரசுவாமி வித்தியாலயம் ஆகியவற்றுக்கு முன்பாகவுள்ள 8.5 ஏக்கர் காணி இராணுவத்தினர் கையகப்படுத்தியிருப்பதுடன், குறித்த காணியில் பாரிய இராணுவ முகாம் ஒன்றினையும் அமைத்துள்ளனர்.

குறிப்பாக இரண்டு பாடசாலைகளின் நுழைவாயில்களின் முன்பாகவும் இந்தப் படைமுகாம் அமைந்திருப்பதால் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பாதிப்புக்கள் ஏற்பாடுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ள கல்விச் சமுகத்தினர் குறித்த படை முகாமை வேறிடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை குறித்த இராணுவமுகாம் தொடர்பில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஆகியவற்றில் இதனை அகற்றுமாறும் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டன.

இருப்பினும் ஏற்கனவே மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர்கள் குறித்த காணி இராணுவப் பயன்பாட்டிற்கென வழங்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டனர். (2-315)

# ஆரோக்கியம் குன்றும் போது வாழ்வை தீர்மானிக்க முடியாது

## சிறிதரன் எம்.பி தெரிவிப்பு



ஒரு சமுகம் வாழ்வதற்கு அவர்களது உடல், உள ஆரோக்கியம் மிகமுக்கியமானதென பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளிப் பிரதேசசெயலர் பிரிவின் கீழ் உள்ள இத்தாவில் பகுதியில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஊடாக 1.8 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் குறித்த ஆரம்ப சுகாதார நிலையக்கட்டடத்தினை திறந்த வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில் முகமாலை வேம்பொடுகேணி, இத்தாவில் என்பது பல்வேறு அடையாளங்களைக் கொண்ட பிரதேசமாகும். பெரும் யுத்தத்திற்குப் பின்னர் எமது மக்களின் சுகாதார தேவையைப்பூர்த்தி செய்யும் வகையில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சினுடைய முன்னாள் அமைச்சர் ப.சத்தியலிங்கத்தினதும் சுகாதார வைத்திய அதிகாரி சுகந்தனினதும் அயராது முயற்சியின் பயனாக இந்த சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு மனித சமுகம் வாழ்வதற்கு உடல் ஆரோக்கியமும் உள ஆரோக்கியமும் மிகமிக முக்கியமானது.

மனதிலே தெளிவு இருக்கும் போது தான் அவர்கள் வாழ்க்கையில் தெளிவைக் கொண்டிருக்க முடியும். மனத்தெளிவே உடலின் ஆரோக்கியம் ஆகும்.

ஆரோக்கியம் குன்றிப் போகும் போது, தன்னுடைய வாழ்வைத் தீர்மானிக்க முடியாது போகும் இதன் விரக்திதான் பல்வேறு பிரச்சினைகளை தோற்றிவிக்கின்றன.

ஆதனால்தான் எல்லோரும் உடல் ஆரோக்கியத்தைப் பேணுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த கட்டடத்திறப்பு விழாவில் சுகாதார வைத்தி அதிகாரி, மருத்துவமாதுக்கள், வைத்தியர்கள், பொது மக்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)




# 17 வருடங்கள் வீட்டுத்திட்டமின்றி வாழும் மறவன்குளம் கிராம மக்கள்



(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஈச்சங்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள மீள்குடியேற்ற கிராமமான மறவன்குளம் மக்கள் வீட்டுத்திட்ட வசதியின்றி பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியாவில் அமைக்கப்பட்ட வேப்பங்குளம், சிதம்பரபுரம், பூந்தோட்டம் ஆகிய முகாம்களில் வாழ்ந்த மக்களில் ஒரு தொகுதியினருக்கு காணி வழங்கி 2001 ஆம் ஆண்டு மறவன்குளம் கிராமத்தில் குடியேற்றப்பட்டனர்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட குடும்பங்கள், உப குடும்பங்கள் என தற்போது 538 குடும்பங்கள் மறவன்குளம் கிராமத்தில் வாழ்ந்து வரும் நிலையில் 300 வரையிலான குடும்பங்கள் வீட்டு வசதியற்றவர்களாகவே வாழ்கின்றனர்.

தற்காலிக வீடுகள், மண் கொட்டகைகள், குடிசை வீடுகள், ஒரு வருடத்திற்கென வழங்கப்பட்ட இடிந்து விழும் நிலையிலுள்ள வீடுகளிலேயே இம்மக்கள் தமது வாழ்க்கையைக் கழிக்கின்றனர். மாரி காலம் தொடங்கிவிட்டால் வீட்டுக்குள் மழை நீர் வந்து விடும் எனக் கூறும் இம் மக்கள் தமக்கு நிம்மதியாக வாழ வீட்டுத்திட்டத்தை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். தாம் எந்த வீட்டையும் எதிர்க்க வில்லை. எப்படியான வீடு என்றாலும் பரவாயில்லை மழைக்கும், வெயிலுக்கும் ஒதுங்கிக் கொள்ள இடம் இருந்தால் போதும் என மறவன்குளம் மக்கள் தெரிவித் துள்ள னர்.(2-250)

# கூரை உடைந்து விழும் நிலையில்; சிறார்களின் கல்வி செயற்பாடு நிறுத்தம்

முள்ளிவாய்க்கால் கிழக்கில் மக்கள் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியதன் பின்னர் அங்கு சந்திரன் முன்பள்ளி அமைக்கப்பட்டு சிறுவர்களுக்கு கல்வி செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

குடிதண்ணீர் பிரச்சினை காரணமாக சிறார்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டுவந்துள்ள நிலையில் பிரதேச செய்லகம் ஊடான முன்பள்ளிகளுக்கான நீதி ஒதுக்கீட்டில் இந்தாண்டு 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப் பட்டுள்ளது இது கிராம சேவகர் ஊடாக முன்பள்ளி அபிவிருத்திக்கு பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் 5 இலட்சம் ரூபா செலவில் முன்பள்ளியில் தண்ணீர் தாங்கி ஒன்றும் மோட்டர் இயந்திரம் ஒன்றும் கிடைக்கப் பெற்றது.

இந்த நிதி திட்டத்தில் இவை அமைக்கப்பட்டாலும் இங்கு தண்ணீரினை பெற்றுக் கொள்ள மின்சாரம் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இதனைவிட முன்பள்ளியிலுள்ள கூரைகள் உடைந்து விழும் நிலையில் காணப்படுகின்றது. வளாகத்திலுள்ள மரத்தின் கீழ் கல்வி கற்றுவந்த சிறார்கள் கல்வி நிலையை தொடரமுடியாத நிலையில் தற்போது முன்பள்ளியின் கல்வி செயற்பாடுகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதுடன். முன்பள்ளி அபிவிருத்தி தொடர்பில் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிராம அலுவலகர் ஊடாக மேற்கொள்ளப்பட்ட இந்த திருத்தம் மற்றும் அபிவிருத்தி வேலைகள் திருப்தியளிக்காத நிலை காணப்படுவதாகவும் இந்த முன்பள்ளியில் கட்டட மற்றும் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் சிறார்களை எவ்வாறு பள்ளிக்கு அனுப்புவது என்று பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர். (2-310)



தென்கிழக்காசிய நாட்டிற்கான GFATM நிறுவனத்தின் அனுசரணையுடன் நிர்மாணிக்கப்பட்ட மருதங்கேணி எம். ஒ. எச். (சுகாதார வைத்திய அதிகாரி) அலுவலகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, வடக்கு சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன், இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க மற்றும் GFATM நிறுவனத் தின் திட்டப்பணிப்பாளர் பிளங்காஜில் அன்ரு நனோ விஸ்காய்நோ ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.(படங்கள்:-கரணவாய், தும்பளை செய்தியாளர்கள்)

### நிர்ணயித்த 75 ரூபாவை விட

## அதிக விலைக்கு தேங்காய் விற்பது தண்டனைக்குரிய குற்றமாகும்

### தெங்கு உற்பத்திச் சபை எச்சரிக்கை

(கொழும்பு)

தேங்காய் ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 75 ரூபாவாக இருக்க வேண்டும். அதைவிட அதிக விலைக்கு தேங்காய் விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும் என தெங்கு உற்பத்திச் சபையின் தலைவர் கபில யகன்தவெல தெரிவித்துள்ளார்.

தேங்காய் ஒன்றை நுகர்வோரிடம் சேர்க்கும் வரையிலான முழுச்செலவுகளையும் கருத்தில் கொள்கின்றபோது தேங்காய் ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலையினை 75 ரூபாவாக வரையறுத்துக்கொள்ள முடியும்.

மேலும் கடந்த வாரம் தேங்காயேலத்தில் தேங்காய் ஒன்றின் விலை 49 ரூபாவாக இருந்தது. எனவே மொத்த விற்பனையாளர்கள் தேங்காய் ஒன்றுக்கு பத்து ரூபாவும் சில்லறை விற்பனையாளர்கள் பத்து ரூபாவும் நிர்ணயிப்பதுடன் இன்னும் ஐந்து ரூபாவை மேலதிகமாக சேர்த்தாலும் தேங்காய் ஒன்றை அதிகபட்ச சில்லறை விலையாக எழுபத்தைந்து ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும்.

அத்துடன் தேங்காய் ஒன்று நூற்றுப் பத்து ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தவறான பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது. அதாவது தொழில்துறையில் ஈடுபடுபவர்கள் தேங்காய் கொள்வனவு செய்யும் போது அதனை கிலோ கிராம் அளவிலேயே பெறுகின்றனர். ஆகவே கிலோ ஒன்றின் விலைதான் நூற்றுப்பத்து ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறதே தவிர சாதாரண மக்கள் கொள்வனவு செய்யும் தேங்காயின் விலை அதுவல்ல.

மேலும் தேங்காய் ஒன்றை 75 ரூபாவையும் விட அதிக விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் மக்கள் பாரிய நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## எச்.ஐ.வியால் 22 பேர் பலி! 178 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் எச்.ஐ.வி. தொற்று நோய்த் தொடர்பில் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பாக்டர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் மாத்திரம் எச்.ஐ.வி. தொற்று நோய்க்கு உள்ளாகி 22 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 178 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## வர்த்தக நிறுவனத்தில் தீ!



கேகாலை, கலிகமுவ நகரிலுள்ள வர்த்தக நிறுவனமொன்று நேற்று அதிகாலை தீப்பிடித்ததில் அந்நிறுவனம் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூன்று தீயணைப்புப் பிரிவு வாகனங்களை ஈடுபடுத்தி தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

## ஆயுதங்கள் திருடப்பட்ட சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பம்

வஸ்கமுவ தேசிய பூங்காவில் பணிபுரியும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அதிகாரிகளின் ஆயுதங்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாத்தளை மாவட்டத்திற்கு பொறுப்பான பொலிஸ் கண்காணிப்பாளர் தலைமையில் வில்கமுவ பொலிஸ் துறையினரும் குற்றப்புலனாய்வு பிரிவும் இணைந்து இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

நேற்று வஸ்கமுவ வனப்பகுதியில் விசேட குழுக்கள் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வில்கமுவ வனஜீவராசிகள் அதிகாரிகளின் ஆயுத களஞ்சியம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு உடைக்கப்பட்டு அங்கிருந்த ஐந்து துப்பாக்கிகள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் இரவு 11.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றபோது களஞ்சியத்தில் 10 இற்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் களஞ்சியப்ப டுத்தப்பட்டிருந்ததாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

குறித்த ஆயுத களஞ்சியத்தினுள் வெளியவர்கள் செல்வதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

## உலக மருந்தாளர் தினம்

வட மாகாண மருந்தாளர்கள் சங்கமும் அஸ்ரன் Limited நிறுவனமும் இணைந்து நடத்தும் உலக மருந்தாளர் தினம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் பிறபகல் 2 மணிவரை இல.34,செட்டித்தெரு ஒழுங்கை நல்லூரில் அமைந்துள்ள HOTEL LUX ETOILES இல் இடம்பெறும். (இ-3)

## ரோஹிஞ்யா அகதிகள் விவகாரம் இனவாதக் கருத்துக்களுக்கு எதிராக றிசாத் முறைப்பாடு

(கொழும்பு)

தனது தலையீட்டில், மியன்மார் ரோஹிஞ்யா முஸ்லிம்களை இலங்கைக்கு அழைத்து வந்து குடியேற்றுவதாக, சில இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத் தளங்களில் இனவாதக் கருத்துக்கள் வெளியிடப்படுவதாக, அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உடனடியாக விசாரணைகளை முன்னெடுத்து, இதனைச் செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் முறைப்பாடு செய்துள்ளதாக, அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



ரோஹிஞ்யா முஸ்லிம்களை இலங்கைக்கு அழைத்து வருவது அல்லது அது குறித்து எந்தவொரு கருத்துக்களையோ நிலைப்பாடுகளையோ நான் தெரிவிக்கவில்லை.

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்கள் நல்லிணக்கத்துடன் வாழும் இந்த நாட்டில், இதுபோன்ற இனவாதக் கருத்துக்களைப் பரப்பி தன்னை இதனுடன் தொடர்புபடுத்தி, பிரச்சினைகளை ஏற்படுத்த முற்படும் சதிகாரர்களை நாட்டுக்கு அடையாளம் காட்ட வேண்டும் என்பதால் தான் இது குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு முறைப்பாடு செய்துள்ளதாக அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். (இ-3)

## வாழைச்சேனை கடதாசி ஆலை விரைவில் திறக்கப்பட வாய்ப்பு

### எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தகவல்

(கொழும்பு)

வாழைச்சேனை கடதாசி ஆலை நிலவரம் தொடர்பில் பிரதமருடன் கலந்துரையாடி மிக விரைவில் புனரமைப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்வதாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

வாழைச்சேனை கடதாசி ஆலையின் தொழிற்சங்க பிரதிநிதிகளுடனான சந்திப்பு கடதாசி ஆலை பிள்ளையார் ஆலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார். (இ-3)



## 30,000 மெற்றிக்தொன் அரிசி இறக்குமதி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

உள்நாட்டு அரிசித் தேவையை பூர்த்திசெய்யும் பொருட்டு விரைவில் 30 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படவிருப்பதாக சதோச தலைவர் ரி.எம்.கே.பீ.தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு அரிசியின். விலையையும் விட இறக்குமதி செய்யப்படும் அரிசியின் விலை குறைந்த மட்டத்தில் காணப்படுவதாக அரச மற்றும் தனியார் துறை வர்த்தக நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

லங்கா சதோச விற்பனை நிலையங்களில் அரிசியின் விலை தனியார் நிறுவனங்களின் விலை மட்டத்தையும் விட குறைந்த அளவில் காணப்படுவதாகவும் சதோச விற்பனை நிலையங்களில் 75 ரூபாவிற்கும் 85 ரூபாவிற்கும் இடைப்பட்ட விலை மட்டங்களில் அரிசி விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

# ஜனநாயக மறுசீரமைப்புத் தொடர்பில் தெளிவுபடுத்த திரைப்படத் தொகுப்பு



ஜனநாயக மறுசீரமைப்புத் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்துவதற்கான திரைப்படத் தொகுப்புக்கள் தயாரித்து வெளியிடப்படவுள்ளன.

இதுதொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் அரச தகவல் திணைக்களமும், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் கைச்சாத்திட்டுள்ளன.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில், நேற்று முன்தினம் அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரங்க கலன்சூரியவும், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சட்டத்தரணி ரவி ஜயவர்த்தனவும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

ஊடக சுதந்திரம், வாழும் உரிமை, காணாமல் போதல், தகவல்களை அறிந்து கொள்ளும் சட்டம் போன்ற தெரிவு செய்யப்பட்ட 10 துறைகள் குறித்த உண்மைக் கதைகள் தொகுப்புத் திரைப்படமாகத் தயாரிக்கப்படுகின்றன.

கலாநிதி பிரதீப் வீரசிங்ஹ, சட்டத்தரணி சுதர்ஷன குணவர்த்தன, சட்டத்தரணி ஜகத் லியனாராச்சி, ஷான் விஜேதுங்க, தரிந்து ஜயவர்த்தன, பீடோ பெர்னாண்டோ, கசுன் புஷ்வெல மற்றும் அனோமா ராஜகருணா ஆகியோரைக் கொண்ட ஆலோசனைச் சபையொன்றும் இதற்கு உதவ உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# 18 வயதுக்குக்குறைந்த பிள்ளைகள் வாகனங்களைச் செலுத்தினால் பெற்றோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

18 வயதுக்குக் குறைந்தவர்கள் வாகனங்களைச் செலுத்தும் பட்சத்தில், அவர்களது பெற்றோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வீதிப் பாதுகாப்புக்கான தேசிய சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து மேற்படி சபையின் தலைவர் கலாநிதி சிசிர கோதாகொட இதனைத் தெரிவித்தார். அண்மைக் காலமாக குறைந்த வயதுடையவர்கள் வாகனங்களைச் செலுத்துவதால் இடம்பெறும் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

தலாவை பகுதியில், பத்தாம் வகுப்பு மாணவன் ஒருவன் மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் நேற்று முன்தினம் உயிரிழந்தான்.

அதிவேகமாகச் செலுத்தப்பட்ட இம்மாணவனின் மோட்டார் சைக்கிள், வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையிலேயே சிசிர கோதாகொட மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

# போலி நடத்துநர் கைது

பதுளை பிரதான பஸ் நிலையத்தில் போலி பிரயாண சீட்டுகளை வழங்கி, பயணிகளிடம் பண மோசடி செய்துவந்த நபரை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

சொகுசு பஸ்களில், நடத்துநர் பிரயாண சீட்டுகளை வழங்குவதற்கு முன், குறித்த நபர் தன்னை நடத்துநராக அறிமுகப்படுத்திக் கொண்டு பயணிகளிடம் பணம் பெற்று வந்துள்ளார்.

இது தொடர்பில் பதுளை பொலிஸாருக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்நிலையில் நேற்றைய தினம் இவர் பயணிகளிடம் பணம் வசூலிப்பதாகக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அங்கு பொலிஸார் விரைந்தனர். பொலிஸாரைக் கண்ட சந்தேக நபர் ஆட்டோவில் ஏறி அங்கிருந்து தப்பிச்செல்ல முயற்சித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து போலி பயணச்சீட்டுகள் மற்றும் 36 ஆயிரம் ரூபா பணத்தை பறிமுதல் செய்துள்ளார்.

இது தொடர்பிலான விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். (இ-3)

# ஐ.தே.க., ஜே.வி.பி. இரு கட்சிகள் அல்ல

## கூட்டு எதிர்க்கட்சி விசனம்

மக்கள் விடுதலை முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இரு கட்சிகள் அல்ல வென கூட்டு எதிர்க் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

இரு கட்சிகளும் இணைந்து மக்களின் வாக்களிக்கும் உரிமையை சூரையாடுகின்றது எனவும் அக்கட்சி கூறியுள்ளது.

இரு கட்சிகளும் கூட்டணி அமைத்து மறைமுகமாக செயற்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர்ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் ஜனநாயகமும், தேசப் பற்றும் எங்கு சென்று விட்டது எனவும் கேட்க வேண்டியுள்ளதாக ரொஷான் எம்.பி. நேற்று முன்தினம் பொலநறுவையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது கேள்வி எழுப்பியுள்ளார். (இ-3)

# 25 வீதமே மகிந்த 75 வீத போர் முடிவுக்கு நான் தான் காரணம்

## சந்திரிகா தகவல்



மூன்று தசாப்தங்களாக இலங்கையில் நிலவிய போரின் பெரும்பகுதியை முடிவுக்கு கொண்டு வந்த பெருமை தன்னையே சேரும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். கம்பஹா மீரிகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். " விடுதலைப் புலிகளிடமிருந்த 75 வீதமான நிலப்பரப்பை நானே வெற்றி கொண்டேன். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 25 வீதம் மாத்திரமே யுத்தத்தை நிறைவு செய்தார் என்றும் அவர் கூறியுள்ளார். (இ-3)

# நாரம்மலையில் லொறி விபத்து

## இருவர் மரணம்

வேகமாகச் சென்ற லொறியொன்று சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து மரத்துடன் மோதியதில் இருவர் உயிரிழந்தனர். ஆறு பேர் காயமடைந்தனர்.

எட்டுப் பேரை ஏற்றிச் சென்ற அந்த லொறி நேற்று முன்தினம் நள்ளிரவு நாரம்மலை, உடபொல சந்திக்கு அருகே சென்றுகொண்டிருந்தது.

அப்போது திடீரென்று சாரதியின் கட்டுப்பாட்டையிழந்த லொறி, வீதியை விட்டு விலகி, அங்கிருந்த மரமொன்றுடன் மோதியது.

இதில், லொறியில் இருந்த 48 வயதுப் பெண்ணும் 50 வயது ஆணும் உயிரிழந்தனர். சாரதி உட்பட ஏனைய ஆறு பேரும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-3)

# இலஞ்சம் பெற்ற கலால் திணைக்கள அதிகாரி கைதானார்

அளுத்கமையில், போதைப் பொருள் கடத்தல் குற்றவாளி ஒருவரிடமிருந்து இலஞ்சமாக ஒரு தொகைப் பணத்தைப் பெற்ற கலால் திணைக்கள அதிகாரியொருவர் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

30 ஆயிரம் ரூபாவை இவர் இலஞ்சமாகப் பெற்றார் எனக் குற்றம்சாட்டப்படுகின்றது. அம்பலாங்கொடையைச் சேர்ந்த இந்த அதிகாரி, ஏற்கனவே அதே நபரிடமிருந்து இருபதாயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றிருந்தார் என்பது ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. (இ-3)

# ரூ.60 மில்லியன் பெறுமதியான கிளைபோசேட் அமிலம் பறிமுதல்




சுங்கத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின் அடிப்படையில் சட்டவிரோதமாக நாட்டிற்குள் எடுத்து வரப்பட்ட கிளைபோசேட் எனப்படும் அமிலம் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஒருகொடவத்தை கொள்கலன் களஞ்சியத்தில் வைத்து 17,687 கிலோ கிராம் கிளைபோசேட் 987 கலன்களில் அடைக்கப்பட்ட நிலையில் சீனாவிலிருந்து எடுத்து வரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த அமில பதார்த்தம் யூரியா திரவ உரம் என்ற போர்வையில் எடுத்து வரப்பட்டதாக விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

அவற்றின் பெறுமதி சுமார் 60 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)

# இலங்கைக்குத் திருட்டுத்தனமாக வரவில்லை சிங்களப் பத்திரிகைக்கு இமானுவேல் பேட்டி



இலங்கைக்குத் தாம் திருட்டுத்தனமாக வரவில்லை என்று உலக தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஜே இமானுவேல் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு பல முறை அழைப்பு விடுத்திருந்ததாகவும் அதற்கமையவே தாம் இந்த விஜயத்தை மேற்கொண்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

2015ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆட்சிமாற்றத்தின் பின்னர் இலங்கைக்கான தனது முதலாவது பயணமாக இது அமைந்திருப்பதாக இம்மானுவேல் அடிகளார் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இந்த பயணத்தின் போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர், நிதியமைச்சர், தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழ்த் தலைமைகள் எனப் பலரையும் சந்திக்க விருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தாம் ஒருபோதும் சிங்கள மக்களுக்கு விரோதமானவரல்ல என்று தெரிவித்த அவர், ஒரு சிலர் இப்படியாக போலி பிரசாரங்களை முன்னெடுத்திருப்பது கவலைக்குரிய விடயமாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இம்மானுவேல் அடிகளார் 1997ஆம் ஆண்டு நாட்டிலிருந்து வெளியேறியதோடு ஜேர்மனில் குடிபெயர்ந்து வசித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)



# பாரதம்

# ஜெயலலிதா மரணம் குறித்து விரைவில் விசாரணை வேண்டும்

## தி.மு.க. – பா.ஜ.க வலியுறுத்தல்



(சென்னை)

ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பற்றி முரண்பாடான தகவல்கள் வெளியாவதால், அவரது மரணம் குறித்த விசாரணையை விரைவில் தொடங்க வேண்டும் என்று தி.மு.க. மற்றும் பாரதிய ஜனதா கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

ஜெயலலிதாவின்மரணம் குறித்து பல்வேறு தரப்பில் சந்தேகங்கள் எழுப்பப்பட்டதால் சர்ச்சைகள் எழுந்தன. இதைத்தொடர்ந்து, அவரது மரணம் குறித்து விசாரிக்க விசாரணை கமிஷன் அமைக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது. ஆனால் இன்னும் விசாரணை கமிஷன் அமைக்கப்படவில்லை.

இந்த நிலையில், ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் திடீரென்று பரபரப்பான தகவல்களை வெளியிட்டுள்ளார்.

மதுரை பழங்காநத்தத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற அண்ணா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு பேசுகையில், வைத்தியசாலையில் ஜெயலலிதா இட்லி, சட்னி சாப்பிட்டார் என்று நாங்கள் சொன்னது எல்லாம் பொய். உண்மையிலேயே நாங்கள் யாருமே அதை பார்க்கவில்லை. மக்கள் நம்பவேண்டும் என்பதற்காக நாங்கள் இவ்வாறு சொன்னோம். இதற்காக எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள் என்று கூறினார்.

அவர் இவ்வாறு கூறியது கூட்டத்தினர் மத்தியில் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியது.

ஜெயலலிதாவின் உடல் நிலை குறித்து பொய் சொன்னதாக மூத்த அமைச்சர் ஒருவரே இவ்வாறு பகிரங்கமாக கூறி இருப்பது, புதிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பற்றி முரண்பாடான தகவல்கள் வெளியாகி இருப்பதால், அவரது மரணம் குறித்து விசாரணையை விரைவில் தொடங்க வேண்டும் என்று எதிர்க்கட்சியான தி.மு.க. வலியுறுத்தி இருக்கிறது.

இதுகுறித்து அக்கட்சியின் செயல்தலைவர் மு.க.ஸ்ராலின் சென்னையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் போது கூறியதாவது.

ஜெயலலிதா மரணம் குறித்து நாங்கள் தொடக்க காலத்தில் இருந்தே முறையான விசாரணை வைக்க வேண்டுமென தெளிவாக சொல்லிக்கொண்டு இருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் எடப்பாடி பழனிசாமியும் விசாரணை கமிஷன் அமைக்கப்படும் என்று சொன்னார். ஓ.பன்னீர்செல்வமும் சி.பி.ஐ. விசாரணை வைக்க வேண்டும் என்று கேட்டார்.

விசாரணை கமிஷன் அமைக்கப்படும் என்று சொன்னார்களே தவிர, எந்த நீதிபதி விசாரிப்பார் என்ற தெளிவான அறிவிப்பு கிடையாது.

ஏன் இன்னும் விசாரணை தொடங்கவில்லை எனவும் தெரியவில்லை. உண்மையான, முறையான விசாரணை நடந்தால்தான் நாட்டுக்கு உண்மைநிலை தெரிய வருமென்று அவர் தெரிவித்தார். இதே கோரிக்கையை பாரதிய ஜனதாவும் வலியுறுத்தி இருக்கிறது. (3-8)

# தீவிரவாதிக...

## 200 ற்கும் மேற்பட்ட...

(பாக்தாத்)

ஈராக்கில் சலாகுதினீல் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே நிகழ்ந்த தாக்குதலின் முடிவில் 200க்கும் மேற்பட்டோர் கொன்று குவிக்கப்பட்டுள்ளதாக லெப்டினன்ட் ஜெனரல் ஷாகீர் ஜாவ்தத் நேற்று முன்தினம் அறிவித்தார்.

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் பிடி, கொஞ்சம் கொஞ்சமாய் தளர்ந்து வருகிறது. இந் நிலையில், அங்கு சலாகுதீன் மாகாணத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் அந்த நாட்டின் இராணுவம் ஈடுபட்டது. கடும் தாக்குதல்களை கடந்த புதன்கிழமை முதல் தொடுத்து வந்தது. இத் தாக்குதல்களின் முடிவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் 200-க்

# இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள ரோஹிஞ்யாக்களை திருப்பி அனுப்பக்கோரி உச்ச நீதிமன்றில் மனு!



(புதுடில்லி)

இந்தியாவில் சட்டவிரோதமாக குடியேறியுள்ள ரோஹிஞ்யா இனத்தவர்களை மியன்மாருக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமென உச்சநீதிமன்றில் பா.ஜ.க சட்டத்தரணி மனுத்தாக்கல் செய்துள்ளார்.

மியன்மார் நாட்டில் இராணுவத்தின் அடக்குமுறையால் இலட்சக்கணக்கான ரோஹிஞ்யா முஸ்லிம்கள் அகதிகளாக பங்களாதேஷம், இந்தியா போன்ற அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். இந்தியாவில் மட்டும் சுமார் 40 ஆயிரம் ரோஹிஞ்யாக்கள் சட்டவிரோதமாக குடியேறியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், சட்டவிரோதமாக குடியேறியுள்ள ரோஹிஞ்யாக்களை மியன்மாருக்கு திருப்பி அனுப்ப வேண்டும் என பா.ஜ.க சட்டத்தரணி அஷ்வினிகுமார் உபாத்யா உச்சநீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். ஏற்கனவே, இது தொடர்பாக உச்ச நீதிமன்றில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோதமாக குடியேறியவர்கள் மற்றும் எல்லை தாண்டி இந்தியாவுக்குள் வந்தவர்களை மத்திய, மாநில அரசுகள் கண்டறிந்து, அவர்களை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடவேண்டும் என அஷ்வினி குமார் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த மனுவானது, வரும் ஒக்டோபர் 3ஆம் திகதி நடைபெறவுள்ள முந்தைய மனு விசாரணையின் போது சேர்த்து விசாரிக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (3-8)

# 18 எம்.எல்.ஏக்களின் பெயர்கள் இணையதளத்திலிருந்து நீக்கம்



(சென்னை)

தகுதிநீக்கம் செய்யப்பட்ட 18 எம்.எல்.ஏ.க்களின் பெயர்கள், படங்கள் சட்டசபை இணையதளத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. முதலமைச்சர் பழனிசாமியை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று டி.டி.வி. தினகரனுக்கு ஆதரவு அளித்து வந்த 19 எம்.எல்.ஏ.க்கள் ஆளுநரிடம் மனு கொடுத்தனர். இதில் ஜக்கையன் மட்டும் பின்னர் அந்த அணியில் இருந்து விலகினார்.

இந்த நிலையில் 18 எம்.எல்.ஏக்களையும் அந்த பதவியில் இருந்து தகுதிநீக்கம் செய்து கடந்த 18ஆம் திகதி சபாநாயகர் ப.தனபால் உத்தரவிட்டார். இதனை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழக சட்டசபையில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்ட எம்.எல்.ஏக்கள் ஆண்டிப்பட்டி தங்க தமிழ்செல்வன், பெரம்பூர் பி.வெற்றிவேல், திருப்போரூர் மு.கோதண்டபாணி, பூந்தமல்லி ஏ.ஏழுமலை உட்பட 18 பேரின் பெயர்கள், படங்கள் சட்டசபை இணையதளத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்லாமல், அவர்களின் தொகுதிகளும் காலியாக உள்ளதாக இணையதளத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், அவர்கள் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர். (3-8)

# ட்ரம்ப் மகள் போன்... முகம் மாற்று சி...

## அமெரிக்க பெண்கள் ஆர்வம்



(நியூயோர்க்)

அமெரிக்க் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மகள் இவாங்கா போன்று மாற முகம் மாற்று சிகிச்சைக்கு பெண்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மகள் இவாங்கா ட்ரம்ப். இவர் ட்ரம்பின் அரசியல் ஆலோசகராக இருக்கிறார்.

ஜனாதிபதி மகள் என்பது மட்டும் இவரது சிறப்பு அம்சம் அல்ல. தன்னம்பிக்கை மிக்கவர். திறமையாக எதையும் துணிச்சலுடன் சமாளிக்க கூடிய அழகான பெண், அமெரிக்க குடிமகன்களில் முதல் குடும்பத்து பெண்மணி ஆவார்.

# தொழிலாளர் சட்டத்தில்...

## பிரான்ஸ் ஜனாதிபதிக்கு வலுக்கும் எதிர்ப்பு



(பாரீஸ்)

பிரான்ஸ்ஜனாதிபதி மேக்ரானின் புதிய தொழிலாளர் சீர்திருத்தங்களை எதிர்த்து இடதுசாரி கட்சிகள் தொடர் போராட்டம் நடத்தி வருவதால் ஜனாதிபதிக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளன.

பிரான்ஸ் நாட்டில் தொழில் நிறுவனங்கள் தொழிலாளர்களை வேலைக்கு சேர்ப்பது மற்றும் நீக்குவதை எளிமைப்படுத்தும் வகையிலான புதிய சட்டங்களை ஜனாதிபதி மெக்ரானின் அரசு அறிமுகப்படுத்தியது. மேலும், அடுத் தாண்டிலிருந்து இந்த சட்டங்கள் அமுல்செய்யப்போவதாக அறிவித்தது.

ஜனாதிபதி மேக்ரானின் இந்த சட்டத்திற்கு இடதுசாரி கட்சிகள் மத்தியில் பலத்த எதிர்ப்பு எழுந்தது. இதனையடுத்து, அக்கட்சிகள் ஒன்றினைந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறன. நேற்று முன்தினம் பாரீஸ் நகரில் பிரம்மாண்ட பேரணியையும் இடது சாரியினர் நடத்தினர்.

ஜனாதிபதி தேர்தலில் தன்னை வலதுசாரி, இடதுசாரி இரண்டிற்கும் பொதுவானவராக சொல்லி வந்த மெக்ரான் இப்போது வலதுசாரியாக

# வெளிநாடு



## ...களை தீர்த்துக்கட்டியது ஈராக்

### ...ட்ட ஐ.எஸ்ஸினர் கொன்றுகுவிப்பு



...கும் மேற்பட்டோர் கொன்று குவிக்கப் பட்டுள்ளனர் என லெப்டினனட் ஜென ரல் ஷாகீர் ஜாவ்தத் நேற்று முன்தினம் அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், சலாகுதீன் மாகாணத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருந்து 480 ச.கி.மீ. பரப்பளவை இராணுவம் மீட்டுள்ளது.

41 கிராமங்கள் மீட்கப் பட்டுள்ளன. அவர்களின் தளபாடங்களும் அழிக்கப் பட்டுள்ளன என்று கூறி னார்.

இதற்கிடையே கிர்குக் மாகாணத்தில் ஐ.எஸ். தீவிர வாதிகளை ஒடுக்குவதற்கு ஈராக் படைகள் நேற்று முன் தினம் புதிய தாக்குதல்களை தொடங்கி உள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல் கள் கூறுகின்றன. (3-8)

## வடகொரியாவில் நிலநடுக்கம்

### அணுஆயுத சோதனைகளால் ஏற்பட்டிருக்கலாமென சீனா ஊகம்

(பீஜிங்)

வடகொரியாவில் நேற்று முன்தினம் 3.4 ரிக்டர் அள வில் பதிவான நிலநடுக்கம் அணுஆயுத சோதனையின் காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என சீனா நில ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

வடகொரியாவில் நேற்று முன்தினம் காலை சுமார் 8:30 மணியளவில் ரிக்டர் அளவில் 3.4 அளவில் பதி வான நிலநடுக்கம் ஏற்பட் டுள்ளதாக சீனா நில அராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. மேலும் இப் பூகம்பம் முன் னர் அந்நாடு அணுஆயுத சோதனைகள் நடத்திய அதே இடத்தில் ஏற்பட்டிருப்பதாக வும், இதனால் வடகொரியா அந்த இடத்தில் மீண்டும் அணுஆயுத சோதனையோ, ஹைட்ரஜன் குண்டு சோத னையோ நடத்தியிருக்கக் கூடும் எனவும் அந்த நிறு வனம் தெரிவித்துள்ளது.

இப் பூகம்பம் குறித்து ஆய்வு செய்து வருவதாக தென்கொரிய வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித் துள்ளது. இருப்பினும் முதல் கட்ட ஆராய்ச்சியில் இப் பூகம்பம் இயற்கையாக ஏற் பட்டதாக கூறியுள்ளது. இதற்கு முந்தைய சோதனையி னால் ஏற்பட்ட நிலநடுக்கத்தை விட இந் நிலநடுக்கம் குறைந்த அளவுடையது என கூறப்பட்டுள்ளது.

இந் நிலநடுக்கம் அணு ஆயுத சோதனையால் ஏற்பட் டது என தெரியவரும் பட்சத் தில் அமெரிக்கா கடுமையான நடவடிக்கை எடுக்க அதிக வாய்ப் பிருப்பதாக கூறப்படுகிறது.

அணுஆயுத சோதனை கள் நடத்தினால் வடகொரி யாவை முழுமையாக அழிக்க நேரிடும் என ட்ரம்ப் சமீபத் தில் மிரட்டல் விடுத்தார் என் பது குறிப்பிடத்தக்கது. (3-8)

## ...ன்று மாற ...சிகிச்சை

எனவே இவரைப் போன்று அழ கான முக அமைப்புடன் திகழ அமெ ரிக்க பெண்களில் பலர் விரும்பு கின்றனர். அத்றகாக இவாங்கா ட்ரம்ப் போன்று மாற முகமாற்று சிகிச்சை செய்து கொள்கின்றனர்.

அதற்காக நியூயோர்க்கில் உள்ள பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபு ணர் வைத்தியர் நார்மன் ரோ என்பவரை நாடுகின்றனர். 50-க்கும் மேற்பட்ட பெண்கள் இவாங்கா போட்டோவுடன் வந்து அவரைப் போன்று தங்களுக்கும் அழகிய முகம் வேண்டும் என தேட்கின்றனர்.

இத்தகைய அறுவை சிகிச்சை செய்ய ரூ.20 லட்சம் முதல் ரூ.32 லட்சம் வரை செலவாகிறது. அதைப் பற்றியெல்லாம் அவர்களுக்கு கவலை இல்லை. ட்ரம்ப் மகள் போன்று மாற வேண்டும் என ஆசைப்படுகின்ற னர்.

ஒரு பெண் இவாங்கா போன்று மாற இந்த வருடத்தில் மட்டும் 13 தடவை சிகிச்சை செய்து இருக்கிறார். (3-8)

## தீவிரவாத அமைப்புக்களை உருவாக்குகிறது பாகிஸ்தான்

### ஐ.நா.சபையில் இந்தியா ஆவேசம்



(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபை யின் பொதுக்கூட்டத்தில் இந்திய வெளியுறவுதுறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் பேசுகையில், பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புகளை உருவாக்கி வருகிறது என ஆவேசமாக பேசினார்.

ஐக்கிய நாடுகள் சபை யின் பொதுக்கூட்டத்தில் இந் தியா சார்பாக வெளியுறவுதுறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் கலந்து கொணடார். அப்போது அவர் பேசியதாவது,

தற்போதைய 21ஆம் நூற்றாண்டில் நிலவும் சூழ லுக்கு ஏற்ப ஐ.நா.சபை மாற் றியமைக்கப்பட வேண்டும். இந்த சீர்திருத்தத்திற்கான பேச்சுக்கள் பத்தாண்டுகளுக்கு மேலாக பேசப்பட்டுவருகின்றன.

கறுப்பு பணத்துக்கு எதி ராக எடுக்கப்பட்ட மிகவும் துணிச்சலான முடிவு பண மதிப்பிழப்பு நடவடிக்கை.

இந்தியா அறிஞர்களை யும், டாக்டர்களையும், உரு வாக்குகிறது. அதற்காக நாங் கள் பெருமிதம் கொள்கிறோம். ஆனால் பாகிஸ்தான் லஷ் கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ மொக மது, ஹிஸ்புல் முஜா ஹிதின் உட்பட பல தீவிரவாத அமைப்பு களை உருவாக்கிவருகிறது.

கடந்த கூட்டத்தில் 160 நாடுகள் ஆதரவு தெரிவித்த தீர்மானத்தின் அடிப்படை யில் விவாதங்களை நடத்த துவங்க வேண்டும். இது முன்னுரிமை கொண்டதாக இருக்க வேண்டும். அது நடந் தால் முக்கியத்துவம் வாய்ந்த தாக இருக்கும்.

இதேபோன்ற கோரிக் கையை சமீபத்திய ஜி-4 மாநா டும் கேட்டுக் கொண்டது. இந் தியா ஐ.நா.வின் நிரந்தர உறுப் பினர் அந்தஸ்தை பெற வேண் டும் என்ற கோரிக்கையை முன் வைத்துள்ளன என்று அவர் தெரிவித்தள்ளார். (3-8)

## தீவிரவாதிகள் - பாதுகாப்பு படையினர் இடையே கடும் துப்பாக்கிச்சண்டை



(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீர் மாநிலத் தின் பாராமுல்லா அருகே தீவிரவாதிகளை சுற்றி வளைத்துள்ள பாதுகாப்பு படையினர் அவர்கள் மீது சரமாரியாக தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத் தின் பாராமுல்லா அருகே உள்ள ஊரி பகுதியில் தீவிர வாதிகள் பதுங்கியிருப்ப தாக பாதுகாப்பு படையினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இதனையடுத்து, நேற்றுக் காலை அங்கு விரைந்த பாது காப்பு படையினர் தீவிரவாதி களை சுற்றி வளைத்தனர்.

அப்போது, தீவிரவாதிகள் பாதுகாப்பு படையினரை குறிவைத்து துப்பாக்கியால் சுட்டு தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து, சுதாரித்துக் கொண்ட பாதுகாப்பு படை வீரர்கள் தீவிரவாதிகளை சுற்றி வளைத்து கடுமை யாக தாக்குதல் நடத்துவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்தாண்டு இதே ஊரி பகுதியில் உள்ள இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 19 வீரர் கள் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

## ...ல சீர்திருத்தம்



மாறிவிட்டார் என்று எதிர்ப்புப் பேரணி யில் கலந்து கொள்பவர்கள் குற்றம் சாட்டி யுள்ளனர்.

ஆனாலும், போராட்டங்களை கண்டு தனது முடிவிலிருந்து பின் வாங்கப் போவதில்லை என்று மெக்ரான் அரசு திட்டவட்டமாக கூறியுள்ளது. இதனால், தொழிலாளர்கள் மத்தியில் ஜனாதிபதி மேக்ரானுக்கு இருந்த செல்வாக்கு சரிந்துள்ளது. (3-8)

## சிறிய குழந்தைகள் போன்று ட்ரம்ப், கிம் ஜாங் சண்டை போடுவதா?

### விரக்தியின் விளிம்பில் ரஷ்யா

(மாஸ்கோ)

ட்ரம்பும், கிம் ஜாங் உன்னும் தொடர்ந்து மழலை யர் வகுப்பில் படிக்கிற சிறிய குழந்தைகள் போல சண்டை போடுவதாக ரஷ்ய நாட்டின் வெளியுறவு அமைச்சர் செர்கெய் லாவ்ரோவ் கருத்து தெரிவித் துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், வட்கொரியா தலை வர் கிம் ஜாங் உன்னும் தொடர்ந்து வார்த்தை மோதல் களில் ஈடுபட்டு வருகின்றனர்.

வட கொரியாவை அழித்து விடுவேன் என ட்ரம்ப் மிரட் டினார். உடனே கிம் ஜாங் உன், ட்ரம்புக்கு புத்தி பேத லித்து விட்டது, முதுமையி னால் மனத்தளர்ச்சி அடைந்து விட்டார் என விமர்சித்தார்.

அதற்கு ட்ரம்ப், கிம் ஜாங் உன் பைத்தியக்காரர். சொந்த மக்களையே பட்டினி போடு கிறார் அல்லது கொல்கிறார். இதுவரையில் இல்லாத வகை யில் அவர் சோதனைக்கு ஆளாக்கப்படுவார் என எச் சரித்தார்.

இப்படி ஒருவருக்கொரு வர் வார்த்தைகளை ஏவு கணை போல ஏவி விடுவது



உலக அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுபற்றி ரஷ்ய நாட்டின் வெளியுறவு அமைச்சர் செர் கெய் லாவ்ரோவ் கருத்து தெரிவித்துள்ளார்.

அவர், ட்ரம்பும், கிம் ஜாங் உன்னும் மழலையர் வகுப்பில் படிக்கிற சிறிய குழந்தைகள்போல சண்டை போட்டுக்கொள்வதா? இரு வரும் அதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

வட கொரியாவின் அணு ஆயுத சோதனைகள் ஏற்றுக் கொள்ள முடியாததுதான். அதே நேரத்தில் கொரிய தீபகற்பத்தில் போரை கட்ட விழ்த்து விடுவோம் என அமெரிக்கா கூறுவதும் ஏற்க இயலாததுதான் என்று கூறி னார்.

மேலும், இந்த பிரச்சினை யில் சீனாவுடன் சேர்ந்து, அர்த்த முள்ள அணுகுமுறையை மேற்கொள்ளப்போவதாகவும் அவர் குறிப்பிட்டார். (3-8)

# புதிய அரசியல் அமைப்புக்கான இடைக்கால அறிக்கை வெளியீடு

(நேற்றைய தொடர்ச்சி)

3. இலங்கையின் ஆட்புல நீர்ப்பரப்புகளின் வரையறைகள், கண்டமேடை, பிரத்தியோக பொருளாதார வலயம் தொடர்பாக உரிமைகள் மற்றும் பிரத்தியேகப் பொருளாதார வலயம் (EEZ), ஏனைய கடல் சார்ந்த வலயங் கள் என சட்டத்தினால் காலத்திற்கு காலம் அவை குறித்துரைக்கபடல் வேண்டும்.

4. எண்ணெய் நிலங்கள், பெற்றோலியம் மற்றும் பெற்றோலியப் பொருட்கள் துடங்கலாக சுரங்கங்கள் மற்றும் கனிய வளங் களின் மேம்பாட்டையும் பாவனையையும் ஒங்குபடுத்தி அதன் மீதான வேத்துரிமை/ ஆக்கவுரிமைகளின் சேகரித்தல் மத்திய அரசாங்கத்தின் விடயமாகவும் பணியாகவும் இருத்தல் வேண்டும்.

5. இலங்கையின் ஆட்புல நீர்ப்பரப்பினுள் காணி மீட்டெடுத் தலானது மத்திய அரசாங்கத்திற்கு ஒதுக்கிய விடயமாயிருத்தல் வேண்டும். ஏதேனும் மீட்டெடுக்கப்பட்ட காணியானது குடியரசுக்கு உரித்தாக்கப்பட வேண்டும் என்பதுடன் சட்டத்தினால் குறிப்பிடப்பட்டாலன்றி மத்திய.அரசாங்கத்தினால் உபயோகிக்கப்படல் வேண்டும்.

6. அரசியலமைப்பிற்கு உட்பட்டவாறுதேசியகாணிஆணைக் குழுவின் தேசிய காணி மற்றும் நீர்ப்பயன்பாட்டின் பிரகாரம் மத்திய அரசாங்கம் அல்லது மாகாணங்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அரச காணிகள் அனைத்தும் பயன் படுத்தப்படல் வேண்டும்.

அரச காணியைப் பாரதீனப்படுத்தல் என்பது குடியரசின் சார்பாகவும் அதன் பெயரிலும் தேசிய காணி ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு தேசிய காணி மற்றும் நீர்ப் பயன்பாட்டுக் கொள்கை க்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

8. தேசிய நிரலில் குறித் தொதுக்கப்பட்ட விடயங்கள் மற்றும் பணிகள் தொடர்பாக முறையான சட்டச்செயன் முறையின் பிரகாரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ள அல்லது உபயோகிக்கப்படும் அரச காணியானது மத்திய அரசாங்கம், அதன் நிறுவனங்கள் அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றால் அரசியலமைப்பின் ஆரம்பத்திலிருந்து பயன்படுத்துவதற்கென தேசிய காணி மற்றும் நீர்ப் பயன்பாட்டுக் கொள்கைக்கு உட்பட்டதாக மத்திய அரசாங்கம் உரித்துடையதாக்கப்படல் வேண்டும்.

**மாகாண நிரலிலுள்ள ஏதேனும் விடயம் அல்லது பணி பற்றிய நோக்கங்களுக்காக** பயன்படுத்தப்படவுள்ள மேலே குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் காணியை விடுவித்தலுக்கென மாகாண நிர்வாகம் மத்திய அரசாங்கத்துடன் பேசித்தீர்க்கலாம். அத்தகைய காணியை மத்திய அரசாங்ம் விடுவிப்பதற்கு மறுத்துரைக்குமிடத்து 14, 15, 16, ஆம் பந்திகளிலுள்ள ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும்.



மத்திய அரசாங்கம் அரசியலமைப்பின் ஆரம்பத்திற்கு முன் பாரதீ னப்படுத்திய தலைநகர ஆட்பு லத்தில் அமைந்துள்ள அரச காணியின் பயன்பாட்டிற்கு உரித் துடையதாக்கப்படல் வேண்டுமென்பதுடன் உரித்தானது அரசியலமைப்பின் ஆரம்பத்திலிருந்து குடியரசுடன் தொடர்ந்தும் இருத்தல் வேண்டும்.

11. மாகாணத்திலுள்ள எல்லா அனைத்துக் காணியின் பயன்பாட்டிற்கு ஒவ்வொரு மாகாணமும் உரித்துடைய தாக்கப்படல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அரச காணியானது

(அ) ஏதேனும் காணியில் சட்ட ரீதியான உடைமை வைத்திருக்கும் அல்லது குடியேறியிருக்கும் ஏதேனும் ஆளினால் அரசியலமைப்பு தொடக்கத்தை உடனெடுத்து முன்னராக அனுபவிக்கப்பட்ட உரிமைகள் அத்துடன்

(ஆ) மாகாண நிரலில் வெளிப்படுத்தப்பட்ட நோக்கங்களுக்கான அந்த மாகாணத்தின் மாகாண நிர்வாகத்தைக் கையுதிர்த்தல் பற்றியும் பிரயோகிக்க முடியுமான எழுத் திலான சட்டம் மற்றும் தேசிய கர்ணி மற்றும் நீர்ப்பயன்பாட்டுக் கொள்கைக்கு உட்பட்டு காணியுரிமைக் காலம் காணியை அறுதி முடித்தலும் பாரதீனப்படுத்துதலும் காணிப்பயன்பாடு, காணி நிர்ணயமும் காணி மேம்பாடும் அடங்கலாக அத்தகைய காணியின் அல்லது காணி மீதான உரிமைகளை பிரயோகிப்பதற்கென பகிரங்க நிர்வாகம் உரித்துடையதாக்கப்படுதலும் வேண்டுமென்பது இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளாயிருத்தல் என்பவற்றிற்கு உட்படுதல் வேண்டும்.

12. காணி அபிவிருத்தித் திட்டங்களில் காணிப் பங்குகளின் விநியோகமானது அரசியலமைப்புப் பிரகடனத்திற்கு முன்னர் ஆரம்பித்துள்ளதுடன் பூர்த்தி செய்யப்படாதவைகள் அரசியலமைப்பு ஆரம்பிப்பதற்கு முன்னர் அவ்வாறான திட்டங்களுக்குப் பிரயோகிக்கப்பட்ட தெரிவடிப்படைக்கு அமைவானதாக இருக்க வேண்டும்.

13. அரசியலமைப்பு ஆரம்பமான பின்னர் காணிகளில் குடியேற்றல் திட்டங்களில் முன்னுரிமையானது காணியற்ற நபர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வாறான நபர்களின் மத்தியில் முன்னுரிமையானது

(அ) முதலாவதாக சம்பந்தப்பட்ட மாவட்டத்தினைச் சேர்ந்த சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவோர் உப பிரிவினையும் சேர்ந்த நபர்களுக்கு

(ஆ) இரண்டாவதாக சம்பந்தப்பட்ட மாவட்டத்தினைச் சேர்ந்த நபர்களுக்கு

(இ) மூன்றாவதாக சம்பந்தப்பட்ட மாகாணத்தினைச் சேர்ந்த நபர்களுக்கு

(ஈ) நான்காவதாக ஏனைய நபர்களுக்கு

14. தேசிய நிரலிலுள்ள விடயமொன்றின் நோக்கத்திற்காக மாகாண மொன்றிலுள்ள அரச காணி தேவைப்படுகின்றது என மத்திய அரசாங்கம் திருப்திப்படுமிடத்து மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட மாகாண நிர்வாகத்தின் கலந்தாராய்வின் பின் மத்திய அரசாங்கத்திற்கு அல்லது மத்திய அரசாங்கம் குறித்துரைக்கும் அத்தகைய பகிரங்க அதிகார சபைக்கு அந்த நோக்கத்திற்கென அத்தகைய காணி நியாயமான முறையில் தேவைப்படுத்த ப்படலாம் என மாகாண நிர்வாகத்தைக் கோரலாம் என்பதுடன் மாகாண நிர்வாகம் அத்தகைய தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

**பிணக்குத் தீர்வு-காணி**

15. மாகாண சபையொன்று இணங்கியொழுகாதவிடத்து பிரதம அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர், முதலமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட தவிசாளர் ஆகியோரைக் கொண்ட நியாயசபையொன்றின் நடுத்தீர்ப்புக்கென ஜனாதிபதி இந்த விடயத்தை ஆற்றுப்படுத்துதல் வேண்டும். தவிசாளரின் நியமனத்தில் உடன்பாடில்லாதவிடத்து அரசியலமைப்பு பேரவையினால் தவிசாளர் பெயர் குறித்து நியமிக்கப்படல் வேண்டும்.

16. அத்தகைய நியாயசபையின் தீர்மானமொன்று அரசாங்கத்தின் உரிமைக்கு உட்பட்ட மத்திய அரசாங்கத்தினதும் மாகாண சபையினதும் கூட்டிணைவாக இருத்தல் வேண்டும்.

மாகாண சபை அத்தகைய தீர்மானத்திற்கு எதிராக அரசியலமைப்பு நீதிமன்றத்தில் மனுச் செய்தல் வேண்டும். அத்தகைய தீர்மானத்தை விசாரணை செய்வதற்கு விளம்புவதற்கு அல்லது பிரச்சினை பற்றி ஏதேனும் வழிமுறையில் அழைப்பு விடுவதற்கு வேறு ஏதேனும் நீதிமன்றம் அல்லது நியாய சபைத் தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**தேசிய பந்தோபஸ்து அல்லது பாதுகாப்பிற்கு தேவைப்படும் காணி**

17. சம்பந்தப்பட்ட மாகாண சபை நிர்வாகத்துடன் மத்திய அரசாங்கம் கலந்தாலோசனையை மேற் கொண்ட பின் மாகாணமொன்றிலுள்ள அரச காணியானது தேசிய பந்தோபஸ்து அல்லது பாதுகாப்பிற்கு அவசியமாகின்றதென பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி திருப்தியடைந்திருக்கையில் பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி அந்தக் காணியை மத்திய அரசாங்கத்திற்கு அல்லது ஜனாதிபதி குறித்துரைத்தவாறான அத்தகைய பகிரங்க அதிகார சபைக்கு கிடைக்கப் பெறத்தக்கதாக மேற்கொள்ளுமாறு மாகாண நிர்வாகத்திற்கு பணிப்புரை விடுக்கலாம். மேலும் அத்தகைய பணிப்புரையில் அத்தகைய காணியானது அந்த நோக்கத்திற்கு நியாய பூர்வமாக தேவைப்படலாம் என்பதற்கான காரணங்கள் குறித்துரைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

18. அதன் பின் பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி அத்தகைய குறித்துரைக்கப்பட்ட காணியளவை பொறுப்பேற்பதற்கு (சுவீகரிப்பதற்கு) மத்திய அரசாங்கத்தின் குறித்துரைக்கப்பட்ட நிறுவனமொன்றிற்கு எழுத்து மூலமாக் அதிகாரமளிக்கலாம். மேலும், அதன் பிரகாரம் சொல்லப்பட்ட காணி கையாளப்படலாம்.

19. 17 மற்றும் 18 ஆம் பந்திகளில் செயலாற்றுகின்ற சந்தர்ப்பத்தில் 14, 15 மற்றும் 16 ஆம் பந்திகளிலுள்ள ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படக் கூடாது.

20. மாகாணசபை, அதிகார சபை அல்லது ஜனாதிபதியின் மேற்சொன்ன தீர்மானத்தினால் அல்லது அத்தகைய காணி சுவீகரிப்பினால் துயருறும். ஆள் அத்தகைய தீர்மானம் அல்லது சுவீகரிப்புக்கு எதிராக இடைக்கால அல்லது இறுதியான நிவாரணம் கோரி அரசியலமைப்பு நீதிமன்றத்தில் மேன் முறையீடு மேற்கொள்ளலாம். அதன் ஏற்பாடுகளுக்கு அமைவாக அத்தகைய தீர்மானம் அல்லது சுவீகரிப்பு பற்றி வேறு ஏதேனும் நீதிமன்றம் அல்லது நியாயசபை விசாரணை மேற்கொள்ளுதல், விளம்புதல் , பிரச்சினை பற்றி ஏதேனும் வழிமுறையில் அழைப்பு விடுத்தல் தொடர்பான தத்துவத்தை அல்லது நியாயாதிக் கத்தைக் கொண்டிருத்தல் கூடாது.

**தேசிய காணி ஆணைக்குழு**

21. ஏனையசுயாதீன ஆணைக்குழுக்களின் வரிசையில் தேசிய காணி ஆணைக்குழு அரசியலமைப்பின் பிரகாரம் தாபிக்கப்படல் வேண்டும். அனைத்து பெரும்பான்மை சமூகங்களினது பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் அதே வேளையில் ஒரு புறம் மத்திய அரசாங்கத்தினதும் மறுபுறம் மாகாணங்களினதும் சமமான பிரதிநிதித்துவத்தையும் தேசிய காணி ஆணைக்குழுவின் யாப்பு உறுதிசெய்தல் வேண்டும்.

22. தேசிய காணிப் பயன்பாடு பற்றிய ஏதேனும் கொள்கை உருவாக்கத்தில் மாகாணத்தின் சட்டவாக்க நிறுவனங்களுடனும் மக்களுடனும் விரிவான கலந்தாலோசனை செயன்முறையொன்று தேசிய காணி ஆணைக்குழுவால் மேற் கொள்ளப்படல் வேண்டும்.

**தேசிய காணி ஆணைக் குழுவின் தத்துவங்களும் பணிகளும்:**

23. தேசியகாணி ஆணைக் குழு, பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட அரசியலமைப்பு மற்றும் சட்டத்திற்கு உட்பட்ட வாறு, பின்வரும் பொறுப்பினைக் கொண்டிருக்கும்:

→

# மாகாணங்களுக்கு இரண்டாவது சபை ஸ்தாபித்தல்

(அ) பொருத்தமான வனப் போர்வையின் அளவு தொடர்பாகவும், இயற்கை வளங்களைப் பயன்படுத்தல் தொடர்பாகவும் சுற்றுச்சூழலின் தரம் தொடர்பாகவும் ஏனைய பொருத்தமான விடயங்கள் தொடர்பாகவும் சர்வதேச தராதரங்களைக் கருத்திற் கொண்டு தேசிய காணிப்பாவனை மற்றும் நீர்க் கொள்கையினை உருவாக்கல். (மாகாணங்களுக்கு இடையேயான நீர்ப்பாசனம், நீர் வழங்கல், நீர்மின் கருத்திட்டங்கள் ஆகியவை தொடர்பான கொள்கையை இது உள்ளடக்குதல் வேண்டும்.)

இவ்வாறான கொள்கையினை உருவாக்குகையில் மத்திய அரசாங்கமோ அல்லது மாகாண நிர்வாகமோ தமது சம்பந்தப்பட்ட கொள்கைகளை முன்னெடுக்கக் கூடிய அரசதற்றுணிவு எல்லைக்கு தேசிய காணி மற்றும் நீர் ஆணைக்குழு இடங்கொடுக்க வேண்டும்.

(ஆ) தேசிய காணிப்பாவனை, நீர்ப்பாசனம் மற்றும் நீர்ப்பாவனை வழிகாட்டல்களின் உருவாக்கமானது மேற்குறிப்பிட்ட கொள்கைக்கு செயலூக்கமளிக்கும்.

இவ்வாறான சகல வழிகாட்டல்களும் பாராளுமன்றத்தினதும் இரண்டாம் சபையினதும் சாதாரண பெரும் பான்மையினால் அங்கீகரிக்கப்பட்டால் மாத்திரமே செயற்பட முடியும்.


(இ) அங்கீகரிக்கப்பட்ட தேசிய காணி மற்றும் நீர்ப்பாவனை நீர்நிலைகளின் பாதுகாப்பு வழங்காட்டல்களுக்கு அமைவாக பிரகடனங்களை மேற்கொள்ளல்:

ஒதுக்கப்பட்ட காடுகளாக, பாதுகாக்கப்பட்ட காடுகளாக, தேசிய பூங்காக்களாக, கட்டாய தேசிய ஒதுக்கங்களாக, இயற்கை ஒதுக்கங்களாக, புகலிடங்களாக மற்றும் தேசிய மரபுரிமை வனப் பிரதேசங்களாகக் குறித்தொதுக்கப்படும் பிரதேசங்கள் தொடர்பில் அவ்வாறான ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களை மீளாய்வு செய்வதை பிரகடனங்கள் உள்ளடக்கலாம்; மற்றும் ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள வனப் போர்வையின் பொருத்தமான அளவு, திணை நில உயிரினங்கள் மற்றும் தாவரங்களின் பாதுகாப்பு மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்புத் தொடர்பில் மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண நிர்வாகங்களுக்கு; இவ்வாறான சகல வழிகாட்டல்களும் பாராளுமன்றத்தினதும் இரண்டாம் சபையினதும் சாதாரண பெரும்பான்மையினால் அங்கீகரிக்கப்பட்டால் மாத்திரமே செயற்பட முடியும்.

(ஈ) கண்காணிப்பு மற்றும் மீளாய்வு செய்தல், காணி மற்றும் நீர்ப்பாவனை மேற்குறிப்பிட்டவாறு உருவாக்கப்பட்ட வழிகாட்டல்கள் அல்லது மேற்கொள்ளப்பட்ட பிரகடனங்களுக்கு இயைபுறல்,

24. கொள்கையினையும் வழிகாட்டல்களையும் உருவாக்குகையிலும் பிரகடனங்களை மேற்கொள்ளுகையிலும் மத்திய அரசாங்கம், மாகாண சபைகள் அல்லது அவற்றின் ஏதாவது அதிகார அமைப்புக்கள் அல்லது அதிகாரி அல்லது நபர் மேற்கொள்ளும் முறையீடுகளை அல்லது விண்ணப்பங்களை தேசிய காணி மற்றும் நீர் ஆணைக்குழு பரிசீலிக்கலாம்.

25. மத்திய அரசாங்கம் அல்லது மாகாண நிர்வாகம் இணங்கியதன் பின் சந்தர்ப்பம் பற்றி விசாரிக்கப்படல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட வழிகாட்டல்கள் அல்லது வெளிப்படுத்தல்களுடன் இணங்கியொழுகாது கலந்தாராய்வில் மத்திய அரசாங்கம் அல்லது மாகாண நிர்வாகம் ஈடுபடுகிறது எனும் அபிப்பிராயத்தை ஆணைக்குழு உருவாக்கி அதை பாராளுமன்றத்தினாலும் இரண்டாவது சபையினாலும் அங்கீகரித்து அந்த விடயத்தை அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கு ஆணைக்குழு ஆற்றுப்படுத்தலாம்.



26. அரசியலமைப்பு நீதிமன்றம் அதை மேற்கொள்ள வேண்டியது அவசியம் எனும் அபிப்பிராயத்தை கொண்டிருக்குமிடத்து மத்திய அரசாங்கம் அல்லது மாகாண நிர்வாகம் (அல்லது அதன் குறித்துரைக்கப்பட்ட அலுவலர்கள்/ அதிகாரிகள்) அத்தகைய வழிகாட்டல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் அல்லது அரசியலமைப்பு நீதிமன்றம் பணித்தவாறான அதன் சில பகுதிகள் ஆகியவற்றை இணங்கி ஒழுகக் கூடிய வாறு நிரந்தர அல்லது இடைக்கால கட்டளைகளை அரசியலமைப்பு நீதிமன்றம் மேற்கொள்ளலாம்.

27. அரசியலமைப்பு நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிரந்தர அல்லது இடைக்காலகட்டளைக்குஎதிராகமாகாண நிர்வாகம் செயற்படுமிடத்து குறித்துரைத்த காலப்பகுதிக்கென இணங்கியொழுகுதலை உறுதி செய்ய வேண்டிய தேவை க்கு ஏற்றவாறு அத்தகைய குறித்துரைக்கப்பட்ட காணி மீதான கட்டுப்பாட்டை மத்திய அரசாங்கம் பிரயோகிக்கத்தக்கவாறு அரசியலமைப்பு நீதிமன்றம் கட்டளையை ஏற்படுத்தலாம்.

28. ஆணைக்குழுவின் வழிகாட்டல்களும் வெளிப்படுத்தல்களும் பாராளுமன்றத்தினாலும் இரண்டாவது சபையினாலும் அங்கீகரிக்கப்பட்டதும் அவை இறுதியானதாகவும் நிறைவேற்றப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அரசியலமைப்பு நீதிமன்றம் தவிர்ந்த வேறு ஏதேனும் நீதிமன்றம் அல்லது நியாய சபையானது அத்தகைய வழிகாட்டல்கள் மற்றும் வெளிப்படுத்தல்களின் செல்லுபடி ஆகும் தன்மை பற்றிய ஏதேனும் அடிப்படையில் விசாரணை செய்தல், விளம்புதல், பிரச்சினை பற்றி ஏதேனும் வழிமுறையில் அழைப்பு விடுத்தல் ஆகியவற்றுக்கான நியாயாதிக்கத்தை கொண்டிருத்தல் கூடாது.

**மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனக் கருத் திட்டங்கள்.**

29. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களுக்கிடையில் கட்டளையானது செல்லுபடியாகுமிடத்து மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனக் கருத்திட்டங்கள் திட்டங்களாகும்.

30. அரசியலமைப்பை பிரகடனம் செய்வதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறாத காணி அபிவிருத்தி திட்டங்களில் ஒதுக்கப்பட்ட காணிப் பகிர்வு அரசியலமைப்பு பிரகடனப்படுத்தப்பட முன்னர் அத்தகைய திட்டங்களில் இருந்த மூலப் பிரமாணங்களின் அடிப்படையிலேயே இருத்தல் வேண்டும். அரசியலமைப்பு பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர் காணி வழங்கல் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதாயின் சட்டத்தினால் ஏற்றுக் கொள்ளும் ஒரு மாவட்டத்தின் (மாவட்டங்களின்) உப பிரிவில் உள்ள காணியற்ற மக்களுக்கு, பிறகு மாவட்டத்தின் (மாவட்டங்களின்) காணியற்ற மக்களுக்கு அதற்குப் பிறகு உரிய மாகாண (மாகாணங்களின்) மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

**IV. மாகாண நிரல் விடயங்கள் பற்றி மத்திய அரசாங்கம் சட்டம் இயற்றுதல்.**

1. தற்போதைய மத்திய அரசாங்கத்தின் அனைத்து சட்டமியற்றுதலும் (மாகாண நிரல் விடயங்கள் பற்றிய) வலுவில் உள்ளதோடு மாகாணத்தினால் சட்டமாக்கப்பட்ட சட்டத்தினால் திருத்தப்படும் அல்லது நீக்கப்படும்வரை மாகாணங்களுக்கு பிரயோகித்தல் வேண்டும். மேலும் அதற்கிணங்க அத்தகைய சட்டத்தின் கீழ் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளினால் பிரயோகிக்கப்படக்கூடிய தத்துவங்கள் சம்பந்தப்பட்ட மாகாண அமைச்சர் அல்லது அதிகாரியினால் பிரயோகிக்கப்படக் கூடியது.

2. அத்தகைய சட்டத்திற்கு மாகாண சபைகள் அனைத்தும் இணக்கம் தெரிவிப்பின் மாகாண சபை நிரலிலுள்ள ஏதேனும் விடயம் பற்றி மத்திய அரசாங்கம் சட்டமாக்கலாம்.

பகிரப்பட்ட அதிகாரங்கள் மாகாணங்களில் இருந்து ஒரு தலைப்பட்சமாக பறிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக அரசியலமைப்பு ரீதியான போதிய காப்புகளை கடைப்பிடிக்காமல் மத்திய அரசாங்கம் மாகாண சபை நிரலில் உள்ள கருமங்கள் மீதான சட்டவாக்கத்தை அத்தகைய சட்டவாக்கத்துடன் உடன்படாத மாகாண சபை ஏதேனும் தொடர்பாக அமைக்கக் கூடாது.

**நானாவித**

அரசியலமைப்பு சட்டமாக்கப்பட்டதன் விளைவாக, மாகாண சபைகள் சட்டம் மற்றும் மாகாண சபை தேர்தல்கள் சட்டம் ஆதியன புதிய சட்டவாக்கத்தினால் பொருத்தமான முறையில் திருத்தப்பட அல்லது மாற்றீடு செய்யப்பட வேண்டியிருக்கும்.

**V. பிரதான ஆட்புலம் தாபித்தல்**

1. தேசிய தலைநகரும் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் மத்திய நிலையமும் பிரதான ஆட்புலத்துக்குள் கொழும்பு நகரமாக இருத்தல் வேண்டும்.

2. இலங்கையின் பிரதான ஆட்புலம் கொழும்பு நகரம் உள்ளடங்கலாக அரசியலமைப்பின் XXX அட்ட வணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள மேல் மாகாணத்துக்குள் அமைந்துள்ள இடப்பரப்பாக இருத்தல் வேண்டும்.

**அரசாங்கம்**

3. பாராளுமன்ற மற்றும் மாகாண சபைத்தேர்தல் நோக்கத்திற்காக தலைநகர் ஆட்சிப் பகுதி மேல் மாகாணத்தின் பகுதியினையும் கொண்டிருக்கலாம்.

4. மேல் மாகாண சபையானது தலைநகர ஆட்சிப்பகுதி தொடர்பில் மாகாணப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு அதன் அதிகாரங்களை நிறைவேற்றலாம்.

தலைநகர ஆட்சிப் பகுதி தொடர்பாகக் குறித்துரைக்கப்பட்ட விடயங்களும் செயற்பாடுகளும் மத்திய அரசாங்கத்தினால் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளினுள் வருபவையாக தேசியப் பட்டியலில் தனித்துவமாக அங்கீகரிக்கப்படுகையில், அவ்வாறான அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் மத்திய அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படல் வேண்டும் என்பதற்கு உட்பட்டதாக [ உதாரணம்: சட்டமும் ஒழுங்கும், தலைநகர் ஆட்சிப்பகுதியில் நகரத் திட்டமிடலும் அமுல்படுத்தலும், தலைநகர் ஆட்சிப்பகுதியில் பொதுப் பயன்பாடுகள் தலைநகர் ஆட்சிப்பகுதியினுள் வரும் வீதிகள் ( உள்ளூராட்சி அதிகார சபைகளினால் பேணப்படும் வீதிகள் நீங்கலாக), தலைநகர ஆட்சிப் பகுதியில் வடிகால்கள் மற்றும் நீர்வழிகள்].

5. இந்த உறுப்புரிமையின் கீழ் பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட சட்டத்தைத் தவிர மேல் மாகாண சபையின் சட்டங்கள் ஆட்புலத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். மாகாண சபை மற்றும் கீழ் பாராளுமன்றச் சட்டத்திற்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டால் பரராளுமன்றச் சட்டம் முரண்பாட்டின் அளவுக்கு நிலவும்

6. பாராளுமன்றச் சட்டத்தினால் வேறுவிதமாக ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளமை தவிர சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் அவற்றின் நிலப்பரப்பு நியாயாதிக்கத்தினுள் வரும் தலைநகர ஆட்சிப் பகுதியின் புவியியல் பிரதேசங்கள் தொடர்பில் அவற்றின் அதிகாரங்களைப் பிரயோகிக்கலாம்.

**VI. இரண்டாம் சபை**

1. பெரும்பாலும் மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டாம் சபையொன்றுதாபிக்கப்பட வேண்டுமென்ற கருத்தொருமிப்பு காணப்பட்டது.

2. மாகாண சபைகளிலிருந்து பெறப்பட்ட 45 உறுப்பினர்கள் (ஒரு மாற்றப்படக் கூடிய ஒற்றை வாக்கு அடிப்படையில் ஒவ்வொரு மாகாண சபையும் அத்தகைய மாகாண சபையின் 5 உறுப்பினர்களைப் பெயர் குறித்து நியமித்தல்) மற்றும் மாற்றப்படக்கூடிய ஒற்றை வாக்கு அடிப்படையில் பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 உறுப்பினர்கள் ஆகிய 55 உறுப்பினர்களை இரண்டாம் சபை கொண்டிருக்க வேண்டுமெனப் பரிந்துரை செய்யப்பட்டது. அத்தகைய 10 உறுப்பினர்களும் பகிரங்க வாழ்வில் அல்லது உயர் தொழிலில் தமக்கென்று சிறந்த நிலையை ஏற்படுத்திக் கொண்ட கீர்த்தி வாய்ந்த நேர்மையுடைய ஆட்களாக இருத்தல் வேண்டும்.

3. சாதாரண சட்டவாக்கத்தைத் தடுத்து நிறுத்தும் உரிமையை இரண்டாம் சபை கொண்டிருத்தல் கூடாது. ஆனால் சாதாரண சட்டவாக்கத்தை மீள் பரிசீலனைக்காக பாராளுமன்றத்திற்குத் திரும்பவும் ஆற்றுப்படுத்தலாம்.

சட்ட மூலங்கள் பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெற்ற பின்னர் அவை இரண்டாம் மதிப்பீட்டிற்கு முன்னதாக அதன் கருத்துக்களை எவையேனும் இருப்பின் பெற்றுக் கொள்வதற்காக இரண்டாம் சபைக்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். (தொடரும்)

# திரிபொலி இராணுவ முகாமிலிருந்து வழிநடத்தப்பட்ட லசந்த படுகொலைத் திட்டம்

## அதிர்ச்சித் தகவல் வெளியீடு

(கொழும்பு)

**மருதானை திரிபொலி இராணுவ முகாமைச் சேர்ந்த அணியினரே சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவை படுகொலை செய்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.**



இந்தக் கொலைக்கு கட்டளையிட்டவர் அரச புலனாய்வுச் சேவையின் உயர் பதவியை வகித்தவர் எனச் சந்தேகம் ஏற்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு அமைச்சின் அன்றைய உயர் அதிகாரி அறிந்தே இந்தக் கொலை நடந்துள்ளதாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை சம்பந்தமாக இராணுவ உறுப்பினர்கள் உட்பட பலரிடம் ஏற்கனவே வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. மேலும் இந்தக் கொலை பற்றி பல விடயங்களை அறிந்த இராணுவ அதிகாரி ஒருவர் தற்போது இராணுவத்தின் உயர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். கொலை தொடர்பாக விசாரணைகளை நடத்தி வரும் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், லசந்த விக்கிரமதுங்கவின் மகளிடமும் வாக்கு மூலங்களைப் பெற்றுள்ளனர்.

லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்படுவதற்கு முன்னர் தன்னிடம் கூறிய விடயம் ஒன்றை அவரது மகள் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் கூறியுள்ளார். இந்த வாக்கு மூலத்திற்கு அமைய விசாரணைக குழுவினர் தமது விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரியவருகிறது.

லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்வதற்காக சந்தேகநபர்கள் எடுத்து வந்த மோட்டார் சைக்கிள் என சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிளை விசாரணைக் குழுவினர் கண்டுபிடித்தனர். எனினும் இது விசாரணைகளைத் திசை திருப்ப உருவாக்கப்பட்ட வேறு ஒரு சம்பவம் எனவும் தெரிய வந்துள்ளது. இந்த சம்பவத்திற்கு அமைய வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தில் இராணுவத்தினர் இரண்டு பேரை கடத்திச் சென்று அநுராதபுரம் தம்மிரிஸ்வெவவில் சுட்டுக் கொன்று எரித்துள்ளனர். இதன் பின்னர் கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் திகதி குறித்த நபர்களைக் கடத்திச் சென்ற போது கைப்பற்றிய மோட்டார் சைக்கிள் அததியட்டிய பகுதியில் உள்ள ஆறு ஒன்றில் இருந்து மீட்கப்பட்டது.

இந்த ஆட்கடத்தல் சம்பவம் கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி 18 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மையில் ஒரு நாளில் நடந்துள்ளது. கடத்தப்பட்ட நபர்களின் உடற் பாகங்களை உறவினர்கள் அடையாளம் காட்டியதாகவும் தெரிய வந்துள்ளது. இதற்கு அமைய லசந்த கொலையுடன் மூன்று கொலைகள் நடந்துள்ளன. அதேபோல் லசந்த கொலை தொடர்பாக முதலில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனை போலியானது என்பது இரண்டாவதாக மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் தெரியவந்தது.

முதலாவது பிரேத பரிசோதனை களுபோவில வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி சுனில் குமார மேற்கொண்டிருந்ததுடன் தலையில் துப்பாக்கி தோட்டா பாய்ந்ததன் காரணமாக மரணம் சம்பவித்ததாக அவர் தனது பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறியிருந்தார்.

எனினும் தலைப் பகுதியில் கூரிய ஆயுதம் ஒன்றினால பல முறை தாக்கியதில் தலையில ஏற்பட்ட படுகாயம் காரணமாக இந்த மரணம் நிகழ்ந்ததாக இரண்டாவது பிரேதப் பரிசோதனையில் தெரிய வந்தது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## இலங்கையின் உருவத்தை மாற்றிய

# கொழும்பு துறைமுக நகரத்தை உள்ளடக்கிய புதிய வரைபடம் அடுத்த ஆண்டு வெளியீடு

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரத்தை உள்ளடக்கிய, இலங்கையின் புதிய வரைபடம் அடுத்த ஆண்டு வெளியிடப்படவுள்ளது. புதிய வரைபடத்தை தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், அடுத்த ஆண்டில் அது வெளியிடப்படும் என்றும் நிலஅளவைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதிய வரைபடம், கொழும்பில் அமைக்கப்படும் துறைமுக நகரம் உள்ளிட்ட மாற்றங்களை உள்ளடக்கியதாக இருக்கும் என்று நில அளவைப் பணிப்பாளர் உதய காந்த தெரிவித்துள்ளார்.

இந்த திருத்தப்பட்ட வரைபடம், அம்பாந்தோட்டைத் துறைமுக கட்டுமானப் பணிகளின் பின்னரான திருத்தங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை உருவாக்குவதற்காக, இலங்கையின் நிலப் பகுதியில் கடல் நீர் நிரப்பப்பட்டதும், கடற்பகுதியில் மண் நிரப்பப்பட்டு கொழும்பு துறைமுக நகரம் உருவாக்கப்பட்டுள்ளதால், தரைப் பகுதியின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதுமான சூழலில் புதிய வரைபடம் இந்த மாற்றங்களை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)



# அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைக்க சீனாவுடன் இலங்கை பேச்சு

(கொழும்பு),

அம்பாந்தோட்டை துறைமுகம் அருகே, 3 பில்லியன் டொலர் செலவில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை நிறுவுவது தொடர்பாக, இரண்டு சீன நிறுவனங்களுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுக்களை நடத்தி வருவதாக உயர்மட்ட அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் மேர்ச்சன்ட்ஸ் போர்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தினால், 99 ஆம் ஆண்டு குத்தகைக்குப் பெறப்பட்டுள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை அமைக்க இலங்கை திட்டமிட்டுள்ளது.

இந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை அமைப்பதற்கான கூட்டு முயற்சித் திட்டம் ஒன்றை இரண்டு சீன நிறுவனங்கள் முன்வைத்திருப்பதாக முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் மங்கள யாப்பா தெரிவித்தார்.

ஆண்டுக்கு 5 மில்லியன் தொன் எண்ணெயை சுத்திகரிக்கும் வகையிலான இந்த ஆலைக்கான முதலீடு 2.5 பில்லியன் தொடக்கம் 3 பில்லியன் வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

எனினும் இந்தத் திட்டத்தை முன்வைத்துள்ள சீன நிறுவனங்களின் பெயர்களை அவர் வெளியிடவில்லை.

"இந்த முதலீடு பாரியது. சீன நிறுவனங்கள் இரண்டுடனும் நாங்கள் பேச்சுக்களை நடத்தி வருகிறோம்.

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு 500 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. நிலத்தை நாம் ஒதுக்கி வைத்திருக்க முடியாது. பலர் முதலில் நிலத்தைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கிறார்கள். அதற்குப் பின்னரே முதலீட்டாளர்களைத் தேடுகிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும் இந்தத் திட்டம் தொடர்பான விரிவான தகவல்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார். (இ-3)

## இன்று ஒரு தகவல்

### மனதிற்குள் ஒரு சவால்

இளவயதில் எனக்குப் படிப்பில் நாட்டம் இருந்தது இல்லை. என்னை நன்கு படிக்க வைக்கும் முயற்சியில் பெற்றோருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. பத்தாவதில் பெயில், மறுபடி பி.ஏவில் பெயில்.

ஒருமுறை என் வகுப்பு ஆசிரியரும் வேறு ஒருமுறை என் உறவினரும் சுட்டுப் போட்டாலும் உன் மண்டையில் எதுவும் ஏறாது; இப்படியே இருக்க வேண்டியதுதான் என்றார்கள். அவ்வளவு தான் வந்தது வேகம் என் மண்டையிலா ஏறாது என்கிறீர்கள்? என்று மனதிற்குள் கறுவிக்கொண்டேன். சவால் ஏதும் விடவில்லை.

எனக்குப் படிப்பில் சலிப்பும் சோர்வும் ஏற்படும் போதெல்லாம் இவர்கள் சொன்னது ஞாபகத்திற்கு வரும். வேகம் பெறுவேன். பிறகு நல்ல மதிப்பெண்கள் எல்லாம் பெற்று மேற்படிப்பு சட்டப்படிப்பு என்று கல்விப் பயிருக்கு நீர் ஊற்றினேன்.

நீ உருப்படவே மாட்டாய் என்றும் இதற்கு இணையாகவும் இதைவிட மோசமாகவும் பிறர் பழித்தாலும் சபித்தாலும் உடனே பலரும் சோர்ந்து போகிறார்கள். அல்லது என்னையா அப்படிச் சொன்னாய்? உன்னைப் பழி வாங்குகின்றேன். பார் என்று புறப்படுகிறார்கள். இரண்டுமே தவறான அணுகுமுறைகள்.

நீ முன்னேறு நன்கு உழை உன்னைப் போல் உண்டா! என்று சொல்வதைவிட மேற்கூறிய கடுமையான விமர்சனங்களைத் தாம் நமக்கு உண்மையான ஊக்கத்தைத் தருபவை.

நம்மைப் பற்றிக் கடுமையாக விமர்சித்தவர்கள் மீது கோபத்தைக் காட்டுவதை விட அக் கோபத்தை நம் மீதே காட்டி அவர்கள் அப்படிச் சொன்ன பிறகும் இப்படியே இருக்கிறாயே! அவர்கள் சொன்னதைப் பொய்யாக்க வேண்டாமா? என்று நம் மனத்தைப் பார்த்து நாம் கேட்க வேண்டும். உடனே நமக்குள் இருக்கிற ஆற்றல் உடைந்துவிட்ட அணை நீர் போல் வெளிப்பட ஆரம்பிக்கும்.

நிலத்தில் அமுக்கினால் மண்ணோடு மண்ணாய்ப் புதைந்து போகக் கூடாது. விதையாய் மாறி முளைக்க வேண்டும். கடலில் அமுக்கினால் நீரைக் குடித்து மாண்டுவிடக் கூடாது. முத்துடன் வெளிக் கிளம்ப வேண்டும்.

வீறு கொண்டு எழுபவர்களே வாழ்க்கையில் முன்னேறுகிறார்கள். நீ என்ன வேண்டுமானாலும் சொல். நான் எருமை மாடு மீது பெய்த மழை மாதிரி இருப்பேன் என்பவர்கள் தலை தூக்கவே முடியாது.

நம் மீது வீசப்படும் கற்களைப் பார்த்து ரத்தக் காயம் பட்டு வீழ்ந்து விடக் கூடாது. படிக்கட்டுக்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

பாராட்டினாலும் மனமாற்றம் இல்லை ; கடுமையாக விமரிசித்தாலும் மனமாற்றம் இல்லை என்றால் அப்புறம் எப்படித்தான் முன்னேறுவதாக உத்தேசம்?

**லேனா தமிழ்வாணன்**

# என்னைக் கொல்ல வருபவன் பைத்தியக்காரன்

## இப்படிச் சொல்கிறார் மகிந்த

(கொழும்பு)

பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள தனது வீட்டுக்குள் கத்தியுடன் நுழைய முயன்ற நபரை பாதுகாப்புத் தரப்பினர் கைது செய்தமை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ, கத்தியை எடுத்துக் கொண்டு என்னைக் கொலை செய்ய யாராவது வந்தால் பைத்திய காரனாகவே அவன் இருப்பான் எனத் தெரிவித்தார். (இ-3)



# 2018 வரவு-செலவுத்திட்டத்தில் எந்தச் சலுகையும் இல்லை

## பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

2018 ஆம் ஆண்டுக்காக எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத்திட்டத்தில் மக்களுக்கான எவ்வித சலுகைகளையும் எதிர்பார்க்க முடியாது.

ஏனெனில் சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்துகொண்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரமே வரவு-செலவுத்திட்டம் தயாரிக்க வேண்டியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.



2018 ஆம் ஆண்டுக்காக அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ள வரவு- செலவுத்திட்டத்தில் மக்களுக்கான சலுகைகளை எதிர்பார்க்க முடியுமா என வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நிதியமைச்சர் மங்கள சமரவீர வரவு -செலவுத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு சலுகை வழங்குவதற்கு எதிர்பார்த்தாலும் அவரால் அதனைச் செய்ய முடியாது. ஏனெனில் சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை கடன் பெற்றுள்ளது. அதற்காக நாணய நிதியத்துடன் உடன்படிக்கை ஒன்று செய்யப்பட்டுள்ளது.

அவ்வுடன்படிக்கையின் பிரகாரம் ஐந்து பிரதான நிபந்தனைகள் உள்ளன. அதாவது அரசாங்கத்தின் வருமானத்தை விரைவாக அதிகரிக்க வேண்டும். அரசாங்கத்தின் செலவுகளை முடியுமான வரையில் குறைக்க வேண்டும். வரவு மற்றும் செலவின் இடைவெளியைக் குறைக்க வேண்டும். நாணயத்தின் பெறுமானத்தை அதிகரிக்க வேண்டும். அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுத்தும் நிறுவனங்களை தனியார்மயப்படுத்த வேண்டும் அல்லது விற்பனை செய்யப்படல் வேண்டும் என்பனவே அந்நிபந்தனைகளாகும்.

எனவே குறித்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே வரவு- செலவுத்திட்டம் தயாரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நிதியமைச்சர் தள்ளப்பட்டுள்ளார். ஆகவே சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு- செலவுத்திட்டத்தின் மூலம் மக்களுக்கு எவ்வித சலுகைகளையும் எதிர்பார்க்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

### புதிய அரசியல் அமைப்பை விட

# சைட்டம் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு அவசியம்

## 1200 வைத்தியர்கள் இல்லை – அமைச்சர் சுசில் சுட்டிக்காட்டு

புதிய அரசியலமைப்பை அமைப்பதை விடவும் சைட்டம் பிரச்சினையின் மீது அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.



கடந்த ஏழு மாதங்களாக வைத்திய பீட மாணவர்கள் 6500 பேர் விரிவுரைகளுக்கு செல்லவில்லை. இதனால் புதிதாக 1200 வைத்தியர்கள் வைத்தியசாலைகளுக்கு செல்லவாய்ப்பில்லை. இந்தப் பிரச்சினையை அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டும்.

அரசாங்கம் விளையாடுவது நாட்டின் எதிர்காலத்துடன். என்னுடைய தனிப்பட்ட கருத்து என்னவெனில் நாட்டுக்கு அரசியல் யாப்பை சரிசெய்வதை விட முதன்மையளிக்கப்பட வேண்டிய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதாகும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-3)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1200

Search for people, places and things | Nagendram Home

### சயனி




### கயன்




### சதுரியா




### புவிதரன்




### தனஜன்




### வேணுகா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# யாழ்.மாநகர சபை வட்டாரங்களும் அங்கத்தவர்கள் எண்ணிக்கையும் நேற்றும் இன்றும்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

யாழ்ப்பாண மாநகர சபையில் முதலில் 25 தனியங்கத்தவர் வட்டாரங்களும் ஒரு இரட்டை அங்கத்தவர் வட்டாரமும் உருவாக்கப்பட்டு இருந்தது. உள்ளூராட்சித் தேர்தல் மீளாய்வுக் குழு மாநகர சபையின் எல்லா வட்டாரத்தையும் தனி அங்கத்தவர் வட்டாரமாக்கியது.மேலும் வட்டாரங்கள் கிராம அதிகாரிகள் பிரிவு அடிப்படையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் வரும் கிராம அதிகாரி பிரிவுகளான ஜே/98 வண்ணார்பண்ணை வடமேற்கு, ஜே/123 கொக்குவில் தென்கிழக்கு, ஜே/94 மத்திய அரியாலை வடக்கு, ஜே/96 மத்திய அரியாலை தெற்கு ஆகிய பிரிவுகளின் ஒருபகுதி யாழ்ப்பாணம் மாநகர சபைக்குள்ளும் மறுபகுதி நல்லூர் பிரதேச சபைக்குளும் அடங்குகின்றன. மேற்குறிப்பிட்ட கிராம அதிகாரி பிரிவுகளைத் தவிர யாழ்ப்பாண மாநகர சபைக்குள் வரும் ஏனைய கிராம அதிகாரி பிரிவுகள் முழுமையாக ஒரு வட்டாரத்துக்குள் அடக்கப்பட்டுள்ளன. நகர வட்டாரங்கள் சில ஒரு கிராம அதிகாரி பிரிவையும் சில இரண்டு கிராம அதிகாரி பிரிவுகளையும் சில மூன்று கிராம அதிகாரி பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளன. பல்வேறு சமூக, பொருளாதார குடிசன மற்றும் புவியியல் காரணிகள் கருத்தில் எடுத்து வட்டாரங்கள் பிரிக்கப்பட்டன. வட்டார ரீதியில் தங்களுக்குரிய பிரதிநிதிகளை பெறவில்லை எனக்கருதும் சமூகம் மற்றும் நகர் பகுதிகள், கட்சிகளுக்கு அழுத்தம் கொடுத்து விகிதாசாரப் பட்டியலில் இடம் பெறுவதன் மூலம் தங்கள் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் சந்தர்ப்பம் உண்டு. வட்டார ரீதியில் 27 பேர் தெரிவு செய்யப்படும் பொழுது 18 பேர் விகிதாசார ரீதியில் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும். மேலும் மொத்த அங்கத்தவர்களில் 11 பெண் அங்கத்தவர்கள் கட்டாயமாக இருக்க வேண்டும் என்பதும் நிபந்தனையாகும்.

யாழ்ப்பாண மாநகர சபையின் வட்டார விபரங்கள், வட்டார இலக்கம், பெயர் உட்படும் பகுதிகள், மக்கள் தொகை பின்வருமாறு,

நகரின் மொத்த குடித்தொகை 2012 இல் 78808 ஆக இருந்தது. ஒரு வட்டாரத்தின் சராசரி மக்கள் தொகை 2918 ஆகும். வட்டாரங்களுக்கிடையேயான குடித்தொகையில் சிறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. கிராம அதிகாரி பிரிவுகளை முழுமையாகக் கொண்டதாலும் சில நலிந்த பிரிவினரின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகளாலும் இச்சிறு வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. கொழும்புத்துறை, வண்ணார் பண்ணை வடக்கு, கந்தர்மடம் வடமேற்கு, குருநகர், ரெக்கிளமேசன் மேற்கு வட்டாரங்கள் 4000 இற்கு மேற்பட்ட மக்களைக் கொண்டுள்ளன. எந்தெந்தப் பிரதேசங்கள், எந்தெந்த சமூகப் பிரிவினர்கள் தங்கள் பிரதிநிதித்துவம் வட்டார ரீதியில் குறைவெனக் கருதுகின்றார்களோ அப்பிரிவினர்கள் விகிதாசார பட்டியலில் தங்கள் பிரதிநிதித்துவத்தை பெற முயற்சிக்கவேண்டும். இதனால் உரிய பிரதிநிதித்துவத்தைப் பெறமுடியாதெனக் கருதும் பிரதேசங்கள், சமூகங்கள், அரசியல் கட்சிகள், சுயேட்சைக்குழுக்களுடன் பேரம் பேசி தங்களுக்குரிய இடத்தை விகிதாசாரப் பட்டியலில் பெற்றுவிடவேண்டும்.

யாழ்ப்பாண மாநகர சபை 1940 இல் இருந்து இன்று வரை நல்ல பணிகள் பலவற்றைச் செய்துள்ளது. இதில் மாநகர சபை முதல்வர் சாம் சபாபதியில் இருந்து திருமதி யோகேஸ்வரி பற்குணம் வரை 20 முதல்வர்கள் யாழ்ப்பாண மாநகர சபையை அலங்கரித்துள்ளார்கள். பலர் மிகக் குறுகிய காலங்களுக்கே முதல்வராகஇருந்துள்ளார்கள். சாம் சபாபதி, அல்பிரட் துரையப்பா, விசுவநாதன், திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் ஒப்பீட்டு ரீதியில் கூடிய காலங்கள் முதல்வர் பதவியில் இருந்துள்ளனர். நகரில் காத்திரமான அபிவிருத்தியை செய்ததில் மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பா இன்றும் மக்கள் மனதில் நிற்கின்றார்.

மாநகர சபை 1983 இற்குப் பின்னர் மிகக் கூடிய காலம் விசேட ஆணையர்களின் நிர்வாகத்திற்குட்பட்டு இருந்தது. சி.வி.கே.சிவஞானம், பாலசிங்கம், கலாநிதி குணராசா, சரவணபவன், இராமலிங்கம் போன்றோர் முக்கியத்துவம் பெறுகின்றனர். மாநகர சபைக் கட்டடம் அழிக்கப்பட்டு பின்னர் மாநகர சபையை நல்லூரில் இயங்க வைத்ததில் அன்றைய விசேட ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானத்தின் பங்கும் பணியும் காத்திரமானது. யாழ்ப்பாண நூலகத்தை மீள்கட்டுமானம் செய்ததில் விசேட ஆணையாளர் இராமலிங்கத்தின் பங்கும் பணியும் மிகவும் சிறப்பானது. இவர் நூலக அபிவிருத்திச் சபையின் ஆலோசனையுடன் அன்றைய மாவட்ட பிரதம கட்டடப்பகுதி எந்திரி தேவராசாவின் சிறந்த சேவையைப் பெற்று யாழ்ப்பாண பொதுநூலக வேலையை சிறப்புற பூர்த்தி செய்ததுடன் யுனெஸ்கோவுடன் நல்லுறவை வளர்த்து நூலகத்திற்குத் தேவையான வளங்களைப் பெற்றுக்கொடுத்தார். கட்டுரையாசிரியர் நூலகர் குழுவில் அங்கத்தவராக இருந்ததால் விசேட ஆணையாளர் இராமலிங்கத்தின் பணிகளை நேரடியாக அறிய முடிந்தது.

யாழ்ப்பாண பொது நூலக மீள்கட்டுமானத்தில் மாநகர ஆணையாளர் இராமலிங்கத்தினதும் எந்தரி தேவராசாவினதும் பணிகள் என்றும் நினைவில் இருக்க வேண்டியன.

புதிய தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் 45 அங்கத்தவர்கள் மிகச் சிறந்த பணியை முன்னெடுக்க வேண்டும். மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர், திண்மக்கழிவகற்றல், நகரப் போக்குவரத்து மேம்பாடு, வீதி அபிவிருத்தி, ஒருங்கிணைந்த கழிவுநீர் அகற்றல், நகர மைய அபிவிருத்தி அழிவுக்குட்பட்ட பகுதிகளை புனருத்தாரணம் செய்தல், சேரிப்புறங்களின் மேம்பாடு, வீட்டு வசதி மேம்பாடு என பலதுறைகளில் விருத்திப் பணிகளை முன்னெடுக்க வேண்டியிருக்கின்றது. மேலும் நகரின் சுத்தமும் அழகும் குற்றம் குறை சூழ்நிலையும் பெரிதும் விரும்பப்படுபவை.

இத்தகைய சவால்களைத் துணிவாக முகங்கொடுத்து ஊழலற்ற அபிவிருத்தி நிர்வாகத்தை சிறப்பாக முன்னெடுக்கக்கூடிய அங்கத்தவர்களைத் தெரிவு செய்வது சமூகப் பொறுப்புள்ள மாநகர சபை வாக்காளரின் முக்கிய கடமையாகும். இக்கடமையை மாநகர வாக்காளர்கள் சிறப்பாகச் செய்வார்கள் என எதிர் பார்க்கலாம்.(தொடரும்)

| வட்டார இலக்கம் | பெயர் | உட்படும் கிராம சேவகர் பிரிவுகள் | குடித் தொகை 2012 |
|---|---|---|---|
| 01 | வண்ணார்பண்ணை வடக்கு | J/98 வண்ணார் பண்ணை வடக்கு<br>J/99 வண்ணார் பண்ணை வட மேற்கு நகருக்குள் வரும் பகுதி | 4709 |
| 02 | கந்தர்மடம் வடமேற்கு | J/100 வண்ணார் பண்ணை வட மேற்கு நகருக்குள் வரும் பகுதி<br>J/102 கந்தர்மடம் வடமேற்கு<br>J/123 கொக்குவில் தென் கிழக்கு | 4054 |
| 03 | கந்தர்மடம் வடக்கு | J/103 கந்தர்மடம் வட கிழக்கு | 2263 |
| 04 | நல்லூர் இராசதானி | J/106 நல்லூர் வடக்கு<br>J/107 நல்லூர் இராசதானி<br>J/108 நல்லூர் தெற்கு | 3954 |
| 05 | சங்கிலியன் தோப்பு | J/109 சங்கிலியன் தோப்பு | 3611 |
| 06 | அரியாலை | J/94 மத்திய அரியாலை நகர் பகுதி<br>J/95 மத்திய அரியாலை<br>J/96 மத்திய அரியாலை தெற்கு நகர்ப்பகுதி | 3663 |
| 07 | கலைமகள் | J/91 அரியாலை வடமேற்கு | 1831 |
| 08 | கந்தர்மடம் தெற்கு | J/104 கந்தர்மடம் தென்மேற்கு<br>J/105 கந்தர்மடம் தென் கிழக்கு | 2314 |
| 09 | ஐயனார் கோவிலடி | J/97 ஐயனார் கோவிலடி<br>J/101 நீராவியடி | 3244 |
| 10 | நாவாந்துறை வடக்கு | J/65 நாவாந்துறை வடக்கு | 2356 |
| 11 | புதிய சோனக தெரு | J/88 புதிய சோனகதெரு | 1249 |
| 12 | நாவாந்துறை தெற்கு | J/84 நாவாந்துறை தெற்கு | 1888 |
| 13 | சோனகதெரு | J/86 சோனகதெரு தெற்கு<br>J/87 சோனகதெரு வடக்கு | 3010 |
| 14 | பெரியகடை | J/82 வண்ணார்பண்ணை<br>J/80 பெரிய கடை | 3026 |
| 15 | அத்தியடி | J/78 அத்தியடி<br>J/79 சிறாம்பியடி | 3064 |
| 16 | சுண்டுக்குளி | J/76 சுண்டுக்குளி வடக்கு<br>J/77 மருதடி | 3234 |
| 17 | அரியாலை மேற்கு | J/92 அரியாலை மேற்கு<br>J/93 அரியாலை தென்மேற்கு | 2697 |
| 18 | பாசையூர் | J/64 பாசையூர் கிழக்கு<br>J/65 பாசையூர் மேற்கு | 2540 |
| 19 | கொழும்புத்துறை | J/61 நெடுங்குளம்<br>J/62 கொழும்புத்துறை கிழக்கு<br>J/63 கொழும்புத்துறை மேற்கு | 5222 |
| 20 | ஈச்சமோட்டை | J/66 ஈச்சமோட்டை | 2823 |
| 21 | கதிற்றல் | J/75 சுண்டுக்குளி தெற்கு | 1915 |
| 22 | திருநகர் | J/67 திருநகர் | 1630 |
| 23 | குருநகர் | J/70 குருநகர் கிழக்கு<br>J/71 குருநகர் மேற்கு<br>J/72 சின்னக்கடை | 4394 |
| 24 | யாழ்ப்பாண நகரம் | J/73 யாழ்ப்பாணம் மேற்கு<br>J/74 யாழ்ப்பாணம் கிழக்கு | 3130 |
| 25 | கோட்டை- கொட்டடி | J/81 கோட்டை<br>J/83 கொட்டடி | 3725 |
| 26 | ரெக்கிளமேசன் கிழக்கு | J/69 ரெக்கிளமேசன் கிழக்கு | 3546 |
| 27 | ரெக்கிளமேசன் மேற்கு | J/69 ரெக்கிளமேசன் மேற்கு | 4108 |

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## பிக்போஸிலிருந்து வெளியேறப்போவது இவர்தான்?




பிக் பாஸ் போட்டி முடிய இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில், இந்த வாரம் யார் வெளியேற்றப்படுவார்கள் என்ற கேள்வி ரசிகர்கள் மனதில் உள்ளது.

சுஜா மற்றும் கணேஷ் ஆகியோர் தான் குறைந்த அளவில் ஓட்டு பெற்றிருப்பதாக கமல் இன்று அறிவித்தார். அதனால் இவர்கள் இருவரில் ஒருவர் தான் வெளியேற்றப்படுவார்கள் என்பது உறுதியாகியுள்ளது. இவர்களில் ஒருவரை சினேகன் தன் புள்ளிகளை கொடுத்து காப்பாற்றலாம் என கமல் ஒரு வாய்ப்பு கொடுத்துள்ளார்.

சினேகன் கணேஷை காப்பாற்ற அதிகம் வாய்ப்புள்ளதால், சுஜா வெளியேற்றப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பிக்போஸ் பிரபலத்துக்கு இத்தனை கோடியா?



கமல்ஹாசன் தொகுத்து வழாங்கும் பிக்போஸ் நிகழ்ச்சி மிகவும் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. பாலிவுட்டில் தற்போது 11ஆவது சீசன் தொடாங்க இருக்கிறது.

தொடர்ந்து இந்நிகழ்ச்சியின் பல சீசன்களை தொகுத்து வழாங்கும் நடிகர் சல்மான் கான் தான் இந்த சீசனையும் தொகுத்து வழாங்குகிறார்.

இந்த புதிய சீசனுக்காக சல்மான் கானுக்கு ரூ. 11 கோடி சம்பளம் என கூறப்படுகறிது. இதற்கு முன் அவர் தொகுத்து வழாங்கிய 10வது சீசனுக்கு 8 கோடி கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தமிழில் பிரம்மாண்டமாக ஓடிக் கொண்டிருக்கும் பிக்போஸ் வரும் செப்டம்பர் 30ஆம் திகதி முடிய இருக்கிறது.

## ஓட்டுக்காக கிராம மக்களை ஏமாற்றுகிறாரா சினேகன்



கவிஞர் சினேகன் தற்போது பிக்போஸ் வீட்டின் இறுதி போட்டியாளராக நுழைந்துவிட்டார். நான் பிக்போஸ் டைட்டில் வென்றால் வரும் 50 லட்சம் ரூபாயை கிராமங்களில் உள்ள இளைஞர்களுக்கு பயன்படும் வகையில் பிக்பாஸ் நூலகம் அமைத்து அதை கமல் கையால் திறக்க செய்வேன் என இன்று கூறினார் சினேகன்.

வெற்றி பெற்றால் அந்த மேடையிலேயே இதற்கான அறிவிப்பை வெளியிடுவேன் என அவர் மேலும் உறுதியளித்தார்.

ஆனால் இதுப்பற்றி பின்னர் பேசிய நடிகர் ஹரிஷ், ஓட்டு வாங்குவதற்காக தான் சினேகன் கிராமங்கள் பற்றி பேசி சிம்பதி உருவாக்குகிறார் என குற்றம் சாட்டினார்.

## எல்லாருக்கும் முத்தம் கொடுக்கணும்ன எப்படி



பிக் பாஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழாங்கி வருகிறார் கமல்ஹாசன். படங்களில் மட்டுமே பார்த்துவந்த ரசிகர்கள் தற்போது அவரை சின்னதிரையிலும் வாரம்தோறும் பார்த்துவருகின்றனர்.

கவிஞர் சினேகன் சென்ற வாரம் கமலை கட்டியணைத்து ஒரு முத்தம் தர வேண்டும் என கேட்டார். அதற்கு கமல் சம்மதம் கூறினார்.

நடிகர் ஹரிஷ் கல்யாண் அதையே கமலிடம் கேட்டார். அதற்கு கமல், எல்லா ஆண்களும் இப்படி ஆசைப் படாதீங்க என கிண்டலாக கூறினார்.

## புளுவேல் விளையாட்டாக மாறிவரும் பிக்போஸ்



பிக்பாஸ் நிகழ்ச்சி நிறைவுப்பகுதியை நெருங்கி வருகிறது. இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் சமீப காலமாக போட்டியாளர்களுக்கு கொடுக்கப்படும் டாஸ்க்குகள் அவர்களை காயப்படுத்தும் படி அமைகிறது.

கொடுக்கப்படும் பெரும்பாலான டாஸ்க்குகள் மற்றவர்கள் பொருளை திருட வேண்டும், அவர்களை ஏமாற்ற வேண்டும், இரவெல்லாம் கண் முழிக்க வேண்டும், சண்டை போட வேண்டும் என்பது போன்றுதான் அமைகிறது.

இதன்மூலம் சமூகத்திற்கு என்ன கருத்துக்களை சொல்ல வருகிறார்கள் என்று புரியவில்லை. தற்போது உடலெல்லாம் க்ரீம்களை மாற்றிக்கொள்ள வேண்டும், சட்டையை கிழித்து பிச்சைக்காரர் போல இருக்க வேண்டும், உடல் முழுவதும் கடலைமாவை பூசிக்கொண்டு ஜகன்மோகினி மாதிரி திரிய வேண்டும் என புளுவேல் டாஸ்க்களை போல கொடுத்து வருகின்றனர். வெற்றிக்காக என்ன தவறு வேண்டுமானாலும் செய்யலாம் என்பதே ஒரே குறிக்கோளாக மாற்றி வருகிறது.

## டுவிட்டரில் குஷ்புவை வறுத்தெடுக்கும் ஓவியா ரசிகர்கள்



பிக்போஸ் என்ற நிகழ்ச்சி மூலம் முன்னணி நடிகைகளுக்கு இருக்கும் ரசிகர்கள் வட்டாரத்தை போல் பெற்றவர் நடிகை ஓவியா. நிகழ்ச்சியில் இருந்து இவர் வெளியேறியதும் பல ரசிகர்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

இந்த நிலையில் ஓவியா நடித்த கலகலப்பு படத்தின் இரண்டாம் பாகம் தயாராக இருப்பதாக ஏற்கெனவே செய்திகள் வெளியாகிவிட்டது. தற்போது அதனை உறுதிப்படுத்தும் வகையில் நடிகை குஷ்பு தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் பட விவரங்களை பதிவு செய்தார்.

அவரின் டுவிட்டுக்கு கீழே இந்த படத்தில் எங்கள் தலைவி ஓவியா இல்லையா, எங்களுக்கு அவர் படத்தில் இருக்க வேண்டும் என பலர் குஷ்புவை வறுத்தெடுத்து வருகின்றனர்.




# புதிதாக வந்த நட்பும் உதவியும்



...மறு நாள் வழக்கம் போல விவசாயியும், நாயும், மாடுகளை அழைத்து சென்றனர். அப்படி செல்லும் பொழுது எப்பொழுதும் போல் இல்லாமல் இந்த மாடு மட்டும் ஒதுங்கிப்போவதையும், அதே நேரத்தில் வித்தியாசமாகவும் நடந்து கொள்வதை நாய் கவனித்தது, தன்னுடைய கண் பார்வையை இதன்மீது வைக்க ஆரம்பித்தது.

வழக்கம்போல அவைகள் மேயும் இடத்திற்கு சென்றவுடன், இந்த மாடு மட்டும் ஒதுங்கி மறைவதை பார்த்த நாய் மெல்ல அதற்கு தெரியாமல் என்ன செய்கிறது என பார்த்தது.

அந்த மாடு மெல்ல ஒதுங்கி மேய்வது போல காண்பித்தது, அப்பொழுது பதுங்கி வந்த நரி இந்த மாட்டை சைகை காட்டி அழைத்து கூட்டி செல்ல ஆரம்பித்தது. நரியுடன் மாடும் செல்ல ஆரம்பித்தது. பின் தொடர்ந்த நாய், நரி ஏதோ சதி செய்து அழைத்து செல்கிறது என்பதை புரிந்து கொண்டது. சிறிது தூரத்தில் ஒரு பெரும் குழி இருப்பது அதற்கு ஞாபகம் வந்தது. உடனே ஒரு முடிவு எடுத்து நரியின் மீது பாய்ந்தது. திடீரென்று பாய்ந்த நாயை கண்டவுடன்நரி தலை தெறிக்க ஓட ஆரம்பிக்க நாய் வேண்டுமென்றே அந்த குழியை நோக்கியே விரட்ட ஆரம்பித்தது.

நாயிற்கு பயந்து ஓடிக் கொண்டிருந்த நரிக்கு உயிர் பயத்தில் குழியை மறந்து விட்டது.

அந்த குழியினுள் காலை வைக்க உள்ளே விழுந்தது. ஒரே அடியில் கொன்றுவிட வேண்டும் என்று காத்திருந்த புலி ஓங்கி அடிக்க பரிதாபமாய் உயிரை விட்டது நரி. அடித்த பின்தான் கவனித்தது புலி, அய்யையோ நரியை கொன்று விட்டோமே என மேலே பார்க்க அங்கே நாயும், பக்கத்தில் நரியை நம்பி வந்த மாடும் நின்று கொண்டிருந்தன. பார்த்து என்ன செய்ய? மேலே வர, மரக்கிளையை போட்டால் தானே வர முடியும். மேலே வர முடியாமல் சுற்றி சுற்றி வர ஆரம்பித்தது.

நாய், மாட்டிடம் பார்த்தாயா, புதிதாக ஒருவன் வந்து உதவி செய்கிறேன் என்று சொன்னால் அதில் உள்ள ஆபத்துக்களை எண்ணிப்பார்க்க வேண்டும் என்றது. மாடும் உண்மையை உணர்ந்து நாயிடம் மன்னிப்பு கேட்டது.

உன்னை சுற்றியருக்கும் ஆபத்துக்களை அறியாமல் புதிதாக வந்த நட்பை நம்பாதே. (முற்றும்)




- 1513 - எசுப்பானிய நாடுகாண் பயணி பாஸ்கோ நூனியெத் தே பால்போவா பெருங்கடல் ஒன்றை அடைந்தார். இது பின்னர் பசிபிக் பெருங்கடல் என்ற பெயரைப் பெற்றது.
- 1690 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்திப்பத்திரிகை (Publick Occurrences Both Foreign and Domestick) முதலும் கடைசித் தடவையாகவும் வெளிவந்தது. இது அரசினால் தடை செய்யப்பட்டது.
- 1789 - ஐக்கிய அமெரிக்க சட்டமன்றம் அமெரிக்க அரசியலமைப்பிற்கு உரிமைகளுக்கான 10 திருத்தங்கள் உட்பட 12 திருத்தங்களைக் கொண்டு வந்தது.
- 1846 - ஐக்கிய அமெரிக்கப் படைகள் சாச்செரி 'டெய்லர் தலைமையில் மெக்சிக்கோவின் மொண்டெரே நகரைக் கைப்பற்றினர்.
- 1906 - கரையிலிருந்து படகை வழி நடத்தும் முறை ஜஜஎசுப்பானியாஸவில் இயக்கிக் காட்டப்பட்டது. தொலைக் கட்டுப்படுத்தி பயன்படுத்தப்பட்டது இதுவே முதல் முறையாகும்.
- 1926 - அடிமை வணிகத்தைத் தடுக்கும் பன்னாட்டு ஒப்பந்தம் உலக நாடுகள் அணியின் ஆதரவில் கையெழுத்திடப்பட்டது.
- 1956 - அத்திலாந்திக் பெருங்கடலைக் கடந்த முதலாவது தொலைபேசிக் கம்பித்திட்டம் வுயுவு-1 நிறுவப்பட்டது.
- 1957 - ஐக்கிய அமெரிக்காவில் ஆர்கன்சஸ் மாநிலத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 9 கருப்பின மாணவர்கள் 300 இராணுவத்தினர்களின் பாதுகாப்புடன் பாடசாலை சென்றனர்.
- 1959 - இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா சோமராம தேரர் என்ற புத்த பிக்கு ஒருவரினால் சுடப்பட்டுப் படுகாயமடைந்து அடுத்த நாள் இறந்தார்.
- 1962 - அல்ஜீரிய மக்கள் சனநாயகக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1964 - மொசாம்பிக்கில் போர்த்துகலுக்கு எதிரான விடுதலைப் போர் ஆரம்பமானது.
- 1978 - கலிபோர்னியாவில் சான் டியாகோ நகரில் இரண்டு விமானங்கள் மோதிக் கொண்டதில் 144 பயணிகள் கொல்லப்பட்டனர்.
- 1981 - பெலீசு ஐக்கிய நாடுகள் அவையில் இணைந்தது.
- 1983 - வட அயர்லாந்தில் 38 ஐரியக் குடியரசு இராணுவக் கைதிகள் சிறையை உடைத்து தப்பினர்.
- 1992 - செவ்வாய்க் கோளை நோக்கிய "செவ்வாய் நோக்கி" என்ற விண்கலத்தை நாசா ஏவியது. 11 மாதங்களின் பின்னர் இவ்விண்கலம் செயலிழந்தது.
- 1992 - யாழ்ப்பாணம், பூநகரியில் 62 இராணுவக் காவலரண்கள் விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டன.
- 2002 - குஜராத் மாநிலத்தில் இந்துக் கோயில் ஒன்றில் இடம்பெற்ற வன்முறையில் 32 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

- 1644 - ஓலி ரோமர், தென்மார்க்கு வானியலாளர் . (இ. 1710)
- 1843 - செர்கேய் பாவ்லோவிச் கிளாசனாப், சோவியத் ஒன்றிய வானியலாளர்.(இ. 1937)
- 1857 - மூலம் திருநாள், திருவிதாங்கூர் மன்னர். (இ. 1924)
- 1881 - லு ஹ்சுன், சீன எழுத்தாளர் . (இ. 1936)
- 1899 - உடுமலை நாராயணகவி, தமிழகக் கவிஞர், பாடலாசிரியர். (இ. 1981)
- 1914 - தேவிலால், இந்திய அரசியல்வாதி. (இ. 2001)
- 1916 - தீனதயாள் உபாத்தியாயா, இந்தியப் பொருளியலாளர், சமூகவியலாளர். (இ. 1968)
- 1920 - சதீஷ் தவான், இந்தியப் பொறியியலாளர் . (இ. 2002)
- 1924 - அ. பூ. பர்தன், இந்திய இடதுசாரி அரசியல்வாதி. (இ. 2016)
- 1939 - பெரோசு கான், இந்திய நடிகர், இயக்குநர் . (இ. 2009)
- 1946 - பிசன் சிங் பேடி, இந்தியத் துடுப்பாளர்.
- 1952 - பெல் ஹூக்சு, அமெரிக்க எழுத்தாளர்.
- 1952 - கிறிஸ்டோபர் ரீவ், அமெரிக்க நடிகர், தயாரிப்பாளர் . (இ. 2004)
- 1968 - வில் சிமித், அமெரிக்க நடிகர், பாடகர்.
- 1977 - ஏ. ஆர். முருகதாஸ், தமிழகத் திரைப்பட இயக்குநர், திரைக்கதை ஆசிரியர், தயாரிப்பாளர்.

இறப்புகள்

- 1777 - லாம்பர்ட், சுவிசுக் கணிதவியலாளர், இயற்பியலாளர், வானியலாளர். (பி. 1728)
- 1978 - ருக்மணி தேவி, சிங்களத் திரைப்பட நடிகை . (பி. 1923)
- 2003 - எட்வர்டு செயித், பாலத்தீன-அமெரிக்க மெய்யியலாளர் . (பி. 1935)
- 2007 - ஜனா கிருஷ்ணமூர்த்தி, தமிழக அரசியல்வாதி . (பி. 1928)
- 2011 - வாங்காரி மாத்தாய், அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற கென்ய சூழலியலாளர். (பி. 1940)

சிறப்பு நாள்

- புரட்சி நாள் .(மொசாம்பிக்)
- தேசிய இளைஞர் நாள் .(ருவாண்டா)




| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 140 | 120 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 120 | 85 | 120 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 250 | 240 | 280 | 300 | 250 |
| தக்காளி | 200 | 100 | 120 | 140 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 80 | 80 | 60 | 80 |
| கோவா | 120 | 70 | 100 | 120 | 100 | 80 |
| கரட் | 200 | 100 | 160 | 140 | 150 | 70 |
| பூசணி | 30 | 35 | 40 | 40 | 60 | 30 |
| புடோல் | 100 | 60 | 100 | 80 | 80 | 70 |
| வாழைக்காய் | 100 | 70 | 100 | 80 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 180 | 140 | 250 | 240 | 250 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 140 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 400 | 250 | 300 | 300 | 400 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 50 | 60 | 100 | 60 |
| கருணைக் கிழங்கு | 150 | 70 | 100 | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 100 | 90 | 80 | 80 | 120 | 100 |
| லீக்ஸ் | 140 | 100 | 120 | 140 | 160 | 120 |
| பீற்றூட் | 40 | 40 | 60 | 40 | 80 | 60 |
| கறிமிளகாய் | 160 | 120 | 120 | 140 | 160 | 140 |
| முருங்கைக்காய் | 160 | 350 | 160 | 150 | 120 | 200 |
| போஞ்சி | 250 | 160 | 160 | 180 | 200 | 150 |
| கத்தரிதம்புள்ள | 100 | 140 | 100 | 120 | 120 | 120 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 40 | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 200 | 250 | 300 | 280 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 70 | 90 | 75 | 60-80 | 70 |
| இராசவள்ளி | 500 | 180 | — | — | 400 | 300 |
| வெங்காயப்பூ | 160 | 120 | 200 | 200 | 200 | — |
| முள்ளங்கி | 100 | 35 | 80 | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 20 | 20 | 15 |
| [illegible] | 40 | 20 | 60 | 50 | 60 | 70 |

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.
- கோன்பு தசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களே உங்கள் கருத்துக்கள் என்ன?

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அன்பு வணக்கம். அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் இடைக்கால வரைபு வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பலவாறு பேசிக் கொள்கின்றனர். அதில் தமிழ் அரசியல் தலைமை தமிழர்களை விற்றுவிட்டது என்பதும் ஒன்று.

இதுபற்றி நீங்கள் அறிந்திருப்பீர்களோ தெரியவில்லை. இருந்தும் அதனைத் தெரிவிப்பது ஓர் ஊடகத்தின் கடமை என்ற வகையில் உங்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

எதுஎவ்வாறாக இருப்பினும் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் இடைக்கால வரைபு வெளிவந்திருக்கக்கூடிய இக்காலசூழ்நிலை மிகவும் முக்கியமானது என்பதை நீங்கள் மறுதலிக்க மாட்டீர்கள் என நம்புகின்றோம்.

இடைக்கால வரைபு தமிழ் மக்களுக்கு ஒரு பெரும் வரப்பிரசாதம் என்பது போல கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அவர்கள் கூறுகின்றார்.

பரவாயில்லை அவர் கூறுவது போல வரப்பிரசாதமாக இருந்தால் அதனை இருகரம் நீட்டிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஆனால் இடைக்கால வரைபில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் ஏதேனும் இருப்பதாக தெரியவில்லை என்பது தமிழ்ப் புத்திஜீவிகளின் கருத்துக்களாக இருக்கிறது. எனினும் இதனை ஆதாரபூர்வமாக நிரூபிப்பதுதான் நியாயமானது.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் வரைபு ஒன்று வெளியாகி இருக்கும் போது அதில் தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய சாதக பாதகங்களை ஆய்ந்தறிந்து தர்க்கரீதியில் கருத்துக்களை முன்வைப்பதே பொருத்துடையது என்பதால்,

அதனைச் செய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பு தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய உங்களுக்கும் உரியது என்பதை நீங்கள் நிராகரிக்க மாட்டீர்கள்.

இடைக்கால வரைபு தொடர்பில் உங்கள் கட்சித் தலைமைகள் கொண்டிருக்கக்கூடிய அபிப்பிராயங்களும் நீங்கள் கொண்டுள்ள அபிப்பிராயங்களும் வேறுபட்டதாக இருக்கலாம்.

கருத்துக்களைக் கூறி கட்சித் தலைமையின் கோபத்துக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வதே புத்திசாலித்தனம் என்று நீங்கள் கருதி மௌனமாக இருந்தால், அது தமிழ் மக்களுக்கு நீங்கள் செய்யும் மிகப்பெரும் பாவச் செயலாகும்.

ஆகையால், கௌரவத்துக்குரிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களே! வெளியாகி இருக்கும் இடைக்கால வரைபு தமிழ் மக்களுக்கு உரிமை தருமா? எங்கள் மக்கள் பட்ட துன்பங்களுக்கு முடிவு கட்டப்படுமா? எங்கள் வருங்காலச் சந்ததியினர் இந்த நாட்டில் நிம்மதியாக வாழ்வதற்கு அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் இடைக்கால வரைபு உறுதி செய்யுமா? என்பது பற்றிய உங்களின் கருத்துக்களை மக்களிடம் முன்வையுங்கள்.

யார் எதைக் கூறினாலும் அதைப் பற்றி கவலை கொள்ளாதீர்கள். தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகள் இழப்புக்களை அறிந்தவர்கள் நீங்கள்.

ஆகையால் உங்கள் மனச்சாட்சிக்கு அமைவாக உங்கள் கருத்துக்களைத் தெரியப்படுத்துங்கள்.

# நவராத்திரி பாமாலை

செல்வத்திற்கு இன்று இரண்டாம் நாள்



### லக்ஷ்மி பதம் போற்றுவோம்

வாழ்வு தரும் செல்வங்கள்- அனைத்தும்
லக்ஷ்மியால் கிடைத்தவையே
தேடிவரும் செல்வங்கள்- எல்லாம்
திருமகளால் கிடைத்தவையே
செந்தாமரையில் வாழும் திருச்செல்வியே
கொட்டிலில் இருந்த என்னை
கோபுரத்தில் ஏற்றிவைத்தாய்
கோலங்கள் மாறாமல்
வறுமை தன்னை நீக்கிவிட்டாய்
பாடித்துதித்திடுவோம் பரவசத்தில்
ஆடிடுவோம் செந்தாமரையில்
அர்ச்சனை செய்திடுவோம்

பா.கலாதேவி
யா/ சண்டிலிப்பாய்
இந்துக் கல்லூரி

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### பெற்றோர் வழிபாடு

முன்னோர் வழிபாட்டை முடித்த பிறகு பெற்றோர் வழிபாட்டை செய்தல் வேண்டும். காப்பு கட்டிய பிறகு பெற்றோர்வழிபாட்டை ஒரு சிலர் செய்வர். இம்முறை தமிழ் திருமண முறையில் இருந்து மாறு பட்டதாகும்.

### பாதபூஜை

பெற்றோர்களுக்கு மணமக்கள் பாதபூஜை செய்யும் பொழுது தாம்பாளத்தில் பெற்றோர்கள் நின்று கொண்டு தடுமாறிக் கொண்டு இருப்பர். மண மக்களை வாழ்த்தும் பொழுது பெற்றோர்கள் எவ்வித மனசஞ்சலத்துடனும் இருத்தல் கூடாது. நாற்காலியில் அமர்ந்து நிதானமாக பாதபூஜையை ஏற்றுக்கொண்டு மணமக்களை ஆசீர்வதிக்க வேண்டும்.

### பாதபூஜையை யார் முதலில் செய்வது?

பாதபூஜையை யார் முதலில் செய்வது என்ற குழப்பம் ஏற்பட்டு மணமகன்தான் செய்யவேண்டும் என்பர். பெற்றோரை விட்டு பிரிபவள் பெண். ஆகவே பெண்தான் முதலில் அவள் பெற்றோருக்கு பாதபூஜை செய்ய வேண்டும். (தொடரும்)

## நவராத்திரி வழிபாட்டு முறைகள்

### ஏழாம் நாள்

| | |
|---|---|
| கோலம்போடும் பொருள் | மலர் |
| கோலவகை | திட்டாணி |
| அபிஷேகத்திற்குரிய திரவியம் | நலங்குமஞ்சள் |
| திலகம் இடப்படும் திரவியம் | சாந்து |
| ராகம் | பிலகரி |
| இசைக்கப்படும் வாத்தியம் | படகவாத்தியம் |
| கனிகள் | பேரீந்து |
| நிவேதனங்கள் | எலுமிச்சம்பழச்சாதம் |
| மலர்கள் | தாளம்பூ |
| இலைகள் | தும்பை இலை |

தொகுப்பு:- சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் (வீணாகான குருபீடம்)

## திலீபன் நினைவேந்தல் வேண்டுகோள்

தியாகி திலீபனின் 30ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதிநாள் நிகழ்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அஞ்சலிநிகழ்வுகள்நாளை முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமாகும். இந்நிகழ்வில் பொதுமக்கள், அரச, அரச சார்பற்ற தனியார் துறை சார்ந்தவர்கள் மற்றும் பொது அமைப்புக்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைப்பு விடுக்கின்றோம் என நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு கேட்டுள்ளது. (மு)

## வரிச் சலுகை

புதிய வரி முறையின் கீழ், உள்ளூர்கலைஞர்களின்படைப்புக்களுக்கு கிடைக்கும் இலாபத்தில் வருடாந்தம் சுமார் 500,000 ரூபா வரை விலக்குப் பெற்றுக் கொள்ள முடியும் என நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (இ-3)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

ஸ்ரீநிவாசனின் சிந்தையில் செல்வி பத்மாவதியே நிறைந்திருந்தாள்.

அதனால் தோழியரின் உருட்டலையும் மிரட்டலையும் விரட்டலையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் பத்மாவதியை நோக்கி மேலும் மேலும் பாதங்களை எடுத்து வைத்தான்.

இதற்குள் இன்னொரு தோழி விரைந்து சென்று அந்தப்புர நந்தவனத்தில் அந்நியன் ஒருவன் அடியெடுத்து வைத்துவிட்டான் என்ற செய்தியை அரண்மனைக் காவலனிடம் சொல்ல, அவன் அரசனிடம் தெரிவித்தான்.

ஆகாசராஜனின் புருவங்கள் நெறித்தன. கோபம் அவன் குருதி ஓட்டத்தை மிகைப்படுத்தியது.

அரியணையிலிருந்து எழுந்தான். அரைவாளை உருவினான்.

அந்தப்புர நந்தவனத்தில் அடியெடுத்து வைத்த ஆடவன் யாராக இருப்பினும் அவனைக் கண்டதுண்டமாக வெட்டிப்போடும் ஆவேசத்துடன் ஐந்நூறு வீரர்கள் புடைசூழப் புறப்பட்டு பூஞ்சோலையை வந்தடைந்தான். (தொடரும்)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## கவலை ஒழித்தல்



தவறான கணிப்பால் ஏற்படுகின்ற ஒரு மன நோய் தான் கவலை. நிகழ்ச்சிகளுடனோ அல்லது பொருள்களுடனோ எந்தத் தொடர்பும் இல்லாமல் மனதுடன் தொடர்பு கொண்டுள்ளது கவலை. மனம் பிரச்சினைகளை அறிந்து கொள்ள முடியாமல் போனால், பிரச்சினைகளை முடிக்க முடியவில்லை எனில், அந்தப் பிரச்சனைகளை எதிர் கொள்ள முடியாவிட்டால் கவலையின் பிடியில் சிக்கிக் கொள்கின்றது. தேவைக்கும், இருப்புக்கும் இடையே இடைவெளி, எதிர்பார்ப்புக்கும் பெறுவதற்கும் இடையே இடைவெளி, தனக்கும் பிறர்க்கும் இடையே ஏற்படும் முரண்பாடு, ஆசைக்கும் திறமைக்கும் இடையே உள்ள வித்தியாசம். இவை யாவும் கவலைக்கு வித்தாகின்றன. மனதைக் கடமையில் செலுத்தி இடையறாத முயற்சியுடன், முறையான திட்டத்துடன் செயற்பட்டால் இவை அனைத்தையும் சரி செய்ய முடியும்.

ஏதாவது ஒரு நேரத்தில் ஏதாவது பிரச்சினைகள் ஒவ்வொருவருக்கும் தோன்றும். அவை வந்து கொண்டும் போய்க் கொண்டும் தான் இருக்கும். பிரச்சினைகளைக் கண்டு பயந்துவிடக் கூடாது. வாழ்க்கையின் ஒரு பகுதி தான் பிரச்சினை. கடந்த காலத்தில் உங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள், அவை எவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டன என்பதை எண்ணிப் பாருங்கள். அதே போன்று தற்பொழுது தோன்றியுள்ள பிரச்சினையும் காலத்தில் அவ்வாறே தீர்க்கப்பட்டு விடும்.

பிரச்சினையைப் பற்றிக் கவலைப்படுவதை விட்டுவிட்டுத் தைரியமாக அவற்றைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். பிரச்சனைக்குத் தீர்வு உடனே கிடைக்காவிட்டால் இயற்கைக்கு விட்டுவிடுங்கள். சிறிது காலம் பொறுத்திருங்கள். சரியான நேரத்தில் சரியான தீர்வு தானாகவே கிடைத்து விடும். இங்கு இயற்கைச் சட்டத்தை நீங்கள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் தான் எந்த ஒரு பிரச்சினையும் பெரியதாகத் தோன்றும். அதற்குத் தீர்வு அதனுள் இருக்கிறது. அது தவறாமல் கிடைத்துவிடும். இதற்கென நாம் ஓர் வழிமுறையை ஏற்படுத்திக் கொண்டு சரியாக அதைக் கடைபிடித்து வந்தால் அனைத்து பிரச்சினைகளுக்கும் எளிதில் தீர்வு பெற்று விடலாம். அதனால், மனதின் சுமையும் நீங்கிவிடும்.

# வடக்கு உதைபந்தாட்ட அணி 3ஆம் இடத்தை தனதாக்கியது



தேசிய உதைபந்தாட்டத்தின் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் சமனிலை தவிர்ப்பு உதை முடிவில் வெற்றி பெற்றது வடக்கு மாகாண தெரிவு அணி.

மாத்தறையில் இடம்பெற்று வரும் தேசிய உதைபந்தாட்ட போட்டியில் தென் மாகாண தெரிவு அணி மற்றும் வடக்கு மாகாண தெரிவு அணிகள் மோதின. ஆட்ட நேரமுடிவில் போட்டி 2-2 என சமனிலையில் முடிவுற்றதால் சமனிலை தவிர்ப்பு உதை முடிவில் வடக்கு தெரிவு அணி 5-4 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கியது

வடக்கு சார்பில் பிறேம்குமார் மற்றும் பியூசல் தலா ஒவ்வொரு கோல்களை தமது அணிக்காக பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு அணித்தலைவர் ஆக பிறேம்குமார் செயற்பட்டதுடன் வடக்கு சார்பில் அதிக கோல்களை பெற்றுக்கொடுத்ததும் சிறப்பாகும்.

2017 தேசிய ரீதியான போட்டியில் சிறப்பாக செயற்பட்ட வடக்கு அணி காலிறுதி,அரையிறுதி மற்றும் 3ஆம் இடத்திற்கான ஆட்டங்களில் போட்டி முடிவை சமனிலை தவிர்ப்பு உதை முடிவு வரை இட்டுச் சென்றமையும் சிறப்பாகும் என்பதுடன் 2015 இலும் வடக்கு அணி 3 ஆம் இடத்தை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# சமநிலை தவிர்ப்பு உதையில் செந்தமிழ் வி.கழகம் வெற்றி





கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் 23.09.2017 அன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியாக உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் 1-1 என்ற கோல் கணக்கில் போட்டி முடிவடைய சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

சமநிலை தவிர்ப்பு உதையில் 3-2 என்ற கோல் கணக்கில் செந்தமிழ் விளையாட்டுக்கழகத்தினர் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக. செந்தமிழ் விளையாட்டுக் கழக வீரன் மயூரன் தெரிவாகியுள்ளார்.(க)

# சென்.பிலிப்பினேரிஸ் வி.கழகம் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது





கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் 23.09. 2017 அன்று நடைபெற்ற மூன்றாவது போட்டியாக கல்லாறு கடல் மீன் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து செம்பியன்பற்று சென்.பிலிப்பினேரீஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் சென்.பிலிப்பினேரீஸ் விளையாட்டுக் கழகத்தினர் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக சென்.பிலிப்பினேரீஸ் விளையாட்டுக் கழக வீரன் அயன் தெரிவாகியுள்ளார். (க)

# சக்திவேல் வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி






கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் 23.09. 2017 அன்று நடைபெற்ற முதலாவது போட்டியாக கட்டைக்காடு சென். மேரீஸ் A விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழகம் மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் 2-0 என்ற கோல் கணக்கில் சென். மேரீஸ் விளையாட்டுக் கழகத்தினர் வெற்றி பெற்றுள்ளனர். போட்டியின் ஆட்ட நாயகனாக. சென்.மேரீஸ் விளையாட்டுக் கழக வீரன் கஸ்ரோ தெரிவாகியுள்ளார். (க)

# 29 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா -2017

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 29 ஆவது விளையாட்டு விழா செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை அநுராதபுரம் பொது விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இவ் நிகழ்விற்காக யாழ். மாவட்டத்தில் இருந்து 142 இளைஞர், யுவதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் தேசிய மட்டத்திலான உதைபந்தாட்டம் மற்றும் பெண்களுக்கான கபடிப்போட்டியில் யாழ். மாவட்ட அணிகள் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன.

இவ் இரண்டு போட்டிக்கும் யாழ் மாவட்ட அணியை எதிர்த்து மட்டக்களப்பு மாவட்ட அணிகள் மோதவுள்ளன.

இந் நிகழ்வில் கலந்து கொள்ளும் இளைஞர், யுவதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் எதிர்வரும் 27.09.2017 ஆம் திகதி அநுராதபுரம் செல்லவுள்ளனர். (க)

## இலங்கையின்...

இலங்கை கிரிக்கெட் அணி மீதான சூதாட்ட புகார் குறித்து சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) விசாரணையை தொடக்கி உள்ளது. சர்வதேச கிரிக்கெட் சபையின் லஞ்ச ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் அண்மையில் இலங்கைக்கு வந்து முதற்கட்ட விசாரணைய்யை நடத்தி முடித்துள்ளனர். இலங்கை கிரிக்கெட்டில் முறைகேடுகள் நடந்துள்ளது என்பதற்கு தேவையான ஆதாரங்கள் இந்த விசாரணையில் கிடைத்துள்ளதாக ஐ.சி.சி பொதுமேலாளர் அலெக்ஸ் மார்ஷல் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஆட்டக்காரரும் தேர்வுக் குழு உறுப்பினருமான விக்கிரமசிங்க கூறிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இலங்கை கிரிக்கெட் சபையும் விசாரணை நடத்துகிறது. கிரிக்கெட் வீரர்கள் 40 பேர் இந்த விசாரணை வளையத்திற்குள் உள்ளதாக தெரிகிறது. இந்தியாவிடம் படுதோல்வி அடைவதற்கு முன்னர் சிம்பாப்வே அணிக்கு எதிரான போட்டியிலும் இலங்கை அணி பரிதாபமான தோல்விய்யை தழுவியது. இதன் பின்னணியில் சூதாட்டம் உள்ளதா என்ற கோணத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது. இதனிடையே விக்ரமசிங்கவின் புகார் தங்களுக்கு அதிர்ச்சி அளிப்பதாக அணித் தலைவர் தினேஷ் சண்டிமல், உபுல் தரங்க ஆகியோர் தெரிவித்துள்ளனர். (மு)

## தீர்வைத் தர அரசு...

நாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற அக்கினிச்சிறகுகள் அமைப்பின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் சமூகத்திற்குள் உள்ள ஒற்றுமை போன்று எங்கள் சமூகத்திற்குள் வரவில்லை என்பது வெட்கப்படும் விடயமாக காணப்படுகின்றது. இன்று எமது முன்னாள் போராளிகளை கணக்கெடுக்காத நிலைமை எமது சமூகத்திற்குள் காணப்படுகின்றது.

நாடாளுமன்றத்தில் அரசியல் அமைப்பு திருத்தம் தொடர்பாக மூன்று நாட்களிற்கு விவாதம் நடைபெறவுள்ளது. இவ் விவாதத்திலே எங்களது தரப்பிலே என்ன நியாயத்தை பெறவேண்டும் என்பதுதான் பிரதானமாகும். ஆலோசனையின் அடிப்படையிலே தீர்மானித்தற்கு வரமுடியாது. இப்பொழுது இருக்கின்ற ஆலோசனை எந்தளவிற்கு ஆலோசனை கொடுப்பவர்கள் இனம், கொள்கை சார்ந்து செயற்பட ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள் என்பதுதான் முக்கியம்.

இந்த விடயங்கள் எங்களுடைய கொள்கைக்கு மாற்றாக இருக்குமாயின் இந்த மூன்று நாள் விவாதத்திலே சரியான விவாதத்தை செயற்படுத்தி எங்களது கொள்கையை நிலை நாட்டுவதோடு அதை கொண்டு வருவதற்காக முயற்சிக்க வேண்டும்.

எங்களுடைய அரசியல் தீர்விற்கு ஏற்ற வகையில் அரசியல் அமைப்பிற்கான ஆலோசனையை வழங்கி எமக்கு ஏற்றதை போன்று மாற்றங்கள் எங்களது இனப்பிரச்சினைக்கு சாதகமாக வரவேண்டும் என்பதனை நாங்கள் கவனமாக எங்களது கருத்துக்களை சொல்லி நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும்.

ஆகவே யாரும் கொள்கையை விட்டுச் செல்லவில்லை. வடக்கு கிழக்கு இணைப்பு, சமஷ்டி போன்ற முக்கிய விடயங்கள் அதில் இல்லையெனின் அதை தர அரசு மறுக்குமாயின், நாம் அனைவரும் சர்வதேசத்திடம் நியாயத்தை கேட்கின்ற நிலை நிச்சயமாக உருவாகும் எனத் தெரிவித்தார். (மு-281)

## தொடர்ந்து போராடு...

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அவரின் பதில்கள் வருமாறு.

கேள்வி:-உத்தேச அரசியலமைப்பு திருத்தத்துக்கான இடைக்கால அறிக்கை வெளிவந்துள்ள நிலையில் தமிழர் தரப்பிலிருந்து பரவலான அதிருப்தியும் எதிர்ப்பும் கிளம்பியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இது தொடர்பில் தங்களது நிலைப்பாடு என்ன?

பதில்-முழுமையாக குறித்த ஆவணத்தைப் பரிசீலிக்க எனக்கு நேரம் போதவில்லை. மருத்துவமனைக்குச் செல்லும் தறுவாயில் எனது மேலெழுந்த கருத்துக்களை வெளியிட விரும்புகின்றேன்.

**எனது அவதானம் பின்வருமாறு-**

ஒருவர் நோயுற்றிருந்தால் அவரின் அந்த நோய் என்னவென்று முதலில் அறிந்துகொள்ள வேண்டும். அதன்பின் அந்த நோய்க்கு எவ்வாறான சிகிச்சை அளிக்கவேண்டும் என்று ஆராயவேண்டும். அந்த ஆராய்வின் முடிவில் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டு நோயைத் தீர்க்க முயற்சிக்கவேண்டும்.

நாம் இப்போது எமது நோயைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதே எனது கருத்து. நோயைப் புரிந்துகொள்ளாது சிகிச்சையில் நாம் ஈடுபட்டுள்ளோம் என்பதே எனது அவதானம்.

இடைக்கால அறிக்கைநோயை அறிந்ததாகவோ, தீர்க்கப் போதுமானதாகவோ தென்படவில்லை. நோயை அறியாத சிகிச்சை தோல்வியில் முடியும்.

இடைக்கால அறிக்கை தமிழர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தும் என்பது திண்ணம். சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை உறுதிப்படுத்துவதாகவே குறித்த அறிக்கை உள்ளது. எதனைப் புறக்கணித்து நாம் எழுபது வருடங்களுக்கு மேலாகப் போராடிவந்தோமோ அதனை வலியுறுத்துவதாகவே அறிக்கை அமைந்துள்ளது. அதனால்தான் நான் கூறினேன் நோயை அறியாமல் மருந்து பற்றி சம்பாஷணைகள் நடந்துள்ளன என்று. நோய் என்று நான் குறிப்பிடுவது எமக்கு இனப் பிரச்சினை ஏற்படுத்துவதற்கு முக்கிய காரணமாக இருந்ததையே. சிங்களத் தலைவர்கள் அரசியல் அதிகாரத்தைத் தம் வசம் எடுத்துக் கொண்டு தாம் செய்ததே சரியென்ற அடிப்படையில் இதுவரை காலமும் நடந்து கொண்டதே எமது அரசியல் நோய்க்கு மூல காரணம்.

குறித்த தலைவர்களின் இது வரையிலான செயற்பாடும் நோக்கும் கண்டிக்கப்பட்டு அதற்கான மாற்றத்தினை நாம் முன் வைக்க முன்வரவேண்டும். அப்போதுதான் நோய்க்கு நாம் பரிகாரம் தேடலாம்.

ஒற்றை ஆட்சியினை நிராகரித்து தமக்குரிய அரசியல் தீர்வாக சமஷ்டிக் கோரிக்கையினை தமிழர்கள் முன்வைத்துள்ள நிலையில் தொடர்ந்தும் ஒற்றை ஆட்சிமுறைமையினை தக்கவைக்கும் பொருட்டு வார்த்தைப் பிரயோகங்களில் ஏமாற்ற முற்பட்டுள்ளமை அருவருப்பை ஏற்படுத்துகின்றது. ஒருநாட்டினுடைய ஆட்சிக் கட்டமைப்பினை குறிக்கப் பயன்படுத்தப்படும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒரு பொருத்தமான வார்த்தையினைப் பயன்படுத்தாது ஏகியரட என்கின்ற சிங்கள சொற்பதத்தினை பயன்படுத்தியிருக்கின்றார்கள். "எக்சத்" என்ற பதத்தைப் பாவிக்காது "ஏகியரட" என்று கூறியமை அறிக்கை ஆக்கியோரின் கபடத் தனத்தை வெளிக்காட்டுகின்றன. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரம் பகிரப்படவேண்டும் என்கின்ற தமிழ் மக்களின் கோரிக்கை இவ் இடைக்கால அறிக்கையில் முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளதாகவே கருதமுடியும்.

கேள்வி:தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்தவாறு வடக்கு கிழக்கு இணைப்பு பற்றியும் ஐக்கிய இலங்கை மாகாணங்களின் ஒன்றிணைப்பு பற்றியும் பின்னிணைப்பில் வலியுறுத்தியுள்ளதே அது பற்றிதாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:அறிக்கையின் ஆங்கிலப் பிரதியினைப் பார்த்தீர்களானால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஏறத்தாழ 70 வருடங்களாக தமது உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருக்கும் எமது இனத்தின் கோரிக்கைகளை வெறும் ஒன்றேகால் பக்கத்துக்குள் அடக்கியிருக்கின்றது என்பது தெரியவருகின்றது. வேறு அறிக்கைகளைக் குறிப்பிட்டுள்ளதே தவிர திடமாகத் தமக்கு வேண்டியவற்றைக் கூறத் தவறியுள்ளது. வடமாகாணசபையும் தமிழ் மக்கள் பேரவையும் போதுமான விபரங்களுடன் தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தன.

மத்திய அரசுக்கும் மாநிலத்துக்கும் இடையில் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் எனக் கூறப்படுகின்றதே தவிர என்னென்ன அதிகாரங்கள் மாநிலத்துக்கு ஒதுக்கப்படவேண்டும் என்பன பரிந்துரை செய்யப்படவில்லை. ஒட்டுமொத்தத்தில் இவ் இடைக்கால அறிக்கையானது தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பான பயணத்தினை பின்னோக்கி நகர்த்தியுள்ளதாகவே கருதலாம்.

கேள்வி:இவ் இடைக்கால அறிக்கைக்கு நீங்கள் ஆதரவு வழங்குவீர்களா?

பதில்:-நோய்க்கு மருந்து கொடுக்காவிட்டால் நோய் தீராது. தொடரப் போகும் நோய்க்கு ஆதரவு வழங்கச் சொல்கிறீர்களா? அரைகுறைத் தீர்வு ஒருபோதும் நோய்க்கு மருந்தாகாது. தொடர்ந்து போராடவேண்டிய நிர்ப்பந்தத்தையே இந்த இடைக்கால அறிக்கை எமக்கு நல்கியுள்ளது என்றார் முதலமைச்சர்.(மு)

## நாயகராவில்...

ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள அமெரிக்காவில் நியூயோர்க் நகருக்குச் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐ.நா கூட்டத்தொடர் மற்றும் அது சார்ந்த சந்திப்புக்களின் இடையில் நியூயோர்க்கில் உள்ள நாயகரா நீர்வீழ்ச்சியின் அழகையும் கண்டு ரசித்துள்ளார். (மு)

## பௌத்தத்துக்கு...

வீட்டுத் தொகுதியை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழ் கட்சிகள் முதன் முறையாக தமது பாரம்பரிய நிலைப்பாட்டை தளர்த்தியுள்ளன. அரசியலமைப்பு வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையின் மூலம் இந்நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வைத் தேடிக்கொள்ள முடிந்துள்ளது.

அரசியல் பிரச்சினையின் காரணமாகவே வடக்கில் போர் மூண்டது. போருக்கு பின்பும் கூட அதைத் தீர்த்துக்கொள்ள எமக்கு சந்தர்ப்பம் காணப்படவில்லை. அன்று தெற்கின் கட்சிகளும், சிங்கள, முஸ்லிம் மக்களும் இலங்கை ஒரு தேசமாக இருக்க வேண்டும் என பேசிவந்தார்கள். இந்நாட்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி முறையொன்று தேவை யென தமிழ் கட்சிகள் தெரிவித்தன. போருக்கு பின்பும் இக்கருத்து நிலை காணப்பட்டது. இந் நிலைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கவே நாம் செயற்பட்டோம். தற்பொழுது எமக்கு அதற்கான தீர்வும் கிடைத்துள்ளது.

அரசியலமைப்புச் சபை வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையில் அத்தீர்வை பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது. பிரதான கட்சிகள் இரண்டும் இவ் இடைக்கால அறிக்கையின் முதற் பந்தியில் உள்ள பரிந்துரைகளுக் கமைய உரிய அதிகாரப் பகிர்வுக்கு பாராளுமன்றத்திற்கு மேலதிகமாக செனட் சபையொன்றை உருவாக்குதல், மனித உரிமை முறையொன்றை தாபித்தல், சுயாதீனமான நீதித் துறையை உருவாக்குதல், யுத்தத்தில் இடம்பெயர்ந்தவர்களை மீள் குடியமர்த்தல், ஒரு தேசத்தை கட்டியெழுப்புதல் மற்றும் பௌத்த சமயத்திற்கு முன்னுரிமையளித்தல் போன்ற விடயங்களை கருத்திற் கொள்ளத் தயார் என தமிழ் கட்சிகள் தெரிவித்துள்ளன.

இதற்கு முன்னர் எப்போதுமே இவ்வாறான தொரு கருத்தை இக்கட்சிகள் தெரிவித்திருக்கவில்லை. இதற்கு முன்னர் சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இழுபறி நிலையில் இருக்கும் போது தமிழ் கட்சிகளும் ஒரு பக்கத்தில் ஸ்தம்பிதமடைந்திருந்தன. தற்பொழுது நாமும் உங்களுடன் வரத் தயார் என அவர்கள் தெரிவித்துள்ளனர். 2015ஆம் ஆண்டு பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை வெற்றிபெறச் செய்ய அவர்கள் ஒத்துழைத்தார்கள் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (மு)

## இடைக்கால அறிக்கை...

மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை சம்பந்தமாக எமது உறுப்பினர்கள் பல்வேறு கேள்விகளை எழுப்பினார்கள். அந்த கேள்விகளுக்கு பதிலளிக்கப்பட்டு கூடிய விளக்கங்கள் வழங்கப்பட்டன. இந்த விடயம் சம்பந்தமாக நாங்கள் தொடர்ந்து பேசுவதற்கு முடிவை எடுத்திருக்கின்றோம். பின்னரும் எமது கட்சியின் மத்திய செயற்குழு இன்னுமொரு முறைகூடி இவ் விடயங்கள் தொடர்பில் பேச சில தீர்மானங்களை எடுக்க இருக்கின்றோம் என எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கல்முனை ஜெயா திருமண மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை.சேனாதிராசா, பொதுச்

(2ஆம் பக்கம் பார்க்க)


என்றும் மறவோம்



இசைக் கலைமாமணி
திருமதி
சாரதா பரஞ்சோதி
(யாழ்.பல்கலைக்கழக முன்னாள்
இசைத்துறை விரிவுரையாளர்)
தோற்றம்: 03.11.1965
அழிப்பு: 25.09.2007
ஆண்டுகள் 10
கடந்து போயினும்
எம் ஆழ் மனதில்
நீங்கள் புரிந்த
சமய சமூகப் பணிகளை
மறக்க முடியவில்லை
தங்க.முகுந்தன்
மூளாய்
(C-9743)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.எஸ்.கே.என்.
தவராஜா (J.P)
(ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.)

அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக ஓய்வுபெற்ற உதவிப் பதிவாளரும் சைவப் புலவரும் சோதிடருமான திரு.எஸ்.கே.என்.தவராஜா எமது பாடசாலை பழைய மாணவரும் பாடசாலை வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்படுபவருமான இவரை சீரும் சிறப்பும் பெற்று நீண்டகாலம் சேவையாற்ற கோண்டாவில் வல்லிபுர ஆழ்வார் அருள் புரிய வேண்டுமென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
பாடசாலை சமூகம்,
யா/கோண்டாவில் றோ.க.த.க பாடசாலை

## SB Travels and Tours Pvt Ltd

இல. 212 கஸ்தூரியார் வீதியில் இயங்கி வரும் SB Travels and Tours Pvt Ltd இப்போது விசேட விலைக் கழிவுகளுடனான விமான பயணச் சீட்டுக்களை வழங்குகின்றது. விசா விண்ணப்பப்படிவம் 150/= நிரப்பி தரப்படும். Budjet Airlinesல் மதுரை சென்னை ரூ.23500 இலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:
021 222 9555, 021 222 8555, 076 691 1080, 81, 076 691 1082, 83, 077 711 1228
(C-9717)


வழங்கும்... அரசியல் அமைப்பில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் குறிப்பிடும் போது "ஏகீய" என்ற சொல்லை ஆங்கிலப் பதிப்பிலும் பதிவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த அதிகாரப் பகிர்வு குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை. தற்போதைய அரசியல் அமைப்பிலும் கூட இல்லாத ஒரு புதிய அம்சம் சேர்க்கப்பட்டுள்ளது. மாகாணங்களுக்கு கொடுத்துள்ள அதிகாரத்தை வைத்து மாகாணம் நாட்டின் தேசிய நலனுக்கு எதிராக செயற்படுவதாக கண்டால், அந்த அதிகாரங்களை மீளவும் பெற முடியும் அல்லது மாகாண சபையையே கலைத்து விடவும் முடியும் எனவும் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண விளக்கம் அளித்துள்ளார். (மு)

## புதிய அரசியல் அமை...

நாட்டை சீரழிப்பதற்காக கொண்டுவரப்படவுள்ள புதிய அரசியல் அமைப்பை தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது. அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச இதனை தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்தார். அரசியல் அமைப்பை தோற்கடிக்க இலட்சக்கணக்கிலான மக்கள் வீதியில் இறங்கி போராட வேண்டும். அத்துடன் இதனை நாடாளுமன்றில் நிறைவேற்றுவதற்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (மு)


## FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு வகுப்புக்கள்
V. ஜெகன் (Trained in France- 2007)
2006 முதல் இன்றுவரை 1305 மாணவர்கள்.
40, பலாலி வீதி, இலுப்பையடி 0779 789 456 / 021 221 7781
181, பிரதான வீதி, நெல்லியடி 021 320 2973
திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் Grammar வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

## வேலைவாய்ப்பு

இலங்கையில் 22 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் எமது GMI Company யின் கிளைகளில் பணிபுரிய இதோ ஓர் அரிய சந்தர்ப்பம் (ஆண்கள், பெண்களுக்கு)
- நிர்வாக அதிகாரி
- அலுவலக உதவியாளர்
- செயல்திட்ட அதிகாரி
- மேற்பார்வையாளர்

மட்டுப்படுத்தப்பட்ட பதவி வெற்றிடங்களே உள்ளன. தகைமை O/L அல்லது A/L. பயிற்சியின் போது 16500/= - 22500/= வரையில் பெற்றுக்கொள்ளலாம். பயிற்சியின் பின்னர் 45000/=, EPF,ETF

தொடர்புகளுக்கு:
0779994807, 0766399954
(682)

## வேலையாட்கள் தேவை

- Shuttering work
- Tile work

தொடர்புகளுக்கு:
0212261400,
0702227222,
0702237223
HARI ENGINEERS & CONTRACTORS (PVT) LTD
(723)

புதியபிரிவுகள் ஆரம்பம்
வங்கியியல் கற்கைநெறிகள்
**Banking Courses**
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. O/L 6 Passes with 5 credits
கணக்காளர்கற்கைநெறிகள்
**Chartered courses**
Executive Level & Business level
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. A/L 3 Passes
Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
UK - 550/= (C-9678)
CANADA - 400/= மட்டுமே
V2 TRAVELS-0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS
UK-550/-Kg
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
0768226241
(C-9677)

அமெரிக்க லொட்டறி
விசா 2018
வருடந்தோறும் 55000 பேர் தெரிவு செய்யப்படும் அமெரிக்க லொட்டறி விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd
216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
18, பிரதான வீதி, நெல்லியடி.
(673) Hotline: 077 755 4528

கட்டார் முன்னணி போக்குவரத்து சேவை நிறுவனத்தில் சாரதி வெற்றிடங்கள்
Taxi Driver (300 Gun)



QR 1200 (49,200 இலங்கை ரூபா) + கமிஷன்
வயதெல்லை 21 – 45
Terms & Conditions
நேர்முகத் தேர்வு:
செப்டெம்பர் 28, வியாழக்கிழமை
உடன் பதிவுசெய்ய 0773616798
TGL Trans Gulf (Pvt) Ltd., 90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114426222
SIKARAM ACADEMY 175, 1ம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம். தொ.பே.: 021 - 222 00 11

9வது ஆண்டில் சிகரம்
அதிரடி கட்டணக் கழிவு 50% வரை
O/L உடன் மாதம் 25,000/- சம்பாதிக்க!
நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்
Dip. in Business / Tourism 9ம் அணி
Hotel Management
100% JOB GUARANTEED
Sunderland University - UK Pathway
FREE விசேட ஆங்கில வகுப்பு
அனுமதிகளுக்கு 077 3616 798 021 222 0011
SIKARAM ACADEMY SCHOOL of HOSPITALITY
175, 1ம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.

வாணி விழாவை முன்னிட்டு... உயர்தரத்தின் பின்னர்
IT மற்றும் ஆங்கிலத்திற்கு இலங்கையின் பிரபல்யம் பெற்ற இரட்டை டிப்ளோமா பாடநெறிகள்
DUAL DIPLOMA
Diploma in Information Technology + Diploma in English
புரட்டாதி 30 வரையிலான பதிவுகளுக்கு இலவச ESOFT T-Shirt வழங்கப்படும்!
ஏனைய டிப்ளோமா பாடநெறிகள்
- Diploma in Software Engineering
- Diploma in Web Engineering
- Diploma in Graphics Designing
- Diploma in Hardware & Networking
- Diploma in Business Management
- Diploma in Computerized Accounting
- Diploma in Hospitality Managemnet
- Diploma in Auto CAD



PEARSON
50%* வரையிலான கட்டணக்கழிவு
புதிய பிரிவுகள் 27.09.2017 காலை 9.00 மணி (புதன்கிழமை) 30.09.2017 காலை 9.00 மணி (சனிக்கிழமை)
பதிவுகளுக்கு: 0775 888 95 SMS செய்யுங்கள்
ESOFT METRO CAMPUS
NO.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 4142 Hotline: 077 309 9 308
021 7 572 572
(B-9727)

ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களின்
தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2018
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| | |
|---|---|
| யாழ்ப்பாணத்தில் | சாவகச்சேரியில் |
| அன்பொளி கல்வியகம், | அன்பொளி கல்வி நிலையம், |
| யாழ்.இந்துக் கல்லூரி வீதி, | தபாற்கந்தோர் வீதி, |
| யாழ்ப்பாணம். | சாவகச்சேரி. |

அனுமதிகளை 25.09.2017 திங்கட்கிழமையிலிருந்து 02.10.2017 திங்கட்கிழமை வரை பிற்பகல் 3.00 - 5.30 மணிவரை பெற்றுக் கொள்ளவும்.
குறிப்பு: பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.
"சின்ன விழி அசைத்து சிரித்து வரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வி மகிழ்வுடனே ஊட்டிடுவோம்"
- இயக்குநர்கள்
(C-9737)


இப்பத்திரிகை வலம்புரி அச்சகத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.